உ

கணபதி துணை

திருத்தணிகைக் கந்தப்பையர்

இயற்றிய

# தணிகாசல புராணம்

MAHAMAHOPADHYAYA DR. V. SWAMINATHA AIYAR LIBRARY MADRAS

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரால்

தாம் எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

ஸ்ரீமான் ராவ்பகதூர்

வடக்குப்பட்டு சு. செங்கல்வராய பிள்ளையவர்கள்

பொருளுதவியால்

சென்னை

'லிபர்ட்டி' அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

பிரமாதி ௵ சித்திரை ௴

Copyright Registered] 1939 [விலை அணா பத்து

# இப்புத்தகத்திலடங்கியவை

| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை .... .... .... | 5 |
| | தணிகாசல புராணம்-மூலமும் குறிப்புரையும் | ....க—கOஅ |
| 1. | கடவுள் வாழ்த்து .... .... .... | க |
| 2. | அவையடக்கம் .... .... .... | எ |
| 3. | சிறப்புப்பாயிரம் .... .... ... | எ |
| 4. | திருநாட்டுச் சிறப்பு .... .... .... | அ |
| 5. | திருநகரச் சிறப்பு .... .... .... | உO |
| 6. | நைமிசாரணியச் சிறப்பு .... .... | உரு |
| 7. | கல்லாரகிரி மான்மிய அத்தியாயம் .... .... | ௩ச |
| 8. | பிரமன் பேறுபெற்ற அத்தியாயம் ... .... | சரு |
| 9. | அகத்தியன் கல்லாரகிரி அடைந்த அத்தியாயம் .... | ருஅ |
| 10. | அகத்தியனுக்குச் சிவதன்மோத்தரம் உரைத்த அத்தியாயம் ... ... ... | சு௩ |
| 11. | தாரகனைக் கொன்ற அத்தியாயம் ... ... | எக |
| 12. | இந்திரன் நீலமலரால் அர்ச்சித்துத் தெய்வயானையும் வெள்ளானையும் கொடுத்த அத்தியாயம் ... | அரு |
| 13. | திருமால் பூசித்துச் சக்கரம்பெற்ற அத்தியாயம்... | கூக |
| 14. | சேடன் பூசித்துச் சற்சரம் நீங்கின அத்தியாயம் ... | கOO |

உ
கணபதிதுணை

# முகவுரை

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமும்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

—கந்தரலங்காரம்.

தணிகாசல மென்பது தொண்டை நாட்டிலுள்ள சுப்பிரமணிய ஸ்தலங்களுள் ஒன்று; செங்கல்வகிரி யெனவும், திருத்தணிகை யெனவும் வழங்கும். இங்கே உள்ள ஒரு குன்றின்மீது முருகக்கடவுள் ஞானசத்திதரர் என்னும் திருநாமத்தோடு எழுந்தருளி யிருக்கின்றனர். இப்பெருமான் விஷயமாகத் திருத்தணிகைப் புராணம், திருத்தணிகைத் திருவிருத்தம், திருத்தணிகைச் சந்நிதிமுறை முதலிய நூல்களும், வசன நூல்கள் சிலவும் அச்சிற் பதிப்பிக்கப்பெற்று வழங்கிவருகின்றன. வடமொழியில் ஸ்தல புராணம் முதலியன உண்டு.

தணிகாசல புராணமென்னும் இந்நூல் இதுகாறும் ஏட்டுச் சுவடியில் இருந்ததே யன்றி அச்சிற் பதிப்பிக்கப்பெற்று வெளிவரவில்லை. இதைத் திருத்தணிகைப் புராணச் சுருக்கமென்றும் கூறுவதுண்டு. இது திருத்தணிகைக் கந்தப்பைய ரென்னும் வீரசைவ வித்துவானால் இயற்றப்பெற்றது. கடவுள் வாழ்த்து முதல் சேடன் சற்சரம் நீங்கின அத்தியாயம் வரையில் 426 செய்யுட்களடங்கிய 14 உறுப்புக்களை உடையது.

கந்தப்பைய ரென்பவர் 18-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் திருத்தணிகையில் வாழ்ந்திருந்தவர். திருவாவடுதுறை யாதீன வித்துவானாகிய ஸ்ரீ சிவஞானமுனிவருடைய மாணாக்கரும் 'கவிராக்ஷஸர்' என்ற சிறப்புப்பெயர் பெற்றவருமாகிய ஸ்ரீ கச்சியப்ப முனிவருடைய மாணாக்கர்களுள் ஒருவர். பரம்பரையாகத் தமிழறிவிற் சிறந்திருந்த வீரசைவ குடும்பத்தில் உதித்தவர். இவருடைய பெயர் கந்தப்ப தேசிகரெனவும் வழங்கும்; இந்நூற் சிறப்புப்பாயிரம் "கந்தப்ப முனி" என்று கூறும்.

இவ்வாசிரியருடைய முன்னோர்கள் கல்வி யறிவிற் சிறந்திருந்தவாறே இவருடைய பின்னோரும் சிறந்திருந்தனர். இவருக்கு விசாகப் பெருமாளையர், சரவணப்பெருமாளையர் என்னும் இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். இருவரும் தம் தந்தையாரிடம் கல்வி பயின்றதோடு இராமாநுச கவிராய ரென்னும் சிறந்த வித்துவானிடத்திலும் தமிழ் பயின்றனர். இருவரும் தமிழில் பல நூல்களுக்கு உரையெழுதி வெளியிட்டிருக்கின்றனர். பஞ்ச லட்சண வசனம், பஞ்சலட்சண வினாவிடை என்பவற்றைத் தாமே எழுதியும் சில பழைய நூல்களைப் பதிப்பித்து முள்ளனர். இவர்களுள் விசாகப்பெருமாளையரென்பவர் அப்போது சென்னை மாகாணப் பள்ளிக்கூடம் (Provincial School) என்று வழங்கிய இராசதானிக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக இருந்து புகழ் பெற்றார்.

கந்தப்பையர் திருத்தணிகையில் இப்போது 'சீர்கருணீகர் மடம்' என்று வழங்கும் இடத்தில் வாழ்ந்து வந்தார். இவர் இந் நூலைத் தம்முடைய இளமைக் காலத்தில் இயற்றியிருத்தல் கூடும். கச்சியப்ப முனிவரால் இயற்றப்பெற்ற திருத்தணிகைப் புராணம் அவருடைய பன்னூலறிவையும் கம்பீரத்தையும் வெளிப்படுத்துகின்றது. இந்நூல் கந்தப்பையருடைய சுப்பிரமணிய பக்தியையும் இளமைக் காலத்துத் தமிழ்ப்பயிற்சியையும் விளக்குகின்றது. இவர் பாடிய திருத்தணிகைச் சந்நிதிமுறை இப் புராணத்திற்குப் பல வருஷங்களுக்குப் பிறகு இயற்றி யிருத்தல் கூடுமென்று தோற்றுகின்றது.

இந்த நூலுக்கு முதல்நூல் ஒரு வட நூலென்று,

"......வடமொழிக் கெதிரே யானும்
தீதிலாத் தமிழி னாலே செப்புறுந் தன்மை" (அவை. 2)

"வரமான வடமொழியில் விளங்கியிடுந் தணிகைவரை
மான்மி யத்தைத்
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
திரமான செந்தமிழாற் பத்தியிற்கந் தப்பமுனி
செப்பி னானே" (சிறப்புப்.)

என்னும் செய்யுட் பகுதிகள் அறிவிக்கின்றன. ஆயினும் அவ் வடநூல் இப்போது கிடைக்கவில்லை.

கச்சியப்ப முனிவர் இயற்றிய திருத்தணிகைப் புராணத்தி லுள்ள வரலாறுகளுக்கும் இதிற் கண்ட வரலாறுகளுக்கும் பல வகையில் வேறுபாடுண்டு. இந்நூலிற் கண்ட செய்திகள் சில அதில் இல்லை; அப்புராணத்திற் கண்ட வரலாறுகள் சில இதில் இல்லை. அன்றியும் இந்நூலின் போக்கை ஆராய்கையில் ஆசிரியர் பின்னும் சில பகுதிகள் இயற்றி யிருக்கக்கூடுமென்றும், இன்றேல் இயற்ற எண்ணியிருக்கக் கூடுமென்றும் தோற்றுகின்றது.

இப்புராணத்தின் நடை மிக எளியதாகவும் வடமொழிச் சொற்களும் தொடர்களும் விரவியதாகவும் உள்ளது. ஆசிரியர் தம்முடைய புலமையைக் காட்டுவதைக்காட்டிலும் பொருளை யுரைப்பதே பெரிதெனக் கருதி இதனை இயற்றினர் போலும். தலபுராணங்களிற் பெரும்பாலும் காணப்படும் அமைப்புக்கள் இதன்கண்ணும் அமைந்துள்ளன. மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றின் சிறப்புக்களையும், பூசித்தோர் செய்திகளையும், முருகக் கடவுளுடைய பெருமையையும் இந்நூலிலே பரக்கக் காணலாம்.

ஆசிரியர் தலசம்பந்தமாக இதன்கண் வெளிப்படுத்தியுள்ள செய்திகள் வருமாறு :—

**தலவிநாயகர்** :—(1) ஆவச் சகாய (ஆபத் ஸஹாய) விநாயகர், 1, 407 ; (2) செங்கழுநீர் விநாயகர், 5, 339.

**முருகக்கடவுள் திருநாமம்** :—ஞானசத்திதரர், 6.

**சிவபெருமான் திருநாமம்** :—குமாரலிங்கம், 407 ; வீரேசர், 180, 211, 217, 395.

**தலத்தின் திருநாமங்கள்** :—கணிகவெற்பு, 267 ; கந்தாசலம், 206, 219, 266 ; கல்லார வெற்பு, 109, 180 ; காவியங்கிரி, 375 ; குருகிரி, 380 ; சிபரிபூரணம், 179, 218, 400 ; செருத்தணிகாசலம் ; 369, நீலகிரி, 108·

**தீர்த்தங்கள்** :—இந்திர சுனை, 151, 338, 341 ; எழுமுனிவர் சுனை, 151 ; குமார தீர்த்தம், 230, 401; சரவண தீர்த்தம், 126 ; நந்தி நதி, 151, 209; நாகசுனை (அனந்தன் சுனை), 151, 409, 426; பிரமசுனை, 151, 202 ; விஷ்ணு தீர்த்தம், 134, 151, 352, 374, 377-8.

இவற்றுள் இந்திர சுனையில் காலை, உச்சி, மாலை யென்னும் மூன்று வேளைகளிலும் ஒவ்வொரு கருங்குவளை மலர் மலரு மென்று கந்த புராணம் முதலிய நூல்களும் இந்நூலும் கூறும். பல வருஷங்களுக்கு முன் வரையில் அச்சுனையில் அம்மலர் மலர்ந்து வந்ததாம். இப்பொழுது காணப்படவில்லை.

இடையிடையே வேறு சிவதலச் செய்திகளும், வேறு தீர்த்தச் செய்திகளும் இதில் வருகின்றன. அவை வருமாறு:—

தலங்கள் :—ஆலங்காடு, 87; இடைச்சுரம், 49; கடம்பாடவி, 87; கழுக்குன்றம், 49; காசி, 178; காஞ்சி, 55, 178; காளத்தி, 49, 55, 209; சம்புவனம், 87; பதரிகாச்சிரமம், 87; பருப்பதம், 208; பனங்காடு, 87; மறைக்காடு, 87; மாங்காடு, 87; விரிஞ்சை, 56; வேங்கடம், 49; வேய்வனம், 87; வேற்காடு, 87.

தீர்த்தங்கள் :—கம்பை, குசலை, சேயாறு, பொன்முகலி, மஞ்சணீர், வேகவதி.

இவ்வாசிரியர் முருகக்கடவுள்பால் உள்ள அன்போடு சிவபக்தியும் உடையவராதலின் சிவபெருமானே தேவர்களிற் சிறந்தோரென்றும் (111), அவரே மும்மூர்த்திகளாக இருந்து முத்தொழிலையும் இயற்றுகின்றனரென்றும் (38), நந்தியம்பெருமானுக்கு ஆகமம் உபதேசித்தருளின ரென்றும் (18), சிவபெருமானே பக்குவான்மாக்களுக்கு உபதேசம் செய்யும்பொருட்டுக் குருமூர்த்தியாக எழுந்தருளுவா ரென்றும் (21) கூறினர். நைமிசாரணிய முனிவரைப்பற்றிச் சொல்லுமிடத்தில், அவர்கள் இறைவனது ஸ்ரீ பஞ்சாட்சர முதலியவற்றை ஜபம் செய்பவர்களென்று உரைத்தனர் (94.) சைவ சமய ஆசிரியர்களாகிய தமிழ் வேந்தர் நால்வரையும் (13) ஏத்தினர். ஓரிடத்தில் 'சண்டேச நாயனார் தம் தந்தையைத் தண்டித்துச் சிவபெருமான் திருவடியிற் சேர்த்தியதுபோல வெள்ளம் தன்னைப் பிறப்பித்ததாகிய தீயை அழித்துத் திரும்பவும் அதை மழைக்குக் காரணமாகிய வேள்விச் சாலையிலே சேர்த்தியது' (23) என்று சண்டேச நாயனார் செயலை உவமையாக எடுத்தாண்டனர்.

"அத்தணிகைச் சண்முகவர் சந்நிதியி லதிதிகட்கு மந்த ணர்க்கும்
பத்தியுடன் சங்கமர்க்கு மன்னதா னங்கொடுத்தால்" (130)

என்பதில் உள்ள சங்கமரென்பதும், அகத்தியர் தென்னாடுநோக்கி வருகையில் சீபருப்பதத்தைத் தரிசித்து அதன் 'மிசைவாழ் நாயகி பிரமராம்பிகையோ, டுகைத்திடு விடையான் மல்லிகார்ச் சுனனை'ப் பணிந்து போற்றியதாகக் கூறியதும் இவ்வாசிரியரது வீரசைவாபிமானத்தை நினைப்பூட்டுகின்றன. சங்கமரென்பது வீரசைவ அடியார்களைத் தனியே குறிக்கும் சொல். சீ பருப் பதம் வீரசைவர்களுக்கு முக்கியமான சிவஸ்தலங்களுள் ஒன்று.

முருகக் கடவுளிடத்தே முறுகிய பக்தியுடைய இவ்வாசிரி யர் அப்பெருமானுடைய பெருமைகளைப் பலபடப் பாராட்டி யுள்ளார். பலவகைத்துதிகள் இடையிடையே அமைத்தனர். அன்றியும் அப்பெருமானுடைய ஷடாக்ஷர மந்திரத்தையும் (131,353,410) சிறப்பித்தனர். அப்பெருமானது திருவருள் பெற்றவர் முத்தி பெறுவரென்று பொதுவாகக்கூறுது, அவருலக மாகிய கந்தசாயுச்சியம் பெறுவர் (128), கவுமாரவுலகடைவர் (150) என்று கூறினர். முருகப்பெருமான் அடியார்களாகிய நக்கீரரையும் அருணகிரிநாதரையும் (13) வணங்கினர்.

தொண்டை நாட்டினராகிய இவர் அந்நாட்டையும் அதன் கண்ணுள்ள காஞ்சி முதலிய தலங்களையும் மிகச்சிறப்பித்தனர். திருநாட்டுச் சிறப்பில் உழவர்கள் வருணனை வரும் பகுதியில் தொண்டைநாட்டில் வழங்கும் சட்டகமென்னும் கருவியைப் பற் றிய செய்தியை அமைத்தனர்.

இந்நூலினிடையே அமைந்த துதிவகைகள் வருமாறு:—

| | |
|---|---|
| அகத்தியர் செய்த வீரேசர் துதி | 212—6, |
| பிரமதேவர் செய்த முருகக்கடவுள் துதி | 193—5, |
| அகத்தியர் செய்த துதி | 237—45, |
| திருமால் செய்த துதி | 362, |
| ஆதிசேடன் செய்த துதி | 416—21. |

இத்துதிகளில், போற்றி யெனவும் சரண மெனவும் மங்கள மெனவும் அடுத்தடுத்து வரும் செய்யுட்களைக் காணலாம்.

தெய்வயானையம்மை, வள்ளிநாயகி யென்னும் இருவரையும், வேற்படை, மயில், கோழிக்கொடி என்பவற்றையும் தனித்தனியே ஒவ்வொரு செய்யுளால் இவ்வாசிரியர் துதித்தனர். இங்ஙனம்

தனித்தனியே துதி கூறினோர் அரியர். தாரகனைக் கொன்ற அத்தியாயத்திலுள்ள செய்திகள் பல பிறநூற் செய்திகளினின் றும் வேறுபட்டுள்ளன.

ஓரினப்பட்ட பொருள்களைத் தொகுத்துக் கூறுவதில் இவருக்குத் தனி ஊக்கம் உண்டு. அங்ஙனம் கூறும் இடங்களிற் பெரும்பாலும் அடைமொழியின்றியே அவற்றைப்புலப்படுத்தும் இயல்பினர் இவர். கட்டிட வகைகளைக் கூறவந்தவர், மாடம், மாளிகை, மண்டபம், அம்பலம், தெற்றி, கூடம், கோபுரம், கொடிமதில், கழகம், செய்குன்றம், ஆடரங்கு, பாடரங்கு, அறச்சாலை என்பவற்றை வரிசையாகத் தொகுத்துரைத்தார் (66); நைமிசாரணியத்திலுள்ள மரவகைகளைக் கூறவந்தவர் விருட்சத் தாற் சிறப்புற்ற தலங்களைத் தொகுத்துரைப்பாராகி, ஆலங்காடு, வேற்காடு, மாங்காடு, பனங்காடு, கடம்படவி, பதரிகாச்சிரமம், வேய்வனம், சம்புவனம், மறைக்காடு என்பவற்றை உணர்த்தினர் (87); நைமிசாரணிய வனத்திலுள்ள மரங்களைப் புலப்படுத்துவாராய் (91) க் கோங்கு முதலிய பதினைந்தையும், தணிகாசலத்தி லுள்ள மரங்களின் சிறப்பைக் கூறுவாராய் அரசு முதலிய ஐம்பத்தொரு மரங்களையும் (223-5) ஒருங்கே தொகுத்துரைத்தார்.

சடையர், முண்டிதர், சீரையர், வெற்றரையர், வெண் பொடி புனைந்தவர், கண்மணித்தொடையர், தண்டினர், கமண்டலம் தாங்கியவர், விடயவாதனை தணந்தவர் (99) எனத் துறவியரின் வகையை ஓரிடத்தும், பிருகுமுதல் சத்தியனிறுதியாக வுள்ள 65 முனிவர் திருநாமங்களை ஓரிடத்தும் (101-103) தொகுத் தியம்பினர்.

முருகக்கடவுளுடைய ஆறு திருமுகங்களிலிருந்து ஆறாக உள்ள பொருள்கள் பல உதித்தனவென்று உணர்த்துவாராய், ஆறாகவுள்ள அங்கம், மாயை, குணம், சத்திகள், சுவை, ஆகமங்கள், பதார்த்தம் என்பவற்றைத் தொகுத்துரைத்தனர். பிறிதோரிடத்தில் பேரி, கொக்கரை, பிறைமுகி, சச்சரி, தடாரி, பூரி, கைச்சதி, சல்லரி, முரசு, உடுக்கை, மத்தளி (404) என்னும் இசைக்கருவிகளை ஒருங்குரைத்தனர். வேறோரிடத்தில் இன்ன இன்ன பொருள்களில் இன்னது இன்னது சிறந்ததென்று இரண்டு செய்யுட்களில் (110-11) சேர்த்துக் கூறினர்.

சொற்பொருளணிகளை அங்கங்கே இந்நூலிற் காணலாகும். இவருடைய வாக்கில் பல வட சொற்களும் வட சொற்றொடர் களும் விரவி வந்தன. கதாரசவமுது, கதாமுதபானம், முகார விந்தம், கந்தர்ப்பகோடி சுந்தர, சோணிதாக்கிய நகர் என்னும் தொடர்களைக் காண்க. முருகக் கடவுளுக்குரியனவும் பிறநூல் களிற் காணப்படாதனவுமாகிய வடமொழிப் பெயர்கள் பல இந் நூலிலுள்ள துதி வகைகளிற் காணப்படும். இவற்றையன்றி அடா, அடிக்கடி, ஒஞ்சரித்தல், சக்களத்தியர், முடா, மொக்கு முதலிய வழக்குச் சொற்களையும் இதிற் காணலாம்.

நைமிசாரணியத்திலுள்ள முனிவர்களுக்கு விலங்கினங்கள் ஏவல் புரிந்தொழுகுவதாக இவர் அமைத்துள்ள பகுதி இனிமை யுடையது.

இந்நூலின் ஏட்டுச் சுவடியொன்று பல வருஷங்களுக்குமுன் சரவணப் பெருமாளையர் பேரராகிய குருசாமி ஐயரென்பவர் வீட்டிலிருந்து எனக்குக் கிடைத்தது. வேறு பிரதி கிடைக் குமோ வென்று பலவிடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. திருத் தணிகையாண்டவன் திருவடியிலே இணையற்ற அன்புடையவரும், தமிழன்பிற் சிறந்தவரும், சென்னை ரிஜிஸ்ட்ரார் ஜெனரல் ஆபீ ஸில் 'பர்ஸனல் அஸிஸ்டண்டு' உத்தியோகம் வகித்து உபகாரச் சம்பளம்பெற்று விளங்குபவரும் ஆகிய ஸ்ரீமான் **ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள்,** எம். ஏ., இந்நூல் என் பால் இருப்பது தெரிந்து இதனை வெளியிட வேண்டுமென்று தாமே வலிந்து கூறி இப்பதிப்பு விஷயத்தில் எனக்குச் சிறிதும் பொருட்கவலை நேராதவாறு உதவி செய்தார்கள். தம்முடைய பொருளைத் தணிகையாண்டவன் சம்பந்தமான தமிழ்நூல் வெளி யீட்டிலே செலவிடுதலைப் பெரும்பேறுகக் கருதும் இவ்வன்ப ருடைய இயல்பு மிகவும் பாராட்டுதற்குரியது.

எந்தத் தமிழ் நூலாயினும் பழையதாயின் அது வெளிவர வேண்டுமென்பதே எனது ஆவல். சுவையினாலும் நடையினாலும் நூல்களில் ஏற்றத்தாழ்வு பலவாறாக இருக்கும். எல்லா நூல் களும் ஒப்புயர்வற்ற பெருமை யுடையனவாக இருத்தல் முடிவ தன்று. ஆயினும் தமிழ் இலக்கியச் சரித்திரத்தை உணரவிரும்பு பவர்களுக்கு எல்லா நூல்களும் பயன்படும். இந்நூல் புராண

காப்பியங்களுக்கு அக்காலத்தில் இருந்த மதிப்பை வெளிப்படுத்துவதற்கு ஓரடையாளமாகும்.

இந்நூல் எளிய நடையில் இருத்தலின் குறிப்புரை சுருக்கமாக எழுதப் பெற்றது. முதலிலிருந்து இறுதிவரையில் செய்யுட்களின் எண்கள் தொடர்ச்சியாக அமைக்கப் பெற்றுள்ளன. ஒவ்வோர் அத்தியாயத்தின் முன்னும் அதனதன் வரலாற்றின் சுருக்கம் வசன நடையில் எழுதிச் சேர்த்திருப்பது படிப்பவர்களுக்கு மிக்க உபயோகமாக இருக்கும்.

இந்நூல் சம்பந்தமான சில அரிய வடமொழிச் செய்திகளை எனக்குப் புலப்படுத்தியவர்கள் தேதியூர் பிரும்மஸ்ரீ சாஸ்திர ரத்னம் சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களும், மயிலாப்பூர் ஆயுர்வேத கலாசாலை ஆசிரியராகிய பிரும்மஸ்ரீ வைத்திய விசாரத நடேச சாஸ்திரிகளவர்களும் ஆவார்கள். இவ்விரு பெரியார்கள் பாலும் மிக்க நன்றியறிவுடையேன்.

இந்நூலை ஆராயும் காலத்தும் பதிப்பிக்கும் காலத்தும் உடனிருந்து உதவிசெய்தவர்கள் என் இளைய சகோதரர் சிரஞ்சீவி வே. சுந்தரேசையரும், சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், 'கலைமகள்' துணையாசிரியர் சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவர்.

'தியாகராஜ விலாஸம்'
திருவேட்டீசுவரன் பேட்டை,
24—4—39.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

உ
கணபதி துணை

# தணிகாசல புராணம்

## 1. கடவுள் வாழ்த்து

### ஆபத்ஸகாய விநாயகர்

(கொச்சகக்கலிப்பா)

1. **தூ**வச்ச காயயில்வேற் சுந்தரனை வள்ளிபுனம்
மேவச்ச காயனென வேழவுரு முழுமையுங்கொள்
ஆவச்ச காயனெனு மைங்கரனை யவனருளாற்
பாவச்ச காயமலப் பற்றறயாம் பற்றுவாம். (௧)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

2. வெம்பி வருபேய் நோயாதி
விலக்கி யடியார்க் கருள்புரியும்
நம்பி யயன்மா லிந்திரன்விண்
ணுடர் பகையைத் தவிர்த்தருள்வான்

---

### குறிப்புரை

1. தூ வச்ச வேல், காய்வேல், அயில்வேலென்க; தூ வச்ச - தூய்மையை வைத்த; தூ - தூய்மை; வச்ச - வைத்த; போலி. அயில் - கூர்மை. சுந்தரனை வள்ளி மேவ என்க. மாரனைக் குற்சிதம் செய்யும் அழகுடையவராதலின் முருகக்கடவுளைச் சுந்தரனென்றார்; "ரத்தின பணுநிருத்தன் மெய்ச்சுதனு நாடு மிக்க லக்ஷண குமார சுப்ர—மணியோனே" (திருப்புகழ்.) முகமாத்திரம் யானையாக உள்ளவர் முழுவுருவமும் யானையாயினரென்பது கருதி, 'வேழவுரு முழுமையுங்கொள்' என்றார். ஆவச்சகாயன் - ஆபத்ஸகாய விநாயகர்; இவர் தல விநாயகர். பாவத்திற்குச் சகாயமான மலம் பற்றற யாம் பற்றுவாம்: "பற்றுக பற்றற்றான் பற்றினை" (குறள், 350.)

2. நம்பி - நிறைந்த குணங்களையுடையவன். தவிர்த்தருள்வான் - தவிர்த்தருளும்பொருட்டு. தீப்பொறி உருவாய் - ஆறு நெருப்புப் பொறி

பம்பி யெழுந்தீப் பொறியுருவாய்ப்
பரம னுதற்கண் டனிலுதித்த
தம்பி தணிகைச் சரிதைசொலத்
தமையன் றும்பி முகன்றுணையே. (உ)

## நடராசப் பெருமான்

3. பருதிமதி மேதினிநீர் பாவகன்கால் வெளியுயிர்சீர்
பரந்த மேனி
மருவிமல ரயன்றிருமான் மணிகண்டன் மயேசனொடு
சிவனு மாகிச்
சுருதிபுக ழைந்தெழுத்தின் பொருளாகி யுலகினிலைந்
தொழிலு நீடப்
பெருகியபொன் னம்பலத்திற் கூத்தாடும் பெருமானைப்
பேசி வாழ்வாம். (௩)

## சிவகாமசுந்தரி

4. சொற்பொருளு முடலுயிருஞ் சுடரொளியும் விரைமலருஞ்
சுவையும் பாலும்
நிற்குநிறை வெனக்கலந்து சிவத்திலநந் நியமாகி
நிலவு மண்டம்
பற்பலவும் படைத்தளிக்குந் தாயாகி வினைச்சமமாம்
பருவந் தோன்றும்
சிற்பரையைத் தில்லைநகர்ச் சிவகாம சவுந்தரியைச்
சிந்தை சேர்ப்பாம். (௪)

---

களின் வடிவமாய். நுதற்கண்தனில் - நெற்றிக் கண்கள் ஆறிலும்; தன் - சாதியொருமை.

3. பருதி - சூரியன். பாவகன் - அக்கினி. இங்கே அட்டமூர்த்தங்கள் கூறப் பெற்றன. மணிகண்டன் - ஸ்ரீகண்ட ருத்திரர். பிரமன் முதலிய ஐவர், படைப்பு முதலிய ஐந்து தொழில்களையும் செய்வோர். மயேசன் - மஹேசன். நடராசப் பெருமானது திருநடனத்தால் ஐந்தொழிலும் இயல்வதாகக் கூறுதல் மரபாதலின், 'ஐந்தொழிலு நீடக் கூத்தாடும்' என்றார்; குமரகுருபர. 452-ஆம் செய்யுளையும் அதன் குறிப்புரையையும் பார்க்க.

4. சொற்பொருளும்......கலந்து : "நீரின் றண்மையனல் வெம்மை யெனத் தனையகலா திருந்து", "சரதமறை யாய்மறையின் பொருளாயப் பொருண்முடிவு தானாய்த் தேனின், இரதமெனப் பூவின்மண மெனப்பரம

## செங்கழுநீர் விநாயகர்

(கொச்சகக்கலிப்பா)

5. அங்கழுநீ ரமணரொடு மாலவா யரனேடும்
வெங்கழுநீ ரெதிரேற்று மெய்த்தமிழின் மணங்குலவும்
பைங்கழுநீர் நறுஞ்சுனைக்கட் பகன்மலருந் தணிகைவரைச்
செங்கழுநீ ரைங்கரன்ருள் சென்னிமிசைப் புனைந்திடுவாம்.

## ஞானசத்திதரர்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

6. பரமனுதல் விழியினுதித் தந்தரமே னிமிர்ந்து
பகிரதியிற் றவழ்ந்துநிறை பனிநீருட் குளித்துச்
சரவணத்தொட் டிலினேறி யறுவர்முலை யுண்டு
சங்கரியின் மடியிலிருந் தோமெனுஞ்சொற் பேசி
அரன்மலையி னின்றெவையும் படைத்தலைவாய் நடந்தங்
கசுரர்தமைத் தொலைத்தமரர்ப் புரந்துலகை வலம்வந்
திரவிசத கோடியெனத் தணிகையமர்ந் தருளும்
எழின்ஞான சத்திதர னிணையடியேத் தெடுப்பாம். (௬)

## தெய்வயானையம்மை

7. சங்கரிதன் மருமகளைச் சங்கரிதன் மகளைச்
சங்கரிக்குஞ் சங்கரனை மாமனெனுந் தயலை
வெங்கரிதந் திடுபிடியை விண்ணவர்கோன் சுதையை
விண்ணவர்கள் பணிந்தேத்தும் விண்ணுலகத் தணங்கைப்

---

னிடம்பிரியா வெம்பி ராட்டி" (திருவிளை. பாயிரம். 5; தடாதகைப். 42.) வினைச் சமமாம் பருவம் தோன்றும் - இருவினையொப்புண்டாகும் பருவத்தில் தோன்றும்.

5. அழும் நீர் அமணரொடும் - தோல்வியினல் அழுகின்ற தன்மையையுடைய சமணரோடும். வெங்கழுவிலும் நீரிலும் ஏற்றும். அமணரைக் கழுவிலும், ஏட்டை வையைநீரிலும் ஏற்றும் தமிழ் என்க. மெய்த்தமிழின் - தேவாரத்தின். பைங்கழுநீர் மலரும் என இயைக்க. நறுஞ்சுனை - இந்திர தீர்த்தம். பகல் மலருமென்றது தெய்விகத்தைப் புலப்படுத்தியபடி. செங்கழுநீர் ஐங்கரன் - செங்கழுநீர் விநாயகர்.

6. சரவணத் தொட்டில் : "சரவணப் பூந்தொட்டி லேறி" (கந்தரலங்காரம்.) அரன்மலை - கைலாயம். ஞான சத்திதரரென்பது இத்தலத்து முருகக்கடவுளது திருநாமம். ஒரு குழந்தையின் பிறப்பு முதலிய செயல்கள் முறையே இச் செய்யுளில் தோற்றுகின்றன.

பைங்கழுநீர் விழியாளைப் பைங்கழுநீர் நிறமே
படைத்தாளைப் பைங்கழுநீர் செங்கரங்கொண் டாளைச்
செங்கமலை தருமமுதைக் கந்தரிடத் தமரும்
தெய்வயா னையைத்தொழுது திருவருள்பெற் றிடுவாம்.

### வள்ளிநாயகி

8. மாதவனோர் மாதவனாய் மாதவஞ்செய் திடலும்
வனமானாய் வந்தெதிர்ந்த மலர்மானைப் புணரப்
பூதலமங் கையருருவா யவதரித்து வள்ளிப்
பொருப்புறையும்பொருப்பர்மனை விருப்பமுடன் வளர்ந்து
தீதகலுந் தினைகாத்து வேங்கையுரு வெடுத்த
செவ்வேளை யவ்வேளை சேர்ந்திருகை கோளும்
காதலுடன் புரிந்திறைவன் வலப்பாகத் தமரும்
கன்னியெனும் வல்லிபத முன்னிவழுத் திடுவாம். (அ)

### வேற்படை

9. பாலயிலுங் குழவியெனப் பாரினுதி யாமற்
பாறையினுங் கடியமனப் பாவையர்மா லுறுமற்
சேலயிலுங் கொக்கெனவெந் தீமைபுரி யாமற்
சேனையிலும் யானையிலுஞ் சிந்தனைவை யாமற்
சூலையினு நமன்றூதர் வாதையிலும் படாமற்
சூறையினுங் கொடியமனஞ் சுழன்றுதிரி யாமற்
காலயிலும் பாம்பயிலுங் கார்மயிலை யுகைத்தோன்
கையயிலை மாலையினுங் காலையினும் பணிவாம். (கூ)

---

7. சங்கு அரிதன் - சங்கை யேந்திய திருமாலினுடைய. திருமாலின் மகளென்றது பழம்பிறப்பினை நினைந்து. தயலை - தையலை; "தயல்வளர் மேனியன்" (சிற். 117.) சுதை - மகள். பைங்கழுநீர் நிறம் - பச்சை நிறம். தெய்வயானையம்மையின் கரத்தில் கழுநீர்ப்பூ உள்ளது (தணிகைப். கடவுள். 5.) கமலை - திருமகள்.

8. மாதவன் - திருமகளுக்கு நாயகனான திருமால். மாதவனாய் - சிவ முனியென்னும் முனிவனாகி. மலர்மானை - திருமகளை. பொருப்பர் - குறிஞ்சிநிலமாக்கள். வேங்கை உரு - வேங்கை மரத்தின் உருவத்தை. இரு கைகோளும் - களவு, கற்பென்னும் இரண்டு ஒழுக்கங்களையும்.

9. பால் அயிலும் - பாலை உண்ணும். மால் - மயக்கம். சேல் அயிலும் - சேல்மீனை உண்ணும். சேனையிலும் யானையிலும் சிந்தனை வையாம லென்றது, அரசாட்சியை விரும்பாமலென்றபடி. சூலை -

## மயில்

10. அருமையிலை யொருபொருளுக் கடிமையிலை பிறருக்
கந்தகனுக் காண்மையிலை யடியேன்பால் வருதற்
கெருமையிலை சிறுமையிலை யின்மையிலை பகைஞர்க்
கெளிமையிலை மடமையிலை யிழிதகைமை யிலைநோய்
பொருமையிலை வறுமையிலை பொய்ம்மையிலை பிறவிப்
புன்மையிலை தீமையிலை பொறுமையிலை மகவான்
தருமயிலை வனமயிலை மணந்ததிருத் தணிகைச்
சண்முகனா ருவந்தேறுந் தனிமயிலைத் தொழவே. (க0)

## கோழிக்கோடி

11. மஞ்சேவல் கொளுமகவான் வந்தேவல் புரிய
மகிதலமுன் னேவல்கொளு மாசூர பன்மன்
நெஞ்சேவ லெனப்பிளந்து நிணங்கொறித்துச் சொரிசெந்
நீரருந்திக் கொக்கரித்து நிலவுலக மனைத்தும்
உஞ்சேவல் செய்யவிரு சிறைநீழல் பரப்பி
உவந்தேவல் விரைந்துகுக னுயர்வலக்கை யமரும்
செஞ்சேவற் கொடிக்கடியேன் றினமேவல் புரியத்
தீவினையு மெனதேவற் றிறத்தினகன் றிடுமே. (கக)

---

வயிற்று நோய். சூறையைக்காட்டிலும் மனம் சுழன்று; சூறை - சுழல் காற்று. கால் அயிலும் பாம்பு அயிலும் - காற்றை உண்ணும் பாம்பை உண்ணும். கை அயிலை - கையிலுள்ள வேற்படையை. உதியாமல்...... திரியாமல் அயிலைப்பணிவாமென இயைக்க.

10. ஒரு பொருளுக்கு அருமை இலை : எல்லாம் எனக்கு எளிதிற் கிடைக்குமென்றபடி. பிறருக்கு அடிமை இலை. அடியேன்பால் வருதற்கு அந்தகனுக்கு ஆண்மை இலை. எருமை - யமனுடைய வாகனமாகிய எருமைக்கடா. நோய் பொரும் மை இலை; மை - குற்றம். மகவான் தரு மயில் - தெய்வயானை யம்மை. வனமயில் - வள்ளி நாயகி. மயிலைத் தொழ, அருமை முதலியன இல்லை என முடிக்க.

11. மஞ்சு - மேகத்தை. மகவான் - இந்திரன்; "சத்தமே கங்களும் வச்ரதர னாணையிற் சஞ்சரித் திடவில்லையோ" (தாயுமானவர்.) மகிதலம் முன் - பூமி முதலியவற்றை. நெஞ்சே - நெஞ்சை; ஏ: அசை. வலெனை - வல்லென; ஒலிக்குறிப்பு. செந்நீர் - இரத்தம். கொக்கரித்து - கெர்ச்சித்து. உஞ்சு = உய்ந்து - பிழைத்து. வல் விரைந்து - மிக விரைந்து. தீவினை ஏவற்றிறத்தின் அகன்றிடும்; "மேவா வமர்ந்த மாமணியைத்

### நவவீரர்

12. வெருவீர வாகுலத்தின் விளைவீர வுலகின்
விழைவீரத் தீவினைகண் மேலைவர வீர
மருவீர வாகுமிசை வருவீரற் கிளைய
மயில்வீர னயில்வீரன் வள்ளியணை வீரன்
திருவீர வாகுமுந்நான் குடையபிரான் பின்னர்த்
தேவிசிலம் பிடையுதித்த தெரிவையர்க ளளித்த
பொருவீர வாகுமுத லொன்பதுவீ ரர்களம்
புயவீர மலரடிக்குக் கரவீரம் புனைவாம். (கஉ)

### படைத்தலைவர் முதலியோர்

13. படைத்தலைவர் நூற்றெண்மர் பங்கயத்தாள் போற்றிப்
பகர்பூத வெள்ளமிரண் டாயிரவர் பதமும்
முடைத்தலையால் வணங்கியெழிற் றணிகைவரை மிசைவாழ்
முருகனருள் பெற்றவெழு முனிவர்கழல் பணிந்து
நடைத்தலைமைத் தமிழ்வேந்தர் நால்வரையு மேத்தி
நக்கீர ரருணகிரி நாதரையும் வாழ்த்தித்
தொடைத்தலைவே லவனருளா னந்தவெள்ளத் தழுந்தும்
தொண்டர்பல ரையுந்துதித்து விண்டனமும் மலமே.

---

தொழுது வினைக்கு விடைகொடுப்பாம்" (பிரபு. துதிகதி, 1.)இங்கே கூறிய சேவற்கொடி சூரனாகிய சேவலன்று; பழமையானது; உபதேசகாண்டம், சூராதிகளொடுக்கச். 15; தணிகைப். சீபரி பூரணப். 2 - 8, பார்க்க.

12. வெருவை ஈர; ஈர - அறுக்க; பின் வருவனவற்றிற்கும் இங்ஙனமே பொருள் கொள்க. ஆகுலத்தின் விளைவை ஈர. விழைவை ஈர. வீரம் ஆகு மிசை - வீரத்தையுடைய பெருச்சாளியின்மீது. வீரம் வாகு முந்நான்கு உடைய - வீரம் பொருந்திய பன்னிரண்டு தோள்களையுடைய. வீரவாகு முதல் ஒன்பது வீரர்கள் - நவ வீரர்கள். அம்புயம் ஈரம் மலரடிக்கு. கரவீரம் - அலரி மலரை.

13. படைத்தலைவர் நூற்றெண்மர்: "இங்கிவர் பூத வெள்ளத் திறையவ ரொருநூற் றெண்மர்" (கந்த. ஏமகூடப். 18); இந்நூற்றெண்மர் பெயர்களையும் கந்தபுராணம், ஷை படலத்திற் காணலாகும். போற்றி - துதித்து. எழுமுனிவர்: இத்தலத்தில் வழிபட்டுப் பேறுபெற்றோர். நடை - நன்னடை. நால்வர் - சைவசமயாசாரியர்கள். அருளாகிய ஆனந்தவெள்ளத்தில். விண்டனம் - நீங்கினம்.

## 2. அவையடக்கம்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

14. பூவேந்த ரணிநாக மணியழுத்து மரக்கும்
பொற்பணியின் பற்ருசும் புன்மையென வரையார்
சேவேந்த ரளித்ததிருத் தணிகைவரை யாரும்
செவ்வேணற் காதையொடு சேர்ந்திடுமித் திறத்தால்
நாவேந்து மிலக்கணமோ ரைந்துமறி கல்லா
நாயேன்சொல் வெற்றிசையி னடைவிருத்த மனைத்தும்
பாவேந்த ரிகழ்ந்துரையார் பயனறிந்து கொள்வார்
பாலர்புகன் மழலையிலோர் பயனுமறி குவரே. (க)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

15. வேதமார் தணிகை வெற்பின் மேன்மையை வேதம் வல்ல
வாதரா யணன்முன் ஞேதும் வடமொழிக் கெதிரே யானும்
தீதிலாத் தமிழி ஞலே செப்புறுந் தன்மை யோரின்
கோதிலாக் குயின்முன் னின்று கூகையுங் குழற லொக்கும். (உ)

## 3. சிறப்புப்பாயிரம்

(வேறு)

16. பிரமாண்ட புராணத்திற் பிரமனு ரதமுனிக்குப்
பெட்பிற் கூறும்
வரமான வடமொழியில் விளங்கியிடுந் தணிகைவரை
மான்மி யத்தை

---

14. பற்ருசு - ஆபரணங்களின் மூட்டுவாயில் வைக்கும் பொடி. வரையார் - நீக்கார். சே வேந்தர் - சிவபெருமான்; சே - இடபம். தணிகைவரை ஆரும் - தணிகைமலையில் எழுந்தருளிய. இலக்கணம் ஓர் ஐந்தும் - எழுத்துமுதல் அணியீருன ஐந்திலக்கணங்களையும். வெற்றிசையின் நடை - பொருளில்லாச் சொற்களின் நடையையுடைய.

அவையடக்கவகையிரண்டனுள் இஃது அவையை அடக்கிக் கூறியது; "சுருக்கமில் கேள்வி" (யா. கா. அவையடக்கம்) என்ற கவியைப் போன்றது இச்செய்யுள்.

15. வாதராயணன் - வியாசமுனிவர். கூகை - கோட்டான். அவையடக்கவகை இரண்டனுள் அவைக்கு அடங்கிக் கூறியது இச்செய்யுள்.

16. வரம் - உயர்ச்சி. உரமான - வன்மையுள்ள. கந்தப்பமுனி -

உரமான பூதலத்தி லுள்ளதமிழ் வாணரெலா
முணரு மாறு
திரமான செந்தமிழாற் பத்தியிற்கந் தப்பமுனி
செப்பி னானே.

## 4. திருநாட்டுச் சிறப்பு

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

17\. உலகெ லாந்தொழு நீற்றுமெய் யொருவன்று
ருகவனந் தனினுற்றாங்
கிலகு வாரண வுரிபுனைந் திரசத
வெற்பினே குதன்மானக்
குலவு வெண்முகிற் படலையின் னெறிக்கொடு
குரைகட லிடத்தேகி
அலைவ னங்குழிந் திடவுண்டு கருகிமீண்
டடைந்தநந் திகிரிக்கே. (க)

18\. அடைந்த மாமுகி லண்ணல்கை யந்துடி
யம்பொன்மால் வரைவிற்போற்
றடிந்து கான்றுரு மார்த்துவிற் கோட்டியச்
சங்கர னருள்வெள்ளம்

---

கந்தப்பையர்; வீரசைவர்கள் குடும்பிகளா யிருந்தாலும் முனிவரென்றும், ஐயரென்றும், தேசிகரென்றும் வழங்கப்பெறுவர்.

17\. நீற்றுமெய் ஒருவன் - பரமசிவன். உற்று - அடைந்து. ஆங்கு இலகு வாரண உரி புனைந்து - அவ்விடத்தே முனிவர் கோபங்கொண்டு யாகஞ்செய்து விடுத்த யானையை வென்று அதன் தோலைப் போர்த்து; வாரணவுரி - யானைத்தோல். இரசதவெற்பின் ஏகுதல் மான - கயிலைமலைக்குச் சென்றதைப்போல; இரசதம் - வெள்ளி. முகிற்படலை - மேகத்தின் தொகுதி; "ஓடும் படலை முகிற்படலம்" (குமரகுருபர. 26.) அலைவனம் - அலையையுடைய நீரை.

18\. துடி - உடுக்கை. பொன் மால்வரை வில் - மேருமலையாகிய வில். தடிந்து = தடித்து - மின்னல்; எதுகைபற்றி மெலிந்துநின்றது. விற்கோட்டி - இந்திரவில்லை வளைத்து. இடியோசைக்குத் துடியின் ஓசையும், இந்திரவில்லுக்கு மேருவில்லும் உவமைகள்; நிரனிறை. பயம் - பால். நந்தியந்

படிந்த நந்திபா லாகமப் பொருளெனும்
பயமெலாம் பொழிந்தாங்குத்
தடங்கொ ணந்தியம் பொருப்பினை வளைவுறீஇச்
சரேலெனப் பொழிந்தன்றே. (உ)

19. கூடம் விண்முக டணவிய நந்தியங்
குன்றினின் றிழிமாநீர்
ஆட கங்கரி மருப்பெறிந் தலைத்திரைத்
தரவமிக் குறுந்தோற்றம்
தேட யன்றிரு மாற்கரி தாம்பரன்
றிருமுடிப் புனல்கொன்றைத்
தோடும் வெண்பிறைத் துண்டமு மரவமுஞ்
சுலவிவீழ் தரன்மானும். (ங)

20. செருக்கி யீசனு நிகரிலென் றூர்த்திடுந்
தேவர்தஞ் செருக்கெல்லாம்
அரக்க ராலழித் தடக்கியு மவர்பினு
மச்செருக் குறுமாபோல்
தரைக்கண் யாவரு முவர்த்திடு சலதிநீர்
தனைமுகந் துவர்நீக்கிப்
பெருத்த மாமுகில் விடுப்பவு மப்புனல்
பெருங்கடல் புகுந்தன்றே. (ச)

21. கங்கை மாநதிக் கொருபதி மானிடக்
கவினுருக் குருவாய்வந்
தங்கண் மாநிலத் தடியர்வல் வினையறுத்
தருட்பெருக் குடன்கொண்டே

---

பொருப்பு - நந்திமலை ; இது தொண்டை நாட்டிற்கு உரியது. பொழிந்தன்று - பொழிந்தது. முகில் பொழிந்தன்று என்க.

19. கூடம் - மலையுச்சி. நீரென்றது அருவியை. ஆடகம் - பொன். அரவம் - பாம்பு. அரிதாம் - அரியபொருளாகிய. மானும் - ஒக்கும். ஆடகத்திற்குக் கொன்றையும், கரிமருப்பிற்குப் பிறையும், திருமுடியிலுள்ள பாம்பிற்கு அருவியிலுள்ள பாம்பும் உவமைகள்.

20. நிகர் இல் என்று - தமக்கு ஒப்பில்லையென்று. அடக்கியும் - அடங்கச் செய்தும் ; அடக்கியது, இறைவன் திருவருள். அவர் - அத்தேவர்கள். உறுமாபோல் - அடைவதைப்போல். சலதிநீர்தனை - கடல்நீரை. உவர் - உப்புத்தன்மையை. புகுந்தன்று - புகுந்தது.

தங்கு தன்னிடஞ் சேர்ந்தென முகில்பொழி
சலதிநீர்ப் பெருவெள்ளம்
சங்கு லாவிய தடங்கரை யுடைத்ததிற்
சார்புனல் கொடுபோமால். (ரு)

22\. மாத வம்புரி நந்திமால் வரைமிசை
வசிட்டன்மாட் டுறுந்தேனு
நீதி பெற்றிடு தொண்டைநாட் டவரெனு
நிலைத்தகன் றினமுண்டு
போத முற்றுயர் கதியடை தரப்பயம்
பொழிந்தநீர் மையினாலே
ஏத மற்றிடு முலகெலாம் பானதி
யெனப்பெயர் புனைந்தன்றே. (சா)

23\. தனைய ளித்திடு தீமைசெய் தாதையைத்
தாளற வேமாய்த்துத்
தனைய ளித்திடு பரமன்றாள் சேர்த்திடுந்
தண்டிதன் செயலேபோல்
தனைய ளித்திடு தேயுவை யுலகினிற்
றங்கிடா தறமாய்த்துத்
தனைய ளித்திடு மந்தணர் வேள்வியஞ்
சாலைசேர்த் தியதந்நீர். (எ)

---

**21.** பதி - சிவபெருமான் ; எழுவாய். மனிதவடிவங்கொண்டு ஆசாரியனாக வந்து. தடங்கரை உடைத்து - தடாகங்களின் கரைகளை உடைத்து. கடலுக்கு இறைவனும், தடாகங்களுக்கு வினைகளும், நீருக்கு அடியவர்களும் உவமைகள்.

**22.** தேனு - காமதேனு. கன்றினம் : காமதேனுவுக்குப் பல கன்றுகள் உண்டு. பயம் - பால், நீர்.

**23.** தாதை - எச்சதத்தர். தண்டி - சண்டேச நாயனார். தேயு - அக்கினி. நெருப்பிலிருந்து நீருண்டாயிற்றென்பது வேதவழக்கு. அந்நீர் சேர்த்தியது. சேர்த்தியது - அந்த அக்கினியைச் சேர்த்தது. சண்டேச நாயனார் தந்தையைத் தண்டித்துச் சிவபெருமான் திருவடியிற் சேர்த்தியது போல, வெள்ளம் தன்னைப்பிறப்பித்ததாகிய தீயை மாய்த்து அதை வேள்விச்சாலையில் சேர்த்தியது.

24\. கோடை யென்னுமோர் கொடுந்தொழிற் பகைவனுற்
கொதிக்குமுட் டினநீத்துக்
காடுங் குன்றமு மருதமு நெய்தலுங்
கற்சுரங் களுநீராய்
மேடும் பள்ளமு மறிகலா தெங்கணும்
வெள்ளமா யுலவிற்றால்
பீடு சால்பெரு நீர்மையைச் சார்ந்திடப்
பெற்றிடி னரிதேயோ. (௮)

25\. சங்க மேவுறு திகிரிசெம் பொன்மணி
தயங்கவான் முடிமேவி
மங்குல் சூழ்தரு நந்திமால் வரையெனு
மாயவன் புவிமீதிற்
றங்கு மாரரு ளொழுக்கென வருவியிற்
றந்துதண் டகநாட்டைப்
பொங்கு பாலியைப் பாலியென் றேவியே
பொற்பின்வை குறுமாதோ. (௯)

26\. தொண்டை நாட்டுறு மன்பதை யெனப்பெறு
தொகையறு சிறாரெல்லாம்
உண்டு வாழ்தரப் புவியெனுந் தாய்முலை
யொழுக்குபா லாறுகி

---

24\. உட்டினம் - உஷ்ணம். காடு - முல்லைநிலம். குன்றம் - குறிஞ்சிநிலம். கற்சுரங்கள் - பாலை நிலங்கள். பெரு நீர்மையை - பெரிய நீரின் தன்மையை; பெரிய நீரையுடைய மையை; மை - மேகம். இது சிலேடையொடு வந்த வேற்றுப்பொருள் வைப்பணி.

25\. நந்திமலைக்கும் திருமாலுக்கும் சிலேடை. சங்க மேவுறும் திகிரி - கூட்டமாகப் பொருந்திய மூங்கில், சங்கமும் ஏவுகின்ற சக்கரமும்; திகிரி - மூங்கில், சக்கரம். செம்பொன் - சிவந்த பொன்னென்னும் உலோகம், திருமகள். மணி - மாணிக்கம், கௌஸ்துபமணி. வான்முடி மேவி - ஆகாயத்தின் உச்சியைப் பொருந்தப்பெற்று, சிறந்த கிரீடம் பொருந்தி. மேவி மால் வரையென்னும் மாயவன் ஏவி வைகுறுமென்க. திருமால் தண்டக நாட்டைப் பாலியென்று பாலிநதியை ஏவி; பாலி - காப்பாற்று, பாலாறு. காத்தற் றொழிலுடைமையால் இங்கே திருமாலைக் கூறினர்.

26\. மன்பதை - மக்கட் கூட்டம். பாலானது ஆறுகி. விண்டிடாது - நீங்காமல். எழுந்தன்று - எழுந்தது. "சரயு வென்பது தாய்முலை யன்னது" (கம்ப. ஆற்றுப்.)

மண்டி வந்திடு செயலென நந்திமால்
வரைச்சிக ரியினின்று
விண்டி டாதிழி யருவியா லாறெனும்
வெள்ளமிக் கெழுந்தன்றே. (கo)

27. வார ணத்திணி கோட்டையுங் கோட்டுறு
மணியையு நனிவாரிக்
கார கிற்பரா ரைக்கொழு நறுந்துணி
கையலைத் துயர்சந்தின்
வேர றப்பறித் தணிகொள்பச் சிலைமுதல்
வீசிமிக் கீர்த்தோடிப்
பார திக்கட லெதிர்கொளப் புகுந்தது
பாலிமா நதிமாதோ. (கக)

28. கொடிபி டித்துவா ரணம்பரி மாவுடன்
குலவிய காலாளும்
புடைய டுத்திர தம்படைத் தம்புவிற்
பூட்டிமுப் புரம்வாழும்
கொடிய தானவக் கடன்மிசை யெம்பிரான்
குறுகுறுந் திறமேபோல்
நெடிய மைக்கடன் மிசைக்கடி தோடிற்று
நீள்பெரும் புனற்பாலி. (கஉ)

29. நந்தி நெற்றியி னுதித்தடி தாழ்ந்தெழூஉ
நவிறரு விடைபெற்றுச்
சந்த மார்தரு பாரிடங் கலந்துமா
மன்றலை யறச்சாய்த்து

---

27. கோட்டுறும் மணி - யானைத் தந்தத்திற் பொருந்திய முத்து. பராரை - பருத்த அடிகளையுடைய. துணி - துண்டம். சந்து - சந்தன மரம். பச்சிலை முதல் - பச்சிலையென்னும் மரம். பாரதிக்கடல் - தோணிகளையுடைய கடல். கடலெதிர் கொளவென்றது, கடல்நீர் வந்து எதிர்த்ததைக் கூறியபடி.

28. பாலியாற்றுக்கும் சிவபெருமானுக்கும் சிலேடை. கொடி - பச்சிலைக் கொடிகள், துவசங்கள். வாரணம் - சங்கு, யானை. பரிமா - பரிக்கின்ற மாமரங்கள், குதிரைகள். காலாளும் புடையடுத்து - வாய்க்கால்கள் ஆட்சி பெற்ற பக்கத்திலே அமைந்து, காலாட்கள் அருகிலே அடுத்து. இரதம் - சுவையாகிய குணத்தை, தேர். அம்பு விற்பூட்டி - நீரிலேபொருத்தி, அம்பை வில்லிற் பூட்டி.

29. பாலாற்றுக்கும் வீரபத்திரர்க்கும் சிலேடை. நந்தி நெற்றியின் -

முந்த வேயழல் வளர்த்திடு மகத்தையு
முருக்கிடுஞ் செயறன்னல்
அந்த வீரபத் திரனையு நிகர்த்ததவ்
வகன்புனற் செழும்பாலி. (கஙு)

30. வான யானையுங் கானக மானையு
மணந்துமா மயிலூர்ந்து
தான கந்தமா தனத்தையுங் கைக்கொடு
சார்ந்தசூ ரலைவாட்டி
ஏனை வெற்பையுந் தாக்கிவெள் வேல்பிடித்
தெய்திடு மெழிலாலத்
தேனி சைத்ததார்க் கடம்பணி மார்பனைச்
சிவணுமத் திருப்பாலி. (கச)

31. வச்சி ரங்கொடு தவளவா ரணமிசை
மருவிவான் றருமன்னி
இச்சை யீயுமான் மணிநிதி படைத்தொரா
யிரங்கணும் பரந்தேகி

---

நந்திமலையின் உச்சியில், பரமசிவனுடைய நெற்றியில். விடை - காளைகள், உத்தரவு. பாரிடம் - பூமி, பூதகணங்கள். மாமன் தலை - மாமரத்தின் நிலைபெற்ற தலைகளை, மாமனாகிய தக்கனது தலையை. மகம் - யாகம்; அகத்தையுமெனப் பிரித்து, அகமென்பதற்கு வீடென்று பொருள் கொள்க.

30. பாலாற்றுக்கும் முருகக்கடவுளுக்கும் சிலேடை. வானயானை - பெருமையையுடைய யானைகள், தெய்வயானையம்மை. கானகமான் - காட்டிலுள்ள மான், வள்ளிநாயகி. மாமயில் ஊர்ந்து - பெரிய மயில் தன் மீது ஊரப்பெற்று, பெரிய மயிலை வாகனமாகக் கொண்டு செலுத்தி. தான கந்தமாதனத்தையும் கைக்கொண்டு - பல இடங்களிலுள்ள கிழங்குகளை யும் பெரிய பொன்னையும் கைக்கொண்டு, இருப்பிடமாகக் கந்தமாதன மென்னும் மலையைக் கொண்டு. சூரலை வாட்டி - பிரம்புகளை வாடச் செய்து; சூரல் - பிரம்பு. சூர் அலை வாட்டியென்று பிரித்து, சூரனைக் கட லிலே கொன்றென்று மற்றொரு பொருள் கொள்க. ஏனைவெற்பு - மற்ற மலைகள், கிரௌஞ்சமலை. வெள்வேல் - வெள்ளிய வேலமரங்கள், வெள் ளிய வேலென்னும் ஆயுதம்; வெள்வேல், ஒரு மரத்தின் பெயர். சிவணும் - ஒக்கும்.

31. பாலாற்றுக்கும் இந்திரனுக்கும் சிலேடை வச்சிரம் - சதுரக் கள்ளி, வச்சிராயுதம். தவள வாரணமிசை மருவி - வெள்ளிய சங்குகள் தன்மேல் மேவப்பெற்று, வெள்ளையானையின்மேல் பொருந்தி. வான்தரு -

அச்சு றுத்துகார் வரைச்சிறை யனைத்தையு
மரிந்திடு மியல்பாலே
மைச்செ லுத்திடு புரந்தர ளுகியும்
வயங்குமத் தீம்பாலி. (கரு)

32. கொண்ட லாடிய நந்தியம் பெயர்புனை
குன்றினின் றெழும்பானீர்
தொண்டை நாடெனுந் தொண்டைவாய் மடுத்தலை
சுருட்டிய கடலென்னும்
பண்டி யாரவுண் டம்புவி யெனுமகள்
பல்வளங் களும்பெற்றுக்
கண்ட மாந்தர்தங் கண்களி கூர்தரக்
களிப்பின்வீற் றிருந்தாளே. (கசு)

(கலிவிருத்தம்)

33. மால்க ளோடிய வண்புல வோர்மனம்
நூல்க ளோடிய நுண்பொரு டேர்தல்போற்
சேல்க ளோடிய தீம்புனற் பாலிபல்
கால்க ளோடிக் கழனியிற் பாயுமால். (கஎ)

34. பாயு நீர்ச்செழும் பண்ணையிற் பண்ணையாய்த்
தோயு மள்ளர் தொகையில ராகிவந்

---

பெரிய மரங்கள், கற்பகமரம். இச்சை ஈயு மான் - விருப்பத்தைக் கொடுக்கும் மானென்னும் மிருகம்; ஈயும் ஆன் எனப்பிரித்து, விரும்பியவற்றைக் கொடுக்கும் காமதேனுவென மற்றொரு பொருள் கொள்க. மணி நிதி படைத்து - மாணிக்கமும் பொன்னும் படைத்து, சிந்தாமணியையும் மற்ற நிதிகளையும் படைத்து. ஓராயிரம் கணும் பரவி - ஓராயிரம் இடங்களிலும் பரவப்பெற்று; ஆயிரம் என்னும் எண் பலவென்னும் பொருளில் வந்தது; ஓராயிரம் கண்கள் உடம்பில் பரவப்பெற்று. வரைச் சிறை - மலை போன்ற அணைகளை, மலையின் சிறகுகளை. மைச் செலுத்திடு - மேகத்தை வாகனமாகச் செலுத்திடும்; இந்திரனுக்கு அடை. புரந்தரன் - இந்திரன்.

32. கொண்டல் - மேகம். பால்நீர் - பால்போன்ற நீரை. தொண்டைக் கனியைப்போன்ற வாயால் மடுத்து. பண்டி ஆர உண்டு - வயிறு நிரம்ப உண்டு. புவியெனும் மகள் மடுத்து, உண்டு, பெற்று, வீற்றிருந்தாளென்க.

33. மால்கள் ஓடிய - மயக்கங்கள் நீங்கிய. கால்கள் - வாய்க்கால்கள்; "பல, காலி னோடியுங் கண்ட தில்லை யே" (கம்ப. நாட்டுப்.)

34. பண்ணையில் - வயலில்; பண்ணையாய் - கூட்டமாகி. கங்கு -

தாயுங் கங்கை யணைத்தொழுங் காக்கிப்புல்
மேயும் பல்பகட் டேர்த்தொழின் மேயினர். (கஅ)

35. நீர டைத்திடு நீள்பெருங் கவ்வையும்
ஏரு கைக்கு மிளைஞர்கள் சும்மையும்
ஆர நென்முளை வித்து மரவமும்
கார டக்கிக் கடலொலி யாற்றுமால். (கசு)

36. பார்ம கட்கிடு பாடகம் பொற்சிலம்
பீர்ம லர்த்தொடை யேந்து மதாணிபோல்
நீர்வ யற்கு ணிறைத்து நெடும்பகட்
டேர்பி டித்துழு வார்மள்ள ரெங்குமே. (உ0)

37. மன்ன லம்பகட் டைமள்ளர் கட்டியேர்
துன்ன லம்பக வாக்கிடுஞ் சூல்வளை
இன்ன லம்பகத் தெய்திச் சொரிமணி
கன்ன லம்பக முத்தொடுங் காந்துமே. (உக)

38. மூன்று கண்ணுடைச் சட்டக மொய்விதை
மூன்று கண்ணுடை மூங்கிற் புழையிழீஇ

---

வரம்பின் பக்கம். பகடு - எருமைக்கடாக்களும் எருதுகளும். ஏர்த்தொழில் - உழுதல்.

35. கவ்வை, சும்மை, அரவமென்பன ஒலியென்னும் பொருளன. கார் - மேகமுழக்கத்தை; ஆகுபெயர்.

36. பாடகம், சிலம்பு என்பன காலணிகள். மதாணி - பதக்கம். உழும் சால்களுக்குப் பாடகம் முதலியன உவமைகள்.

37. மன்னல் அம் பகட்டை - நிலைபெறுதலையுடைய அழகிய எருதுகளை. ஏர் கட்டி - ஏரிற் பூட்டி. துன் அலம் பகவு ஆக்கிடும் - நெருங்கிய கலப்பையாற் பிளவுகள் செய்யப்படும். வளை இன்னலை அம்பு அகத்து எய்தி; வளை - சங்கு; இன்னல் - துன்பம்; அம்பு - நீர். மணி - முத்து. கன்னலிலும் அழகிய கொக்கினிடத்திலும் தோன்றிய முத்து; கன்னல் - கரும்பு; பகம் - கொக்கு. காந்தும் - ஒளி வீசும். கொழுவால் குத்தப்பட்ட சங்கு துன்பத்தை அடைந்து நீருக்குள்ளே சென்று சொரிந்த முத்து, கரும்பு முதலியவற்றிலிருந்து உண்டான முத்தோடு ஒளிவீசு மென்க.

38. மூன்று கண் - மூன்று துவாரங்கள். சட்டகத்தில் மொய்த்த விதை; சட்டகம் - விதையை இடும் குழிந்த கருவி; அதன்கணிட்ட விதை மூன்று மூங்கிற்புழைகளின் வழியே இறங்கி அக் கருவியிலுள்ள

மூன்று கண்ணல முன்கொழு வாய்விழல்
மூன்று கண்ணன்செய் முத்தொழி லாகுமே. (உஉ)

39\. மட்ட ருந்திய மள்ளர்கண் முன்முளைத்
திட்ட நாறு பறித்தெறி யும்முடி
நட்ட தங்குல நாரியர் பாற்படும்
பட்டம் யாவும் பறிப்பர் குதிப்பரே. (உங)

40\. விரக தத்திரு மென்கட் கடைசியர்
கரக தத்தொடு நட்ட கரும்பயிர்
மரக தக்கதிர் வாய்ந்து சுடரவன்
துரக தத்தெதிர் துன்னி வளர்ந்தவே. (உச)

**(கலிநிலைத்துறை)**

41\. களைய ருந்திய மள்ளர்நுங் கனியிதழ் முகங்கண்
களைய ரும்பகை நீர்நடுங் கரும்பயிர் தமக்கும்
களைய ரும்பகை யெனக்குமு தங்கஞ்சங் காவி
களைய ரும்பூ விலையுடன் கடைசியர் கட்டார். (உரு)

---

மூன்று கொழுவிலும் விழும். புழை - துவாரம். மூன்று கண்களை யுடைய அலத்தின் முன்னுள்ள கொழுவினிடத்தே விழுதல். மூன்று கண் - மூன்று கணுக்கள். இக் கருவி ஒரே முறையில் மூன்று வரிசை யாக விதையை விதைக்கப் பயன்படுவது. இது தொண்டை நாட்டில் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. சிவபெருமானே மும்மூர்த்திகளாக இருந்து படைத்தல் முதலிய மூன்று தொழில்களையும் இயற்றுதலை இங்கே உவமை கூறினர்.

39\. பட்டம் - வயலின் பிரிவு; "தண்பட்ட மேவும் வயல்" (**தஞ்சை.**) பறிப்பர்: பறிப்பவர் மள்ளர்கள்.

40\. விரக தத்து இரு மென்கண் - காமமாகிய ஆபத்தை விளைவிக்கும் இரண்டு மென்மையான கண்கள்; விரகம், காமமென்னும் பொருளில் வந்தது. கர கதத்தொடு - கையின் வேகத்தால். நெற்கதிருக்குத் துரகம் உவமை; "நிமிருங் கதிர்க்குலைச் செந்நெலை..........பரிமுகஞ் செய்து" (குமரகுரு. 445.)

41\. கள்ளை யருந்திய. களையரும் பகை - நும் இதழ் முதலியவற்றிற் கும் நும்மால் நடப்பட்ட பயிருக்கும் களைதற்கரிய பகை. காவிகளை அரும்பு, பூ, இலையுடன் கட்டார் என்க. இதழுக்குக் குமுதமும், முகத் திற்குத் தாமரைப் பூவும், கண்ணுக்குக் காவியும் உவமைகள்; நிரனிறை. இச் செய்யுள் யமகமன்று.

42. மழவ ராலுகள் பண்ணையிற் செந்நெல்வா ணேங்கிச்
செழிய வோரிலை புடைவளை இச் செழுங்கதிர் நிமிர்தல்
தழுவு பூம்புனிற் றிளங்குலை தாழ்ந்திட வதனை
டெழுத னிச்சுரு ளிலைக்குருத் தரம்பைக ளேய்க்கும். (உசு)

43. சுருக்க முற்றிடும் போதுயர் வடைதலுந் தொலைவில்
பெருக்க முற்றிடிற் பணிதலு மறனெனப் பேசும்
நெருக்கு செந்நெல்கள் வல்சிமுற் றுமுன்மே னிமிர்ந்து
பருத்த வல்சியும் படைத்துநேர் பழுத்தலும் பணிந்து. (உஎ)

44. வள்ளங் கொண்டகண் மடுத்திடு மள்ளரு மதர்த்துக்
கள்ளங் கொண்டகட் கடைசியர் குழாமுநெற் கதிரைப்
புள்ளங் கொண்டரிந் தரிசுமை யாக்கொடு போந்து
வெள்ளங்கொண்டவிண் ணுரிஞ்சுபோர் வரைகளின் வேய்வார்.

45. நீனி றத்தசெங் கட்கய வாய்நெறி மருப்பின்
மான லப்பகட் டினங்களாற் றெழித்துவை மாற்றி
ஈன முற்றிடு பொங்கழிப் பதடிமாற் றியபின்
பானி றத்தநெல் பற்பல வறங்களிற் பகுப்பார். (உகூ)

---

42. மழ வரால் - இளைய வராலென்னும் மீன். செழிய - செழுவிய என்பதன் திரிபு; கெழுவிய என்பது கெழியவென வந்ததைப் போன்றது இது. அரம்பைகள் - வாழைகள்.

43. வல்சி - அரிசி. நிமிர்ந்து பணிந்து பேசும் என்க. "பெருக் கத்து வேண்டும்" (குறள், 963) என்பதன் கருத்து இதில் அமைந்துள் ளது.

44. வள்ளம் - கிண்ணம். கள்ளை மடுத்திடு. புள்ளம் கொண்டு - அரிவாளைக்கொண்டு. அரியைச் சுமையாகக் கொண்டுபோந்து. வெள் ளம் கொண்ட போர்; வெள்ளம் - ஒரு பேரெண். போரை வரைகளைப் போல வேய்வார்; வரை - மலை.

45. கயவாய் - ஆழமான வாய். பகடு இனங்கள் - எருமைக் கடாக் களின் தொகுதி. தெழித்து - மிதிப்பித்து. பொங்கழி - தூற்றுத நெல். பதடி - பதர். பற்பல அறம்: "கொற்றவர் கடமை கொள்ளப் பண்டியிற் கொடுபோய்த் தென்னு, டுற்றவர் சுற்றந் தெய்வம் விருந்தினர்க் கூட்டி யுண்பார்", "துறவின ரீச னேசத் தொண்டினர் பசிக்கு நல்லூண், திறவினைப் பிணிக்குத் தீர்க்கு மருந்துடற் பனிப்புக் காடை, உறைவிடம் பிறிது நல்கி யவரவ ரொழுகிச் செய்யும், அறவினை யிடுக்க ணீக்கி யருங் கதி யுய்க்க வல்லார்" (திருவிளை. திருநாட்டுப். 28, 30) என்பவற்றைத் தழுவி வந்தது இச்செய்யுள்.

(கலிவிருத்தம்)

46. வாவி யெங்கு மகளிர் குடைகுவர்
காவி லெங்குங் களிமயி லாடுறும்
கோவி லெங்குங் குணின்முர சார்த்திடும்
மாவி லெங்கு மணிக்குயில் கூவுமால். (ருo)

47. சங்கை யேந்து தடத்தசெந் தாமரை
சங்கை யேந்துமம் மாயன்கை சாலுமாற்
கொங்கை யேந்து முகைச்செழுங் கோங்கினம்
கொங்கை யேந்துமக் கோதைய ரொத்ததே. (ருக)

48. நூல்ப டிப்பர் நுவல்பகற் போதுசெங்
கால்பி டிப்பர் கணிகையர்க் கல்லிடை
மால்கெ டுப்பர் வறிஞருண் டேலனம்
பால்கொ டுப்பரப் பாலிநன் னாடரே. (ருஉ)

49. சேந்தன் வாழ்திரு வேங்கட மும்முமை
காந்தன் வாழ்திருக் காளத்தி யுங்கழு
கேய்ந்த வெற்பு மிடைச்சுர மும்புகழ்
தோய்ந்த தாகுமித் தொண்டைநன் னாடரோ. (ருரு)

50. கூறு பொன்முக லிக்குளிர் கம்பைசே
யாறு வேக வதியருண் மஞ்சணீர்
மாறி லாத குசலை வளநதிப்
பேறு மேவும் பெருந்தொண்டை நாடரோ. (ருச)

திணைமயக்கம்

51. கரிய டைந்திடுங் கன்னற் படப்பைவேட்
டருவி தோய்ந்திடு மாழ்கட லோதிமம்

46. வாவி - தடாகம். குணில் - முரசடிக்குங் குறுந்தடி.

47. மாயன் - திருமால். கொங்கை - வாசனையை. கொங்கை ஏந்தும் - தனங்களை ஏந்திய. கோதையர் - மகளிர்.

48. பகற்போது நூல் படிப்பார். அல்லிடைக் கணிகையர்க்குக் கால் பிடிப்பார்; அல் - இரவு. அனமும் பாலும் கொடுப்பர்.

49. சேந்தன் - முருகக்கடவுள். கழுகு ஏய்ந்த வெற்பு - திருக்கழுக்குன்றம்.

50. மஞ்சணீர் - மஞ்சள்நீர் வாய்க்கால் (கந்த. திருநகரப். 95); இஃது ஆறென்றும் வழங்கும். குசலை - ஒரு நதி; குசஸ்தலையென்று வழங்கும்.

பரல ருந்திடு தூதுணம் பாங்கரின்
மருவு கொன்றை மரமிழல் வைகுமால். (௫௫)

52. அண்ட மாத ரருகிடை மின்னலாற்
கண்டல் பூத்திடுங் கானற் பரத்தியர்
கொண்ட லன்ன குழலெதிர் காண்டலும்
வண்ட லம்ப மலர்ந்திடு முல்லையே. (௫௬)

53. புன்னை யிற்கறி போய்ப்பட ருந்துகிர்
அன்ன வேங்கை யடரு மருதினில்
துன்னு முல்லை தொடரும் வயலைகள்
மன்னு கொன்றையின் வண்சினை தாவுமால். (௫௭)

(கலிநிலைத்துறை)

54. குடாவ டிக்கணோய் கொண்டுமுன் கூப்பிடு மொலியும்
கடாவ டித்துழு மள்ளர்தங் கடுங்குர லார்ப்பும்
முடாவ டித்தயிர் கடைந்திடு மாய்ச்சியர் முழக்கும்
கெடாவ டிக்கயல் விழிப்பரத் தியர்செவிக் கேட்பார்.

---

51. கன்னற் படப்பையைக் கரி அடைந்திடும்; கன்னற் படப்பை - கருப்பந்தோட்டம்; கரி - யானை. ஓதிமம் - அன்னம். பரல் - பருக்கைக் கற்களை. தூதுணம் - தூதுணம் புரு; புருவுள் ஒரு வகை. இச்செய்யுள் குறிஞ்சியும் மருதமும், நெய்தலும் குறிஞ்சியும், பாலையும் முல்லையும் மயங்கியதைக் கூறியது.

52. அண்ட மாதர் - இடைச்சியர். மின்னலாற் கண்டல் பூத்திடும்; "மின்பொ ருட்டிறைற் கேதகை மலர்ந்திடும்" (கந்த. மாயைப். 7.) அலம்ப - ஒலிக்க. இது முல்லையும் நெய்தலும் தம்முள் மயங்கியதைக் கூறியது.

53. கறி - மிளகுகொடி. துகிர் - பவளக்கொடி. மருது - மருத மரம். வயலை - பசலைக்கொடி. இதில் நெய்தலும், குறிஞ்சியும், மருதமும், முல்லையும் மயங்குதல் கூறப்பட்டது.

54. குடாவடி - கரடிகள். கண் நோய் கொண்டு; "கரடியாகக் கத்துதல்" என்று கரடி முழக்கத்தைக் குறித்து ஒரு பழமொழி வழங்கும். எருமைக் கடாக்களை அடித்து. முடா - மிடா; தயிர் கடையுந் தாழி. முடாவடியில் தயிர் கடையும்; "மொழிந்த தேனுடை முகிழ்முலை யாய்ச்சியர் முடாவிற், பிழிந்த பால்வழி நுரையினைப் பொருவின பிடவம்" (கம்ப. கார்காலப். 47.) வடிவிழி, கயல்விழி, என்க; வடி - மாவடுவின் வகிர்; கூர்மையுமாம். இதில் குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் நானிலங்களும் மயங்கினமை கூறப்பட்டது.

# 5. திருநகரச் சிறப்பு

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

55. இத்தகை வளங்கு லாவு
மெழில்பெறு தொண்டை நாட்டின்
மத்தியிற் காஞ்சி மூதூர்
வடக்கிரண் டியோச னைத்தாய்ச்
சித்திசேர் திருக்கா ளத்தித்
தெனுதியோ சனையோ ரைந்தாய்
மைத்தகீழ் கடற்கு மேல்பால்
வகுத்தயோ சனையு மைந்தாய். (க)

56. விரிஞ்சைமா நகர்க்குக் கீழ்பால்
விளம்பும்யோ சனையைந் தெல்லை
திருந்துசீர்த் தணிகை யென்னுந்
திருநக ரொன்றுண் டின்பம்
பொருந்துமந் நகரின் வண்மை
புகலொணு தமரர்க் கேனும்
அருந்துறு மார்வத் தாலே
யறைகுவன் சிறிதஞ் சாமல். (உ)

57. பொன்னகர் தனக்கும் வேதன் புதுநகர் தனக்கு மாயோன்
தன்னகர் தனக்குஞ் செல்வந் தணிகைவே லவனே தந்தான்
பன்னகர் முனிவர் சித்தர் பண்ணவர் வணங்கி யேத்தும்
இந்நகர் தனக்கொப் பீரே ழுலகினு மில்லை மாதோ. (ங)

58. அன்னமா நகர்சூ ழிஞ்சி யாழிமால் வரையே யாகும்
பின்னல்வார் திரைக்கி டங்கும் பெரும்புறக் கடலே நாப்பண்
மன்னிய வரையு மேரு மால்வரை தன்னை மானும்
பன்னரும் வீதி யாவும் பாரில்வாழ் நகர்க ளாமே. (ச)

59. அந்தணர் வீதி யெங்கு மருமறை முழக்க மாரு
கொந்தலர் மன்னர் வீதி குணில்பொரு முரச மார்க்கும்

---

56. விரிஞ்சை - விரிஞ்சீபுரம்.

59. சந்தை - பொருள்கள் வாங்குதற்குக் குறித்த காலத்திற் சனங்

தந்திர வணிகர் வீதி சந்தையி னெலிமிக் காகும்
உந்துசூத் திரர்தம் வீதி யுழுதொழின் முழக்க மோவா. (ரு)

60. ஆடரங் கெங்குங் கூத்த ரணிமயில் போன டிப்பார்
பாடரங் கெங்கு நல்யாழ்ப் பாணரே ழிசைப டிப்பார்
கோடரச் சோலை யெங்குங் கொழுங்கனன் மகமு டிப்பார்
நீடர வல்கு லார்மே னிலையெங்கும் பந்த டிப்பார். (சு)

(கலிநிலைத்துறை)

61. வச்சி ரத்தியன் மாடத்தின் மாடுற வயங்கும்
பச்சை ரத்தின மாளிகை தோன்றுதல் பதுமக்
கைச்சி ரத்தவ னீற்றொளி மேனியிற் கலந்த
அச்சு தற்கிளை யாளெனு மம்பிகை புரையும். (எ)

62. சித்தி ரத்தியன் மாளிகை செறிந்தவர் செழுங்கண்
அத்தி ரத்தியல் கணிகையிற் புகுந்தவ ராவர்
நித்தி லத்திருப் பந்தர்சூழ் பளிக்கறை நின்றோர்
பத்த ரிற்புகும் பத்தர்தந் தூய்மையிற் பயில்வார். (அ)

63. பவள மாடத்தைப் பார்ப்பவர் பரிதிதே ரென்பார்
தவள மாடத்தைச் சந்திரன் விமானமீ தென்பார்
கவள யானையின் கவுளிழி மதங்களைக் கண்டோர்
குவளை வெற்பினிற் குலவுதே னருவியாக் குறிப்பார். (கூ)

64. சந்த னப்புகை தவழ்தரு தமனிய மாடம்
நந்து றும்பனி சூழும்பொன் னகத்தெழி னண்ணும்

---

கள் கூடும் கடைகள் உள்ள இடம்; "எண்ணுறு மணியின மிரையுந் தன்மையாற், றண்ணுறு நந்தனம் வண்டின் சந்தையே" (பிரபு. கொக்கி. 6.)

60. கூத்தரென்றது இங்கே பெண்பாலாரை; இஃது அரிய வழக்கு. கோடரம் - மரக்கிளை. மேனிலை - மேன்மாடம்.

61. பதுமக்கை - தாமரை மலர் போன்ற திருக்கரத்தில்.

62. சித்திரத்து இயல் மாளிகை - சித்திரசாலை. கணிகை இல் - கணிகையின் வீடு. அங்கே மயங்கிச் செயலற்று நிற்பார் என்றபடி.

63. குவளைவெற்பு - தணிகைமலை. யானை மதப்பெருக்கிற்குத் தேனருவி உவமை.

64. நந்துறும் - மிகும். பொன்னகம் - இமயமலை. இந்து - சந்திரன். வந்து அன்னத்தின் கூட்டம்; "சிலைக்கையாற்குக், குற்றேவல் செய்யுங் கொடியன்னவர் பான டக்கக், கற்று டரம்பை பயில்வானடை

இந்தெ னத்திகழ் முகத்திய ரியனுமே னிலத்தில்
வந்த னக்குழா நடைகற்று வானயா றமரும். (௬0)

65. பளிக்கு மாடமே னிலவிய பைம்பொனீண் மாடம்
களிக்கு மந்தர மிசைப்பயில் கடவுள ருலகே
அளிக்கு நீலமா ளிகைமிசை யரதன மாடம்
துளிக்கு மேகமண் டலமிசைச் சூரிய னுலகே. (௬௬)

66. மாட மாளிகை மண்டப மம்பலந் தெற்றி
கூட கோபுரங் கொடிமதில் கழகஞ்செய் குன்றம்
ஆட ரங்குபா டரங்கறச் சாலைக ளயனூர்
தேடி மாதிரி யாகமுன் செய்வித்த வொக்கும். (௬௨)

67. தணிகை மாநகர் தனின்மிகு சவுந்தர மான
கணிகை மாதர்தந் தொழுத்தைபாற் கலவிநூன் முற்றும்
துணிகை யாலிர தியுமத னொடுசுர தத்தை
நணுகி னுளெனி னவர்சுர தத்தையார் நவில்வார். (௬௩)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

68. பொற்கொடி நுடங்கு மாடப்
புதுநிலா மணிமுற் றத்தில்
மிற்கொடி யிடைநல் லார்தம்
விருப்புறு கணவ ரோடு
தெற்கொடு வடக்கு மாறிச்
சிதையினுஞ் சிதையாப் போகம்
புற்கொடுங் கரத்து வாழும்
புண்ணிய நண்ணி னாரே. (௬௪)

---

காட்டு கிற்பேன்" (நைடதம், அன்னத்தைத். 71) என்னும் பாட்டின் கருத்தைத் தழுவியது இது. வானயாறு - ஆகாயகங்கை.

65. பளிக்கு - பளிங்கு. அந்தரம் - ஆகாயத்தின் கீழுள்ள உலகு.

66. தெற்றி - நகர உறுப்பினுள் ஒன்று. கழகம் - கல்விச்சாலை. மாதிரி - கட்டளை; ஒப்பு; 'மாதிரிகா' என்னும் வடமொழிச்சிதைவு; (வெங்கையுலா. 232; சீகாளத்தி. நக்கீர. 8.)

67. தொழுத்தை - வேலைக்காரி; "புறத்திரு போகென்னு மின்னுச்சொலில்லுட், டொழுத்தையாற் கூறப் படும்." (நாலடி.) துணிகையால் - துணிந்து கற்றலினால்.

68. மிற்கொடி - மின்னற்கொடிபோன்ற. புல் கொடுங் கரத்து - புல்லுதலையுடைய வளைந்த கைகளில்.

69. விண்டொடு புரிசை மூதூர்
வியனகர் மடவா ரேரைக்
கண்டர மகளிர் நாணிக்
கண்டுழிச் செலுந்தங் காதல்
அண்டரை விடாது புல்லி
யல்லினும் பகலி னுங்கண்
பண்டரத் துயில்கி லாராய்ப்
பரிந்திமை பொருந்தி லாரே. (கரு)

70. வாளரம் பொருத வேற்கண்
வதனத்தை மதியென் றெண்ணிக்
கோளர வினந்தொ டாமற்
குவளையங் கிரிவாழ் நல்லார்
சாளரம் புகும திக்குத்
தடவுமைக் குறியை வாணி
நீளரங் கெனுநா வாணர்
நிகழ்த்துவர் களங்க மென்றே. (கசு)

(கலிவிருத்தம்)

71. அறிவினிற் றாழ்ந்தன னனந்தன் கல்வியிற்
குறுகின னகத்தியன் குபேரன் செல்வத்தில்
வறியனு யோடினன் வடக்கின் மாரனோர்
மறுகினுன் றணிகைவாழ் மைந்தர்க் கண்டரோ. (கஎ)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

72. ஏற்பவ ரின்மை யாலே யீபவ ரில்லை போரிற்
றேற்பவ ரிலாமை வென்றி சொல்பவ ரொருவ ரில்லை

70. வாளரம் - ஒருவகையரம்; இக்காலத்து ரம்பமென்று வழங்கும்; "வாளரம் பொருத வேற்கண்" (சீவக.) சாளரம் - நுழைவாசல். வாணிக்கு அரங்கமாகிய நாவையுடைய புலவர்; வாணி - கலைமகள்.

71. வடக்கில் ஓடுதல் - உத்தரகமனம்; தோற்றவர் வடக்கே ஓடிப் பிழைத்தல் வழக்கம்; "பெரும்பதிக் குவமையும் பெருமல், மறக்கடுங் களிற் றுக் குபேரன்வா ழளகை வடக்கிருந் தது" (வி. பா, இந்திரப். 25.) "வறிய னவன்" (பிரபு. மாயை யுற்பத்தி. 5) என்பதைப் போன்றது இச் செய்யுள்.

72. "வண்மை யில்லையோர் வறுமை யின்மையால், திண்மை யில்லை நேர் செறுந ரின்மையால், உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்,

நூற்பொரு ளுணர்த லாலே நுண்பொரு ளுரைப்போ ரில்லை
மேற்படு தணிகை யென்னும் வியனக ரிடத்து மாதோ. (௧௮)

73\. காரொடு பனியே கூதிர்க் காலத்து மடவார் கொங்கை
சேர்தரு வெப்பந் தன்னாற் செறிகுளி ருதைக் கஞ்சார்
நாரியர் தனங்கு ளிர்ச்சி நல்கலால் வேனிற் காலத்
தாருமுட் டினத்துக் கஞ்சா ரந்நகர் வாழு மாந்தர். (௧௯)

(கலிவிருத்தம்)

74\. தருவ ளத்தணி கைக்கணோர் சத்திரப்
பெருவ ளத்தினைப் பேச மயங்குவன்
மருவ ளக்கம லாசனன் மற்றெவர்
தெருவ ளத்தினைச் செப்புந் தகையரே. (௨௦)

75\. மாட மீது மருவு மகிழ்நர்பால்
ஊடு மாத ருகுத்தபன் மாமணி
கூடி நாளுங் குலாவு பனிக்கடல்
ஆடு மாரத்தி னாகர மாயதே. (௨௧)

76\. சொன்ன மாளிகை மீதுறு தோகைநேர்
அந்ந லாருரு வாவதற் கன்றுகொல்
மின்ன லானது விண்ணி லடிக்கடி
இன்னு மாய்ந்திட் டெடுக்கு முருப்பல. (௨௨)

77\. துறந்தி டாவளந் துன்னுந் தணிகையிற்
சிறந்த மாதர் திருநுத லாகவே
குறைந்து பார்க்குங் குளிர்முக மாகவே
நிறைந்து பார்க்கு நிலாமதி யின்னுமே. (௨௩)

78\. மாத ரேழ்நிலை மாடத் தமளியிற்
காத லாரொடு செய்யுங் கலவியால்

---

வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்" (கம்ப. நாட்டுப். 53) என்பதோடு இச்செய்யுளை ஒப்பிடுக.

74\. கமலாசனன் மயங்குவன் என இயைக்க.

75\. மாரத்தினாகரம் - பெரிய கடல்; ஆரத்தின் ஆகரமெனப் பிரித்து முத்துக்கு இருப்பிடமாயிற் றென்பதும் பொருந்தும்.

76\. சொன்ன மாளிகை - பொன்னாலான மாடம்.

77\. பிறையை நெற்றிக்கும், முழுமதியை முகத்திற்கும் உவமை கூறுதல் மரபு.

நோத நீர்தர நொய்ஞ்சிறை யோதிமம்
மீது லாங்கங்கை நீர்கொடு வீசுமால். (உச)

79. பந்த டித்திடும் பாவையர் நுண்ணிடை
நொந்தி ளைத்திட னோக்கிய பைங்கிளி
வந்து ரைப்ப மனமகிழ்ந் தேசல்போல்
மைந்து டைக்குயின் மாவினிற் கூவுமால். (உரு)

80. குழலும் யாழுங் குயிலு மடநலார்
மழலை யஞ்சி வளைசுரை கான்புகும்
முழவுங் கோடு முருடுந் தடாரியும்
மழையி னுன்கு மடியெழுந் தார்க்குமே. (உசா)

81. கரியி னோதை கடிமுர சோதைவாம்
பரியி னோதை பணிலத்தி னோதைதேர்
திரியு மோதை தெரிவையர் கைவளைச்
சரியி னோதை சலதியைத் தட்குமே. (உஎ)

82. காரைத் தீண்டுங் கடிபொழில் காய்கதிர்த்
தேரைத் தீண்டுந் திருமதி றிங்களின்
ஊரைத் தீண்டு முயர்கொடி கற்பக
வேரைத் தீண்டும் வியன்மணிக் கோபுரம். (உஅ)

83. ஆவ ணங்க ளலைகடன் மானும்பூங்
காவ ணங்கற்ப காடவி மானுமே
தேவ ணங்கு தணிகைச் சிறப்பினை
நாவ ணங்கு நவிலவல் லாளரோ. (உகா)

---

78. நொய்ஞ்சிறை - மெல்லியசிறை; நொய்ம்மை - மென்மை. இக்கருத்து, "துளிதூங் கியவா னதிதோய்ந் துநறுங், குளிர்தூங் குகுறுந் துளிமென் சிறையால், களிதூங் கியகா மவிடா யகல, நளன்மே னியில்வீ சுவநன் குறவே" (நைடதம் அன்னத்தைத். 63) என்பதை அடியொற்றி வந்தது.

79. மகளிரின் சோர்வையறிந்து ஏசுதலைப்போல.

80. நிரனிறை. வளை - மூங்கில். வீணையின் உச்சியில் சுரைக்காயை வைப்பதுண்டு; வீணை சுரையிற் புகும். குயில் காட்டிற் புகும். முருடு - மரத்தாற் செய்யப்பட்ட ஒரு வாத்தியம். நான்கு மடி - நான்கு மடங்கு.

81. சலதி - கடலின் ஓசை. தட்கும் - தடுக்கும்.

83. ஆவணம் - கடைவீதி. நா அணங்கும் - நாமகளும். நவில வல்லாள் - கூறும் வன்மையில்லாள்; அரோவென்பது வினைப் பொருளும் எதிர்மறைப் பொருளும் பெற்றுவரும் நூல் வழக்குண்மையின்; இங்கே வல்லாளோ வென்னும் வினைவைப் போலக் கொண்டு வன்மையினை ளல்லளென்று பொருளுரைத்தலும் பொருந்தும்.

# 6. நைமிசாரணியச் சிறப்பு

[கதைச் சுருக்கம்: முன்னொரு காலத்தில் முனிவர் பலர் கூடிப் பிரம தேவரிடம், "யாம் ஒருங்கே யிருந்து தவம்புரிவதற்கேற்ற இடம் ஒன்றைக் கூறியருளவேண்டும்" என்று வேண்டினர். பிரமதேவர் தருப்பையை ஒரு சக்கரம்போலச் செய்து அதனை உருட்டிவிட்டு எவ்விடத்தில் அது தங் கிற்றோ அங்கே இருந்து தவம்புரியும்படி கட்டளையிட்டனர். அங்ஙனம் உருட்டிய தருப்பைச் சக்கரம் வந்து நின்ற இடமாகிய காடே நைமிசாரணியமென வழங்கும்.

அவ்வாரணியத்தில் பல வகை மரங்களும் நதிகளும் மான் முதலிய விலங்குகளும் குயில் முதலிய பறவைகளும் உள்ளன. அங்கே பல முனிவர் தவம் புரிந்து வாழ்வர்.

ஒரு நாள் அவ்வனத்துக்குச் சூத முனிவர் எழுந்தருளினர்; நைமிசாரணிய முனிவரனைவரும் அவரை வணங்கித் துதித்து, "தேவரீர் எங்களுக்குப் பதினெண்புராணங்களையும் ஸ்மிருதிகளையும் முன்னம் திருவாய் மலர்ந்தருளினீர். அப்புராண வரலாறுகளுள் தணிகாசல மான்மியம் அதிக ரகசியமென்றும் உரைத்தீர். அதனை இன்னும் விரித்துக் கூறவேண்டும்" என்று வேண்டி நிற்ப அம்முனிவர்பிரான் கூறத் தொடங்கினர்.]

(கலிநிலைத்துறை)

84. ஈர வாசினிக் கனிபழுத் திரும்புவி வெடிப்ப
வேரன் மீதுதூங் கிறால்கிழிந் தொழுகுதேன் விரவச்
சாரன் மந்திதேன் சுளையொடு பிசைந்துண்டு தருக்குஞ்
சூரல் பம்பிய நைமிச வளந்தொகுத் துரைப்பாம். (க)

85. மூந்து மாதவ ரனைவரு முடியினால் வணங்கி
எந்தை யாந்தவம் புரியுநல் லிடம்புக லென்ன
அந்த நான்முக னுருட்டிய தருப்பையந் திகிரி
வந்து நின்றிடுஞ் சூழனை மிசமென வயங்கும். (உ)

86. தீமிக் காட்டயர் நுதல்விழி மான்மழுத் திருக்கைச்
சாமிக் காட்படுந் தவத்தினர் மகத்தினைத் தணவா

---

84. சூரல் - பிரம்பு; "சூரல் பம்பிய சிறுகான் யாறே" (யா. கா. மேற்.)

85. திகிரி - சக்கரம். நைமிசம் - நேமி சம்பந்தமுள்ள காடு; நேமி - சக்கரம். சூழல் - இடம்.

86. தீ மிக்கு ஆட்டு அயர் - நெருப்புக் கொழுந்து விட்டு அசைகின்ற;

நேமிக் காட்டினுக் கிணையென நிகழ்த்தலாந் தகைத்தோ
பூமிக் காடெலாங் கற்பகக் காடுமே புரையா. (௩)

87. ஆலங் காடுவேற் காடுமாங் காடடர் பனங்கா
டேனுஞ் செங்கடம் பாடவி பதரிகாச் சிரமம்
மாலங் காடுவேய் வனஞ்சம்பு வனமறைக் காடு
போலொன் றன்றிமற் றிவையெலா நைமிசம் பொருந்தும்.

88. காயுங் கந்தமுங் கனியும்பச் சிலைகளுங் கஞலிப்
பாயுந் தேன்மலர்ச் சோலைகள் குளிர்நிழல் பரப்பித்
தோயுந் தண்புனற் கானயா றும்புடை சூழ
மேயும் பன்னிரை சூலாயது நைமிச விரிகான். (௫)

89. அரக்க ராலழி யாதவல் லரணமா யமரர்க்
கிரக்க மாமுனி வோர்மக மியற்றுவ தாகித்
தரைக்கண் மேம்படு தவமெலா மளிப்பது தாவும்
மரைக்க ணங்கலை யொடும்பயி னைமிச வனமே. (௬)

90. குயில்பி டித்திடக் காகளம் வண்டிசை கூட்ட
மயின டித்திடக் கிள்ளைகண் மங்கலம் பாடப்

---

இது நுதல்விழிக்கு அடை. சாமி - பரமசிவன். நேமிக்காடு - நைமிசாரணியம். தகைத்தோ - பன்மை ஒருமை மயக்கம். காடெலாம் தகைத்தோ.

87. மாங்காடு - மாயூரம்; அத்தலத்திற்குரிய சூதவனமென்னும் வடமொழிப்பெயர் இதனை வலியுறுத்தும்; திருவுசாத்தானத்திற்கும் சூதவனமென்னும் திருநாமமுண்டு; தொண்டை நாட்டிலுள்ள மாங்காடென்னும் பழைய தலமுமாம். கடம்பாடவி - மதுரை. பதரிகாச்சிரமம்: பதரி - இலந்தை மரம். மால் அங்கு ஆடு வேய் வனம்; மால் - மேகம். வேய் வனம் - திருநெல்வேலி, திருப்பாசூர். சம்புவனம் - திருவானைக்கா; சம்பு - நாவல் மரம். ஆலங்காடு முதலியவற்றிற் கூறப்பட்ட மரங்களுள் ஒவ்வொன்றே உள்ளது; இவ்வனத்தில் அம்மரச் சாதிகளிற் பல உள்ளன.

88. கந்தம் - கிழங்கு. கஞலி - நெருங்கி. சோலைகள் - இந்த வனத்திற்கு அங்கமாகிய சிறு சோலைகள்; 90-ஆம் பாடலைப் பார்க்க.

89. அமரர்க்கு அரணமாய்; அரணம் - பாதுகாக்கும் இடம். நைமிசவனம் அளிப்பதென இயைக்க. மரைக்கணம் - இங்கே, மான் கூட்டம். கலை - கலைமான்.

90. குயில் காகளம் பிடித்திட. இசை கூட்ட - சுருதி கூட்ட. மர்க்கடம் - குரங்கு. கயில் - பிடரி. மகிழ்ச்சியைப் புலப்படுத்தி அசைப்ப. அசைத்திடும் பொழில் - அசைத்தற்கு இடமான பொழில் பொழில் - இந்தச் சோலைக்கு அங்கமான சிறு சோலை; பொழிற் சோலையெனவரும் நூல்

பயிலுங் கொன்றைபொன் சொரிந்திட மர்க்கடம் பார்த்துக்
கயில சைத்திடும் பொழில்குலா நைமிசக் கானம். (எ)

91. கோங்கு பாதிரி கொன்றைகா யாவழை குருந்தம்
வேங்கை மாதவி தாதகி சந்தனம் வெள்ளில்
பூங்க ருப்புர மிலவங்கங் குங்குமம் புன்னை
தாங்கு பன்மலர் தந்திடு முனிவரர்ச் சனைக்கே. (அ)

92. காம னைக்கொடு காமனை வென்றுகா மனைப்பூ
மாம னைப்பிர மனைவிடா மாமனை துறந்தோர்
சோம னைப்பொடித் தேயரைச் சோமனைத் தலைக்கொள்
சேம னைத்தொழு துறையுநற் சேமனை மிசமே. (கூ)

93. கால ருந்தியுங் காலையுள் ளடக்கியுங் காயத
தோலின் பற்றறத் தொலைத்துநன் மனுவழி தொடர்ந்தும்

---

வழக்கறிக. ஒருவர் காளம் பிடிக்க, ஒருவர் சுருதி கூட்ட, ஒருவர் நடிப்ப, ஒருவர் மங்கல கீதம் பாட, ஒருவர் பரிசிலாகப் பொன் சொரிய, ஒருவர் மகிழ்ந்து தலையசைக்கின்றன ரென்னும் மற்றொரு பொருள் தோற்று கின்றது; "பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக், கிருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழிற், குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட, மழலை வண் டின நல்லியாழ் செய்ய, வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர், மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்" (மணி. ச: 1 - 6.)

91. காயா - காயாமரம். வழை - சுரபுன்னை. மாதவி - குருக்கத்தி. தாதகி - ஆத்தி. வெள்ளில் - விளாமரம். கருப்புரம் - கருப்புர மரம். இலவங்கம் - கிராம்பு. கோங்கு முதலிய மரங்கள் அருச்சனைக்கு மலர் களைத் தருவதற்கு இடமாக உள்ளது நைமிசமென்க. இச் செய்யுளில் மரப்பெயர்கள் அடைமொழி யில்லாமலே அமைக்கப்பட்டமை காண்க.

92. கா மனைக்கொடு - சோலையையே வீடாகக்கொண்டு; காமனை - மன்மதனை; கா மன்னை - கற்பகச் சோலையின் அரசனாகிய இந்திரனையும். பூ மா மன்னை - தாமரைப் பூவிலுள்ள திருமகளின் தலைவனாகிய திருமாலை யும். விடா - விட்டு விட்டு, மா மனை துறந்தோர் - சிறந்த மனைவியைத் துறந்த முனிவர். சோ மனை - திரிபுரங்களாகிய இடங்களை; மனை - இடம். பொடித்து - சாம்பராக்கி: அரைச் சோமனை - பாதிச் சோமனை; "பாதி மதிநதி போதுமணிசடை நாதர்" (திருப்புகழ்.) சே மன்னை - இடபத்திற்குத் தலைவராகிய இறைவரை; மன்னை: தொகுத்தல். உறைதற்கு நல்ல இட மாக உள்ளது நைமிசம். நைமிசமென்பது மடக்கணி பற்றி னைமிசம் என வந்தது. துறந்தோர் தொழுது உறைதற்கு இடமாகவுள்ளது நைமிசமென்க.

93. இச் செய்யுள் யோகியர்க்கும் பாம்பிற்கும் சிலேடை. கால் - காற்று. காலருந்தல், பொது. காலை உள்ளடக்கல் - (பாம்பிற்குக் கொள்

ஆலந் தோய்தரு வனப்பையேய்ந் தைம்பொறி யடக்கிச்
சால யோகியர் போகிபோற் றவஞ்செய்வை மிசமே. (கo)

94. சத்தி யஞ்சமந் தமமுத லானசற் குணத்தோர்
நித்தி யந்தழன் மூன்றையும் வளர்ப்பவர் நிமலன்
பத்தி யஞ்செழுத் தேமுதற் பன்மனுச் செவிப்போர்
மொய்த்த வந்தண ருறைவது நைமிச முளரி. (கக)

95. குரங்கு மாதவ முதியவர் குன்றினின் றிழிகால்
இரங்கு மாதவம் படாவகை சத்திர மெடுக்கும்
கரங்க டாவவா னீட்டிடுங் கமண்டலங் கலைத்தோல்
சிரங்கு லாவுறச் சுமந்துபோ நைமிசத் திருக்கான். (கஉ)

96. கரியுஞ் சிங்கமுங் கலைகளும் புலிகளுங் கலந்து
திரியுங் கானெலாந் தேடிநன் மலர்கனி கந்தம்
விரியும் பச்சிலை யுங்கொடு போந்துமெய்த் தவர்கள்
புரியும் வேள்விகாத் திருப்பது நைமிசம் புகலின். (கங)

---

ளுங்கால்) புறத்தே தோன்றுமல் பாதத்தை உள்ளே அடக்கிக் கொள்ளுதல். பாம்புக்குக் காலுண்டென்பதை, "பச்சைத்தா ளரவாட்டி" (திருவா. திருவேசறவு, 4), "பசுந்தாட் பாம்பிறைப் புரிநூல்" (திருவிளை. திருவாலவாயான. 20) என்பவற்றால் அறிக. யோகியர்க்குக் கொள்ளுங்கால், காலடக்கல் யோகாசனத்துள் ஒருவகையெனக் கொள்க. தோல் - பாம்புக்குச் சட்டை; யோகியர்க்கு உடம்பு; "உற்றார்க் குடம்பு மிகை" (குறள், 345) என்றார். மனு - மந்திரம், மனுஸ்மிருதி. ஆலம் - விடம், தீர்த்தம். தோய்தல் - தோய்ந் திருத்தல், நீராடல். வனப்பை - அழகியபடம், அழகை. ஐம்பொறி - ஞானேந்திரியமைந்து, நொய்யவாகிய புள்ளிகள். போகி - பாம்பு.

94. சமம் - அகக்கரணத்தை யடக்குதல். தமம் - புறக்கரணத்தை யடக்குதல். தழல் மூன்றையும் வளர்ப்பவர்: "அந்தி யந்தண ரருங்கடனிறுக்கும், முத்தீ" (புறநா. உ: 22-3.) பத்தி - பக்தி. மனு - மந்திரம். செவிப்போர் - ஜபிப்போர். முளரி - காடு.

95. இழிகால் - இறங்குங்காலத்து. ஆதவம் - வெயில். சத்திரம் - குடை. குரங்கு எடுக்குமென்க. கலைத்தோல் - மான்தோல். போம் - போகாநிற்கும்.

96. பகையுள்ளவை பகையின்றி அங்கே கலப்புற்றன. கந்தம் - கிழங்கு. சிங்கம் முதலியவை கலந்து தேடிக் கொடுபோந்து காத்திருத்தற்கு இடமாக உள்ளது நைமிசக்கானம்.

97\. சருக ருந்தியும் வறும்புன லுண்டுமூண் டவிர்ந்தும்
நரக சொர்க்கமார் வினைவழி நடந்துழன் மனமாம்
துரக தத்தினைச் சுழுமுனைக் கால்பிடித் தீர்க்கும்
விரக றிந்தவர் நைமிசத் துறையுமெய்த் தவரே. (கச)

98\. வேதத் தந்தமு மாகமப் பொருளுமே வினவிச்
சோதித் தொன்றெனத் தெளிந்தவர் சோமசே கரன்பொற்
பாதத் தன்பினர் புராணமீ ரொன்பதும் பகர்ந்த
சூதற் கேவல்செய் விருப்பினர் நைமிசத் துறவோர். (கரு)

99\. சடையர் முண்டிதர் சீரையர் வெற்றரை சமைந்த
நடையர் வெண்பொடி புனைந்தவர் நலத்தகண் மணியின்
தொடையர் தண்டினர் கமண்டலந் தூக்கிய கையர்
விடைய வாதனை தணந்தவர் நைமிச மேயார். (கசு)

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

100\. இத்தகு வனத்திற் சத்திர வேள்வி
யியற்றிடப் பூதலத் துறையும்
மெய்த்தவர் பலரு மவர்பணி செய்து
விளங்குமா ணாக்கரும் வந்து
மொய்த்தனர் வேலை யேழுமோ ரிடத்தின்
முடுகிவந் திறுத்தென வவருட்
சித்திபெற் றுயர்ந்த தபோதனர் பெயருஞ்
சிலவெடுத் தினிவகுத் திடுவாம். (கஎ)

---

97\. ஊண் - உணவை. ஆர் வினைவழி - அனுபவித்தற்குக் காரணமான வினை; ஆர்தல் - அனுபவித்தல். வினை - தீவினை நல்வினை. துரகம் - குதிரை. சுழுமுனைக் கால் - சுஷும்நா நாடிவழியே மேற்செல்லுங் காற்று; இடைக்கும் பிங்கலைக்கும் நடுவே உள்ளது. ஈர்க்கும் - இழுக்கும். விரகு - உபாயத்தை. தவர் விரகு அறிந்தவரென்க.

98\. வேதத்து அந்தம் - உபநிடதம். சூதன் - சூதமுனிவர்.

99\. முண்டிதர் - தலைமழித்தவர். சீரை - மரவுரி; "சீரை தைஇய வுடுக்கையர்" (முருகு. 126.) வெறு அரை - நிர்வாணம். கண்மணியின் தொடையர் - உருத்திராக்க மாலை யணிந்தவர். விடையவாதனை - விஷய வாசனை.

100\. சத்திரவேள்வி - பலநாள் செய்யும் யாகம். வேலை - கடல். இறுத்தென - தங்கினாற் போல. இறுத்தென மொய்த்தனரென்க. சித்தி - அணிமாமுதலிய எட்டுவகைச் சித்திகள். தபோதனர் - தவத்தையே தனமாக உடையவர்.

101. பிருகுதுர் வாச னுக்கிர சீலன்
பிருங்கியா பத்தம்பன் சுமதி
அரிதகன் காத்தி யாயனன் கபில
னகத்திய ஞரதன் பங்கு
கருணனங் கீர சன்சதா னந்தன்
கலாதரன் விபாண்டகன் கவிபப்
புருபரத் துவசன் சுதீக்கணன் காலன்
புதன்சுகன் பண்டிதோத் தமனே. (௧௯)

102. கவுதமன் சாபா லன்சுமந் தரனே
காசிபன் குண்டலன் விருத்தன்
கவுசிகன் போதா யனன்வசு விண்டு
கானன்காண் டிப்பியன் வாரன்
பவுலனத் திரிசுப் பிரன்சர பங்கன்
பராசரன் பக்குவன் பவு॥ன்
சவுனகன் மாண்ட வியன்பரந் தபன்சற்
சரன்சத்தி மூற்கலன் கணுவன். (௧௬)

103. வாமதே வன்றே வலன்பருப் பதன்கை
வல்லியன் சங்கமன் சுமனன்
சாமதக் கினிசா தாதப னிரதி
தன்சம தக்கினி சயனே
தூமபன் கால வன்பாச தரனே
தூயசத் தியனிவர் முதலா
ஏமுறும் பலவே றுருவினர் பலரு
மெய்தியாங் கிருக்குமேல் வையினில். (௨௦)

104. செஞ்சடை யசைய வெண்பொடி மேனி
திங்களி னிளநிலா வெறிப்ப
வஞ்சனை யகற்று மக்கமா மணித்தாழ்
வடந்திரு மார்பிடைப் புரள

---

101. கவியும் பப்புருவும்.

103. ஏமுறும் - ஏமம் உறும்; ஏமம் - இன்பம்.

104. அக்கமாமணித் தாழ்வடம் - ருத்திராக்ஷமாலை. செங்கல் - காவிக்கல்; "கல்லாடை யும்புனைந்து காட்டுவார்." (திருவிடைமருதூருலா.)

விஞ்சிய செங்கற் றோய்த்தபூங் காவி
வேட்டியு மரையினில் விளங்க
உஞ்சிட வுலகம் புராணமீ ரொன்ப
துரைத்திடு சூதனு மடுத்தான். (உக)

105. தொக்கமா தவர்க ளனைவரு மெழுந்து
சூதனை யெதிர்கொடு பணிந்து
மிக்கவா தனத்தி லிருத்தியா கமத்தின்
விதித்திடு பூசனை புரிந்து
துக்கவா தனையைத் தீர்த்திடு புராணஞ்
சொற்றிடு நற்றவ வென்று
தக்கவர் புகழ்ந்து மகிழ்வெனுங் கடலுட்
டாழ்ந்துதாழ்ந் தெழுந்திது புகல்வார். (உஉ)

106. நிகமவா கமங்க ளனைத்தையு முணர்ந்தீர்
நீரறி யாததொன் றில்லை
இகழ்விலீ ரொன்பான் புராணமீ ரொன்பான்
மிருதிநீ ரியம்பநன் குணர்ந்தோம்
துகளிலா வுமது முகாரவிந் தத்திற்
றோன்றிய கதாரச வமுதைத்
திகழும்வார் செவியாற் புசித்தினி திருந்துந்
திருத்தியொன் றிலமிது வரையும். (உ௩)

107. முன்னநீ ருரைத்த கதைகளிற் றணிகை
முதுகிரி மான்மிய மெவற்றும்
உன்னிடி னதிக ரகசிய மென்ன
வுரைத்தனிர் யாமது கேட்பான்

---

உஞ்சிட - உய்ந்திட; உலகம் உஞ்சிட. அசையா, எறிப்ப, புரள, விளங்கச் சூதனும் அடுத்தான். உம்மை, உயர்வு சிறப்பு.

105. ஆதனம் - ஆஸனம். தக்கவா - தக்கவாறு.

106. நிகமம் - வேதம். ஈரொன்பான் புராணம் - பிரமபுராண முதலிய பதினெண் புராணங்கள். மிருதி - ஸ்மிருதி நூல்கள். முகம் அரவிந்தம் - முகமாகிய தாமரை. கதாரச அமுதை - கதையாகிய சுவையுள்ள அமுதத்தை. செவியால் - காதாகிய வாயினால். திருத்தி - திருப்தி.

107. அதிக ரகசியம் - மிக்க இரகசியமாக வுள்ளது.

மன்னிய வார்வ மிக்குளோ மின்னு
மற்றதை விரித்துரைத் திடுமென்
றன்னமா முனிவர் வினவலு மகிழ்வுற்
றறைகுவன் சூதமா முனியே. (உச)

108. இந்தநற் கதையை ஞாபகஞ் செயலா
லிருடிகா ணீவிரும் யாமும்
உந்திய வுலகிற் றன்னிய ராமே
மொருவரு மிதன்சிறப் புணரார்
புந்தியி னினைப்போர் பவமெலா நீங்கிப்
புத்தியு முத்தியு மடைவார்
சந்தத நீல மலர்கிரிச் சிறப்புச்
சதகோடி கிரந்தமுண் டாமால். (உரு)

109. என்றுமோர் கொடியின் மூன்றுபைங் குவளை
யெழின்மலர் தனித்தனி யாகத்
துன்றுமுப் போது மலர்தலா லிதனைச்
சொல்வர்கல் லாரவெற் பெனவே
சென்றெவ ரேனுந் தெரிசனம் புரிந்தோர்
தீவினை யாவுநீக் கிடலால்
குன்றம்யா வினுக்குஞ் சிரேட்டமித் தணிகைக்
குன்றெனப் புகன்றிடப் படுமால். (உசு)

110. மலைகளின் மேரு பறவையிற் கருடன்
வருணத்தி லந்தணர் வித்தை
பலவினுஞ் சுருதி யொளியுடை யோரிற்
பாற்கர ளொளிகளி லிந்து
சலமதிற் கங்கை புருடரில் விண்டு
சந்தசிற் காயத்ரி மனுவே
இலையுடை மரத்தி லரசுயோ கியரி
லெழில்பெறு சனகரா மியம்பின். (உஎ)

---

108. தன்னியர் - நற்பேறு பெற்றவர். சந்ததம் - எப்பொழுதும். நீலம் மலர் கிரி - நீலோற்பலம் இந்திர தீர்த்தத்தில் மலர்கின்ற மலை. இந்த விசேடம் அடுத்த செய்யுளால் அறியப்படும். சதகோடி - நூறுகோடி.

110. சுருதி - வேதம். பாற்கரன் - சூரியன். சந்தசு - சந்தஸ். காயத்ரி மனு - காயத்திரி மந்திரம். சனகர் - ஒரு மகாயோகி; கல்லாலடியில்

111. பத்தரி னந்தி கேசுரன் றேவர்
பலரினு மதிகர்மா தேவர்
சத்திய மதுபோல் வரையிற்கல் லார
சயிலமுத் தமமதைக் கண்டோர்
முத்தியை யடைவ ரிக்கதை பிரமன்
மொழிந்தன னாரதற் கவனும்
வித்தக வியாதற் குரைத்தனன் வியாதன்
விளம்பின னெனக்கதை யுரைப்பேன். (உஅ)

(கலிவிருத்தம்)

112. என்று சூத னிருடியர் தங்களுக்
கன்று கூறுங்கல் லார கிரிவளம்
இன்றி யானு மிசைக்கலுற் றேன்புவி
ஒன்று மானிடர் யாரு முணரவே. (உகூ)

# 7. கல்லாரகிரிமான்மிய அத்தியாயம்

[கதைச் சுருக்கம்: முன் ஒரு காலத்தில் நாரதமுனிவர் சத்தியலோகம் சென்று தம் பிதாவாகிய பிரமதேவரிடம், "முன்பு தேவரீர் தணிகாசலத் தலப்பெருமையை மிகவும் சுருக்கமாகக் கூறி யருளியதுண்டு. அதனை விரிவாகச் சொல்லவேண்டும்" என்று பிரார்த்திக்கப் பிரமதேவர் தணிகாசலத் தலத்தின் பெருமை, அங்கே எழுந்தருளியுள்ள முருகக் கடவுளின் சிறப்பு, அத்தலத்திலுள்ள தீர்த்தங்களின் விசேட மென்பவற்றை எடுத்துரைத்தார்.]

(கலிவிருத்தம்)

113. முன்னொர் காலத்தின் முற்றுணர் நாரதன்
மின்னு சத்திய லோகத்தின் மேவியே

---

உபதேசம்பெற்ற நால்வருள் முதலாவர். அடுத்த செய்புளில் உள்ள உத்தம மென்பதை மேருமுதலியவற்றோடு கூட்டி உரைக்க.

111. மாதேவர் - மகாதேவர். சத்தியம் - உண்மையே. கல்லாரம் - நீலோற்பலம். நாரதற்குப் பிரமன் மொழிந்தான்.

113. சத்தியலோகம் - பிரமலோகம். பிதா - பிரமன். நாரதன், பிரமன் மகன். அன்னவூர்தி - அன்னவாகனத்தை யுடைய பிரமதேவர்.

தன்னை யீன்ற பிதாவடி தாழ்ந்தெழீஇ
அன்ன வூர்தியை நோக்கி யறைகுவான். (௧)

114. எந்தை நீமுன் னியம்பிடக் கேட்டனன்
உந்து சீரகி லாண்டவுற் பத்தியும்
தந்த மேன்மைத் தலங்களுந் தீர்த்தமும்
விந்தை யான சகலவிர்த் தாந்தமும். (௨)

115. ஓதும் புண்ணிய மோங்கு தலங்களுட்
காத லாகிக்கல் லார கிரியமர்
சோதி கந்த சுவாமிதன் மான்மியம்
ஆதி சூக்கும மாக வறைந்தனை. (௩)

116. சுருக்க மாமுனஞ் சொல்லிய வக்கதை
விரித்துக் கேட்க விரும்பினன் யானதை
அருத்தி யோடும் விரித்திங் கறைகவென்
றுரைப்ப நாரத னோதும் பிதாமகன். (௪)

117. கந்தர் மேவுகல் லார கிரிவளம்
அந்த மாதிகண் டியாரறை கிற்பவர்
மைந்த கேட்கும் வலியினர் யாருளர்
எந்த லோகத்து மியாவரு மில்லையே. (௫)

118. விரிந்த நூற்றுறை மேவிய பத்தியாற்
பரிந்து கேட்கும் பரிசுளை யாதலாற்
புரிந்த மாதவப் புத்திர னேயெனுற்
றெரிந்த மாத்திரஞ் செப்புவன் கேட்டியால். (௬)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

119. கல்லார கிரிச்சிகரங் காதலுடன் றெரிசித்தோர்
கசிந்து சென்று
வில்லாரும் பைங்கழுநீர் மேவிவளர் பூஞ்சுனையை
விரும்பிப் போற்றிச்

---

114. விர்த்தாந்தம் - வரலாறு.

115. சோதியாகிய கந்தசுவாமி. ஆதி - முதலில். சூக்குமமாக - மிகச் சுருக்கமாக.

116. நாரதன் உரைப்ப. பிதாமகன் - பிரமன்.

118. உளை - உள்ளாய்.

சொல்லானு மனத்தானுந் தொடரவொணுச் சண்முகரைச்
தொழப்பெற் றோர்கள்
எல்லாருங் கந்தவுல கெய்திடுவ ரினிப்பிறவி
யில்லைத் தானே. (எ)

120. துகளறுசுப் பிரமணியர் தோத்திரத்தைச் சந்நிதியிற்
றெழுது போற்றிப்
புகழ்பெறவே படித்தாலுங் கேட்டாலு மொருவருக்குப்
போதித் தாலும்
மகிழ்வுபெற வரைந்தாலும் வரைபவர்க்குக் கூலிதந்து
வரைவித் தாலும்
அகலிடத்தின் மிகவாழ்ந்திட் டந்தியத்திற் கந்தவுல
கடைவர் மன்னே. (அ)

121. வருதணிகா சலமெனும்பேர் மன்னிவளர் கல்லார
வரையி லெய்தி
ஒருகணமாத் திரம்வாச முற்றிருந்தோர் யாரேனு
முயர்ந்த சேடன்
சிரமணியாற் றங்கியிடுஞ் செகதலமெ லாம்புரந்து
செங்கோ லோச்சிப்
பெருமணிமா முடிதாங்கி யிந்திரன்போல் வாழ்ந்திருப்பர்
பிணியு றரே. (கூ)

122. கல்லாதா ராஞலுங் கடுங்கொலைஞ ராஞலுங்
கருணை சற்றும்
இல்லாதா ராஞலும் யாரேனுந் தணிகைவரை
யெய்தி நீல
மல்லாருஞ் சுனையினையுங் கந்தரையுங் கண்டொருகால்
வணங்கி ஞரேல்
பொல்லாத பாதகங்க ளனைத்தினையு மக்கணமே
போக்கு வாரே. (கo)

---

119. பூஞ்சுனை - இந்திர தீர்த்தம்.

120. வரைந்தாலும் - எழுதினுலும்.

121. கணம் - க்ஷணம்.

122. மல் - வளம்.

123. கார்த்திகையிற் கார்த்திகைசேர் பூரணையிற் கல்லார
கிரியிற் கந்த
மூர்த்தியுருத் தெரிசித்தோ ரந்தணரா யெழுபிறவி
முறையிற் றோன்றி
ஆர்த்திபெறு மைசுவர்ய முடையவரா யாரணங்க
ளனைத்து மோர்ந்து
கீர்த்தியுடன் மிகவாழ்ந்து கந்தவுல கிணையடைவர்
கிழ்ப்ப டாரே. (௧௧)

124. திங்கடொறுந் திங்கடொறும் வருமமா வாசையினுஞ்
செறிந்த விந்து
பொங்குகலை பதினாறு நிறைந்திடுபூ ரணைதனிலும்
புக்குச் சென்று
மங்குறொடுந் திருத்தணிகை வரைமிசைவாழ் முருகர்திரு
வடிவைக் கண்டோர்
அங்கவர்சா ரூபமும்பெற் றழகுவளர் கந்தவுல
கடைவர் மாதோ. (௧௨)

125. அனுதினமுங் கல்லார கிரியிலடைந் தறுமுகவர்
சந்நி தானத்
தினியமறை யோதிடினு மந்திரங்கள் செபித்திடினு
மிறைவர் பாதம்
மனதிலுற நினைத்தடியை வணங்கிடினு முன்செயும்வல்
வினைகள் யாவும்
தினகரன்முன் பனிபோல நீங்கியறு முகருலகஞ்
சேர்கு வாரே. (௧௩)

126. சங்கொலியும் புள்ளொலியுந் தணவாத சரவணதீர்த்
தத்தின் மூழ்கிப்
பொங்குதிரு நீறணிந்து கண்மணித்தாழ் வடமார்பிற்
புனைந்து கொண்டு

---

123. ஆர்த்தி - விரும்பிய பொருள்களை.
124. திங்கள் - மாதம். இந்து - சந்திரன். மங்குல் - மேகமண்டலம்.
126. கண்மணித் தாழ்வடம் - உருத்திராக்கமாலை.

செங்கைமுடி மிசைக்கூப்பித் தோத்திரஞ்செய் தன்பினொடுஞ்
சென்று நீலம்
தங்குதணி கேசரடி பணிந்தவரக் கணந்தீமை
தணந்திட் டாரே. (கச)

127. சமுசார துக்கமெலாந் தணந்திடுகா ரணமாகிச்
சாற்று மன்பர்க்
கெமராசன் சமர்நீக்கும் வீரவா ளனுந்தணிகை
யிளையோ னுமம்
அமராசை யொடுஞ்செபிப்போ ரளவிறந்த நாட்போக
மனைத்துந் துய்த்து
நமரானு மறிவரிய கந்தவுல கடைகுவர்நா
ரதகே ளின்னும். (கரு)

128. அந்தவரை யடித்தலத்தி லேனுமறு முகவரா
லயத்தி லேனும்
சிந்தையொரு மித்தவரா யொருமுகுர்த்தந் தலவாசஞ்
செய்த பேர்கள்
முந்தியசென் மங்கடொறும் புரிந்திடுமா பாதகங்கள்
முழுதும் நீங்கிச்
சந்ததமு மழியாத கந்தசா யுச்சியத்தைச்
சார்கு வாரே. (கசு)

129. ஒருதரங்கல் லாரகிரி மிசையேறிச் சண்முகரை
யுவந்து போற்றித்
தெரிசனஞ்செய் வோர்சகல தீர்த்தமா டியபலனுஞ்
செகத்தின் மேலோர்
அருமைபெற விதித்தபல விரதநோற் றிடுபலனு
மடைவ ரீது
சரதமென நம்பினர்க்கே பலித்திடுமை யுற்றவர்பாற்
சார்ந்தி டாவே. (கஎ)

---

127. அமர் - விருப்பம்.

129: சரதம் - உண்மை.

130. அத்தணிகைச் சண்முகவர் சந்நிதியி லதிதிகட்கு
மந்த ணர்க்கும்
பத்தியுடன் சங்கமர்க்கு மன்னதா னங்கொடுத்தாற்
பால்வெண் ணீற்று
நித்தபரி பூரணர்க்கு மெனக்குமெனே முன்னீன்ற
நெடுமா லுக்கும்
சத்தியுமை வாணிதிரு முதலினர்க்குந் திருத்தியெனச்
சாற்றும் வேதம். (௧௮)

131. திருத்தணிகை வரைமேவுஞ் செவ்வேளின் மந்திரத்தைச்
செபித்திட் டாலும்
கருத்திலுற நினைத்தாலுந் தோத்திரங்கள் புரிந்தாலுங்
கைகள் கூப்பிச்
சிரத்திலுறப் பணிந்தேத்தித் திருவுருவை விழிகுளிரத்
தெரிசித் தாலும்
விருத்திபெறுஞ் சந்ததிகண் மேன்மேலுந் தழைத்தருளை
மேவு வாரே. (௧௯)

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

132. தணிகைமால் வரைவாழ் முருகர்சந் நிதியிற்
சந்தியா சஞ்செய்து கொண்டு
துணிவதாய் மறைசொல் பிரணவப் பொருளைத்
துகளறத் தியானமே புரிந்து
மணிநிலா வெறிக்கு மவ்வரை தன்னில்
வசிப்பவர் யாவரே யென்னும்
பிணியெலாங் கொடுக்கும் பிறவிநோ யகன்று
பிரமசா யுச்சியம் பெறுவார். (௨௦)

133. செக்குறு கரும்பு போலவே யோனிச்
சிறுபுழை வழிவரு துயரும்
விக்கன்மே லெழும்புஞ் சிலேத்தும நெருங்க
மெய்யறி வழிந்துயி ரேகும்

---

130. பத்தி - பக்தி. சங்கமர் - வீரசைவ அடியார். நித்த பரிபூர ணர் - சிவபெருமான்.

131. சந்ததிகள் விருத்திபெறும்.

துக்கமுந் தூரக்குந் தணிகையந் தலத்திற்
சோடச தானங்கள் செய்தோர்
தக்கபோ கங்க ளனைத்தையு நுகர்ந்து
சரவண பவருல கடைவார். (உக)

134. வண்டணி கரத்தோ னருந்தவம் புரிந்து
வண்சுனை யொன்றகழ்ந் திட்டுப்
பண்டருச் சிக்கும் பரிசுகண் டழியாப்
பதமருண் முருகர்சந் நிதியிற்
கொண்டன்மே னியன்றன் னடியருக் கறநூல்
கூறிய தானங்கள் கொடுத்தோர்
விண்டுலோ கத்தை யடைவரே ழிசையின்
விருப்புறு நாரத முனியே. (உஉ)

135. நீலமால் வரைவாழ் முருகர்சந் நிதியி
னீண்டகோ புரந்திரு மதில்கள்
ஆலயங் கருப்பக் கிருகமண் டபங்க
ளணிவிமா னங்கள்செம் பொற்றேர்
சோலைக ணந்த வனமடைப் பள்ளி
சுரக்குநீர் வாவிகூ பங்கள்
கோலமா மடங்கள் சமைத்தவர் குமர
லோகத்திற் குலவிவீற் றிருப்பார். (உ௩)

136. தையமா வாசை யுறுதினந் தணிகை
தழைத்தகல் லாரம்வாழ் சுனைநீர்
மெய்யெலா நனையப் படிந்துகண் மணியும்
விபூதியும் விதிமுறை யணிந்து
துய்யவே லவரைத் தொழுதெதா சத்தி
சோடச தானங்கள் புரிவோர்
வெய்யபா தகங்க ளனைத்தையு நீங்கி
விரும்புநற் கதியினைப் பெறுவார். (உ௪)

---

133. சிலேத்துமம் - கபம். சோடசதானம் : 147.

134. வண்டு அணி கரத்தோன் - திருமால்; வண்டு - சங்கு. சுனை : திருமால் பூசித்த. 7. இங்கே வந்து திருமால் வழிபட்டமை கூறப்பட்டது.

135. கூபம் - கிணறு.

136. எதாசத்தி - இயன்றவளவு.

137. அழிவிலாத் தணிகை வரைக்கும ரேச
ராலயந் தனையல கிடுவோர்
மெழுகிமொக் கிடுவோர் திருவிளக் கிடுவோர்
விரைமலர் நறுந்தொடை புனைவோர்
வழுவிலாத் திருமஞ் சனமினி தெடுப்போர்
வரைநறுஞ் சந்தன முரைப்போர்
பழியிலாப் போகம் புவிமிசை நுகர்ந்து
பரகதி யினத்தொடும் புகுவார். (உரு)

138. அண்ணலந் தணிகைக் கிறைவர்சந் நிதியி
லனலுறு மோமங்கள் புரிந்தோர்
புண்ணிய போகம் புவிமிசை நுகர்ந்து
பொன்னுல கடைந்துபொன் னுருவம்
நண்ணியோர் மனுவந் தரமவண் மருவி
நாகர்கோன் வழுத்திடச் சென்று
திண்ணமார் கந்த லோகத்திற் குலவிச்
சிறந்தசா யுச்சியம் பெறுவார். (உசு)

139. அரனுரு வான தணிகைவாழ் குகனை
யடுத்தொரு காற்றெரி சித்தால்
பரிமக நூறு புரிந்திடு பலமாம்
பரிந்தொரு காலருச் சிக்கின்
வருமக நூறு செய்திடு பலமு
மறைகணு லெட்டென வுரைக்கும்
தருமமோர் கோடி செய்திடு பலமுஞ்
சார்ந்திடும் வீணைமா முனியே. (உஎ)

140. மூலமால் வரைசேர் முருகரை யொருகான்
மும்முறை வலம்புரிந் தவர்கள்
சாலவோ ரடிக்கோ ரயமகப் பலனைச்
சார்குவர் சகத்திர தீபம்

---

137. அலகிடுதல் - பெருக்குதல். மொக்கு இடுவோர் - மாப்பொடியாற் கோலம் போடுவார். உரைப்போர் - அரைப்பவர். இனத்தொடும் - சுற்றத்தாரோடும்.

138. நாகர் கோன் - இந்திரன்.

139. ஒருகால் - ஒருமுறை. பரிமகம் - அசுவமேதயாகம். நாலெட்டு ......தருமம் - முப்பத்திரண்டு தருமம்: ஆதுலர்க்குச்சாலை முதலியன; இதன் விரிவைக் காஞ்சிப்புராணத்திற் காண்க.

ஆலயந் தனிலா னெய்சொரிந் திடுவோ
ரகனிலத் திட்டகா மியங்கள்
ஏலவே நுகர்ந்து மறுமையிற் கந்த
ரெழில்பெறு முலகிலெய் துவரே. (உ௮)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

141. எண்கலனே தூணிமகா நிவேதனஞ்செஞ் சாலியன்ன
மிலையேற் பாதி
வண்கலநா லுடன்பதக்காம் வாயந்தி வேலையைந்து
மரக்கா லன்னம்
தண்டயிர்தே னெடுமளைந்து குளங்கனிகாய் கறிகிருதந்
தணிகை வேலர்
உண்டிடவே நிவேதித்தோர் பெரும்போக நுகர்ந்துமுத்தி
யுறுவ ரன்றே. (உ௯)

142. இயம்பியமா நிவேதனத்துக் கேலாத விலம்பாட்டோ
ரியன்ற வன்னம்
நயந்துநிவே தித்திடினு முன்னவருக் குரைத்தபல
னண்ணி வாழ்வார்
உயர்ந்ததணி கேசருக்கு நறுந்தூபங் கர்ப்பூரத்
தொளிருந் தீபம்
வியந்திடவா ராதனஞ்செய் வித்தகருந் தீமையெலாம்
விடப்பட் டோரே. (௩௦)

143. ஆயிரந்தேங் காய்கரும்போ ராயிரம்வா ழைப்பழமா
யிரம பூபம்
ஆயிரமோ தகங்களுமோ ராயிரம்பிட் டாயிரமா
யிரமாந் தோசை

---

140. அயமகம் - அசுவமேதயாகம். சகத்திரம் - சகசிரம்; ஆயிரம். ஆன் நெய் - பசுவின் நெய். இட்டகாமியங்கள் - விரும்பியவை (146.)

141. எண்கலனே தூணி - எட்டுக்கலமும் நாலு மரக்காலும். பதக்கு - இரண்டு மரக்கால். குளம் - வெல்லம். கிருதம் - நெய்.

142. இலம்பாட்டோர் - வறுமையுடையோர். வித்தகர் - அறிவுடையோர். ஆராதனம் - பூசை.

143. அபூபம் - வடை முதலியன. பிட்டு - இட்டலி; வழக்கு.

ஆயிரநா மம்படைத்த சண்முகர்க்கு நிவேதித்தோ
ரவனி யெல்லாம்
ஆயிரமாண் டினிதாண்டு தங்கிளைஞ ரொடுங்குமா
ரடியிற் சார்வார். (௩க)

144. முந்துதணி கேசருக்குத் தயிலாதி யவிடேக
முறையி னாட்டிச்
சந்தனங்குங் குமம்புழுகு கத்தூரி பளிதமுஞ்சேர்த்
தரைத்துச் சாத்திச்
சுந்தரப்பொன் னுடைமணி முடிகடகந் தோள்வளையந்
துளக்கி லாரம்
கந்தர்மகிழ்ந் திடவணிவோர் தாம்பெறுபே றெவராலுங்
கழறொ ணாதே. (௩௨)

145. சத்திரங்கண் ணடிகொடி கவரிமயிற் பீலிபிச்சந்
தமையீந் தோரும்
மெத்தியவாத் தியங்கள்குழல் வீணையுட னட்டியங்கள்
விளைத்திட் டோரும்
பத்தியுல கெங்கணும்போம் வாகனமூர்ந் தெவ்வுலகும்
பணிய வாழ்ந்து
சித்திதருந் தணிகேசர் திருவருளா லவருலகிற்
செறிவர் மாதோ. (௩௩)

146. செம்பொனா லெனினுமொளிர் வெண்பொனா லெனினுமிகச்
செய்த காம்போ
டம்பொனார் வெண்குடைகள் சாமரங்க டணிகேசர்க்
களித்திட் டோர்கள்
இம்பராம் பூதலத்தி லிட்டகா மியமனைத்து
மெய்தி யந்தத்
தும்பரார் கவரிகுடை யுவந்தெடுப்பக் கந்தவுல
குறுவர் மாதோ. (௩௪)

---

144. பளிதம் - பச்சைக் கருப்பூரம். ஆரம் - முத்துமாலை.

145. சத்திரம் - குடை. பிச்சம் - மயிற்பீலியாற் செய்த குடை.

146. இட்டகாமியம் : 140.

147. ஆன்காதி னளவேனு மந்தணர்க்குப் பூதான
மளித்திட் டோர்கள்
வான்காதல் கொளவாழ்வர் தணிகையறு முகவரெதிர்
வணங்கி நின்று
நான்காகு நான்கெனவே நவிறுன மெதுசெயினு
நண்ணும் பேற்றை
ஊன்பாயு மிவ்வுடம்பி லனுபவித்து மறுமையினு
முறுவா ரின்பம். (ரு௫)

148. வந்தவொரு காரியத்தா லேனுமொரு பெண்ணேச
மருவி யேனும்
விந்தைதருங் காணிக்கை கொடுத்தேனும் வேடிக்கை
விரும்பி யேனும்
எந்தவிதத் தேனும்போய் நீலகிரி வாழுமிளை
யோனைக் கண்டோர்
நந்துமிக லறச்செகுத்துப் புவிமுழுதாண் டமருலக
நண்ணு வாரே. (ரு௬)

149. கற்றுணர்ந்த பெரியவரா யதிதியராய் வந்தவர்க்சோர்
கவள மேனும்
நற்றணிகை மாநகரி லன்னதா னங்கொடுத்தோர்
நவிலும் வேதம்
முற்றுணர்ந்து வேண்டியபோ கங்களையு மனுபவித்து
முடிவிற் கந்தர்
உற்றவுல கினையடைந்து திருவடித்தா மரைநிழலி
லுறுவ ரன்றே. (ரு௭)

150. கருநிறத்த விடையினொடு காராவுந் தணிகைவரைக்,
கந்தர்க் கன்பாய்
இருநிலத்தில் யாரேனும் விடுத்தனரேற் றீவினைக
ளெல்லா நீங்கிப்

---

147. சோடச தானம்: 133.

148. வேடிக்கை - விநோதம்.

150. கருநிறத்த விடை - கரிய நிறமுள்ள காளை. காரா - காராம் பசு.

பொருண்மிகுத்தம் புவிவாழ்ந்து மறுமையினும் பொன்னுலகிற்
போகந் துய்த்துத்
திருமிகுத்த கவுமார வுலகில்லடைந் தறுமுகர்தாள்
சேர்வர் மன்னே. (ருஅ)

151. நந்திநதி பிரமசுனை நாகசுனை விண்டுசுனை
நாகர் கோனும்
இந்திரனார் சுனையினொடு மெழுமுனிவர் சுனையாதி
யின்னு மங்கண்
முந்தியதீர்த் தங்களெலா மூழ்கினவர் பாதகங்கண்
முற்று நீங்கிச்
சந்ததிக டழைத்தோங்கத் தணிகேசர் திருவருளைத்
தணப்பு றுரே. (ருகூ)

152. குன்றுகுந் தணிகையிலோர் புண்ணியஞ்செய் தாலுமொரு
கோடி யாகும்
துன்றுத பாவமொன்று புரியினுமோர் கோடியதாய்த்
தொடர்ந்து சூழும்
பொன்றுது சத்தியமே யாதலினுற் றீமையென்றும்
புரிய லாகா
நன்றுகும் புண்ணியமெப் படியேனுஞ் செய்திடுத
னலம தாமே. (சo)

# 8. பிரமன் பேறுபெற்ற அத்தியாயம்

[கதைச்சுருக்கம்: தணிகாசலத்தின் மான்மியத்தைப் பின்னும் கேட்க விரும்பிய நாரத முனிவருக்குப் பிரமதேவர் கூறலானார்:

முன் ஒரு காலத்தில் இந்திரன் முதலிய தேவர்களோடும் திருக்கயிலாயத்திற்கு நான் செல்லும்போது இடையிலே முருகக்கடவுள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவரை மற்றத் தேவர்யாவரும் வணங்கிச் செல்ல, யான்மட்டும் அவரைக் குழந்தையென்றெண்ணி வணங்காதுசென்றேன். கயிலையில் சிவபெருமானைத் தரிசனம் செய்துவிட்டு மீண்டு வருகையில் என்னை வருவித்து முருகக்கடவுள், "படைக்குந் தொழில் புரிகிறேமென்ற அகந்தையுடையாய் நீ. நீ வேதம் ஓதுவாயென்று யாவரும் கூறுவர்.

அதன் முதற்சொல்லாகிய பிரணவத்திற்குப் பொருள் யாது?" என்று கேட்டனர். யான் அதனையறியாமல் விழித்து நிற்ப என் தலையிற் குட்டி வீரவாகுதேவரைக்கொண்டு சிறைசெய்வித்துத் தாமே படைப்புத் தொழிலைப் புரியத் தொடங்கினர்.

சிவபிரான் இதனையறிந்து முருகக்கடவுள்பால் வந்து யாவற்றையும் தெரிந்துகொண்டபின், "பிரணவப் பொருளை அறிவாயாயின் கூறுக" என்ன, முருகக்கடவுள், "குருவாக இருந்து கூறுவேன்" என்றார். அங்ஙனமே சிவபெருமான் அவரைச் சிங்காதனத்திலிருத்திப் பிரணவப்பொருள் கேட்டு மகிழ்ந்தனர். அப்பால் இன்னுரை கூறி என்னை விடுவிக்கச் செய்தார்.

நான் முருகக்கடவுளை மதியாதிருந்த தோடம் தீரும்பொருட்டுச் சிவபெருமான் கட்டளையின்படி தணிகாசலம் சென்று தவம்புரிந்து அங்கே ஒரு தீர்த்தமுண்டாக்கி வழிபட்டேன். திருத்தணிகேசர் திருவுளமிரங்கிக் காட்சியளித்து யான் பழையபடியே சிருட்டித்தொழில் புரியும் வண்ணம் அருள்புரிந்தார்.]

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

153. என்றுநான் முகவ னியம்பநா ரதன்கேட்
டியம்புவா னெவர்க்குமே லாகித்
துன்றுசீர்ப் பகவ னேயடி யவர்க்குச்
சுகந்தரு சற்குண நிதியே
நன்றுகல் லார கிரியின்மான் மியநீ
நவின்றிடக் கேட்டுநா னுலகில்
இன்றுமே லான புண்ணிய மனைத்து
மெய்தின னென்றினு முரைப்பான். (க)

154. எவ்விதங் களினுஞ் சிரேட்டமாய்ச் சிருட்டி
யிரக்கையோ டிலயகா ரணமாம்
அவ்வித விபுவாம் பிரமநின் முகமா
மம்புய மலரினிற் பிறந்த
திவ்விய கந்தர் கதாமுத பானஞ்
செய்துமென் செவியொடு வாயும்
துவ்வுறு திருத்தி யடைந்தில வினுநீ
சொல்கவக் கிரியின்வை பவமே. (உ)

---

154. துவ்வுறுதல் - அனுபவித்தல்.

155. கயிலைமால் வரையில் வீற்றிருந் தருளுங்
கண்ணுத லுமைநடு வாகப்
பயிலுமோர் கருணைக் கடலெனுங் கந்தர்
பரிந்தவ ணடைந்தகா ரணமும்
இயலுமவ் வரையி னீலமுப் போது
மென்றுமூன் றலர்ந்திடு திறமும்
மயலற வெனக்குத் தெரித்தரு ளென்று
மறைமுனி பின்னுமொன் றுரைப்பான். (ங)

156. அத்தகு மலைவாழ் கந்தரை மகவா
னருச்சனை முனம்புரிந் தானோ
வித்தகப் பூசை நீபுரிந் தனையோ
விண்டுபூ சனைபுரிந் தானோ
பத்தியா லின்னும் பூசனை புரிந்தோர்
பலரையுஞ் சம்பிர தாயக்
கொத்தொடுந் தெரியக் கூறென முனிவன்
கூறலு மறையவன் கூறும். (ச)

157. ஆரண முனிவ வெனக்குநீ மைந்த
னாதலா லறைகுவ னகிலத
தேரண வியகல் லாரமால் வரையி
னிருஞ்சிறப் பெவற்றினு மதிகம்
பூரண மாமென் வயதுநா றுண்டு
புகலினும் புகலொணு வனைத்தும்
காரண மதனி லறிந்தமாத் திரநான்
கழறுவன் கேட்டியென் றுரைப்பான். (ரு)

158. பூருவந் தனிற்கல் லாரமா கிரியிற்
பூந்தவி சிருந்தசண் முகரை
நாரத நான்முன் னருச்சனை புரிந்த
நயத்தினை யறைகுவன் கேட்டி

---

155. கண்ணுதலுக்கும் உமைக்கும் நடுவாகப் பயிலும்.

158. பூருவந்தனில் - முன்காலத்தில்.

சீரிய கயிலை வாழ்பர சிவனைத்
தெரிசனஞ் செய்யமுன் னொருகால
வீரிய மகவான் முதலிய தேவர்
விண்டுவோ டணுகினன் யானும். (சா)

159. அதுபொழு தென்று மழிவிலாக் கயிலை
யசலமேற் போமிடை வழியிற்
கதிதரு முருக ராட்டயர்ந் திருப்பக்
கண்டவிண் ணவரரி மகவான்
முதலினர் வணங்கி யவரருள் பெற்று
முடுகினர் பரசிவ னிடத்தே
மதியறு மொருநான் குழவியென் றவரை
வணங்கிடா தவரொடுஞ் சென்றேன். (எ)

160. ஆலய மடைந்து கோபுர வாய்த
லமர்ந்திடு நந்திதாள் வணங்கி
மாலொடு தேவர் குழாங்களும் யானும்
வழுத்தியங் கவனருள் பெற்றுச்
சாலவுட் புகுந்தே யுருத்திரர் சித்தர்
சாரண ரியக்கர்கந் தருவர்
சீலமார் சனகன் முதலயோ கியர்கள்
திறல்வசிட் டாதிமா முனிவர். (அ)

161. மற்றுள கணங்க ளனைவரு மேத்தி
வணங்கமா ணிக்கமண் டபத்திற்
பொற்றவி சதனி லுமையொடு மிருந்த
புராரியைக் கண்டனை வரும்போய்
உற்றிடும் பயபத் தியினொடும் வணங்கி
யுவந்தெழுந் தனேகதோத் திரங்கள்
சொற்றனம் பேரா னந்தவா ரிதியிற்
றோய்ந்தனம் பரவச மாகி. (கூ)

162. வந்தகா ரியங்க ளனைத்தையு முரைப்ப
மகிழ்ந்தர னவரவர்க் கேற்ற
சிந்தனைப் படியே கட்டளை புரியத்
திருந்தடி வணங்கியே விடைபெற்

159 பரசிவனிடத்தே முடுகினர்.

றந்தர மிசைவாழ் விண்டுவே முதலா
மனைவரு மவரவ ருலகம்
முந்தினர் யானு மவருடன் கயிலை
முதுகிரி தனில்வருங் காலை. (கo)

163. முன்னமாட் டயர்ந்த சடானன ரென்றன்
முகத்தினைச் செருக்கொடு நோக்கி
மன்னுகிங் கரரை விடுத்தழைப் பித்து
மாற்றருஞ் சீற்றமீக் கொண்டே
இன்னவா னவரில் யார்கொனீ முகநான்
கெய்திய தென்னைகொல் சிருட்டி
என்னுமோர் தொழிலா லெனைமதி யாம
லிகழ்துராங் காரதுன் மதியோய். (கக)

164. மறைகளுன் முகத்திற் றோன்றிய வெனவே
வயங்குல கெலாமுரைத் திடலால்
அறையுமச் சுருதிக் கிறைவனு னெனவே
யகங்கரித் தனைவிதி யதன்முன்
உறையுமோ மெனுமோர் பதார்த்தமே ததைநீ
யுரைத்திடென் முனமதிற் குலவும்
இறைவன்யா ரறிது மெனக்குக னார்தா
மிசைத்தன ரேழிசை முனியே. (கஉ)

165. சிவனருள் குமரர் வினவிய பதார்த்தந்
தெரிகிலா மையினுள மயங்கி
மவுனமா யானு மூமர்போ லிருப்ப
மற்றது கண்டுசெவ் வேளும்
கவினுறு செந்தா மரைமலர் புரையுங்
கைத்தலத் தங்குலி முடக்கித்
தவமுனி வரகே ளெனதுட னடுங்கத்
தாக்கினர் சிரங்குழி படவே. (கங)

166. அருகுறும் வீர வாகுவை நோக்கி
யருஞ்சிறை புரிகென வவனும்
மருவியென் றனையீர்த் தேகியே சிறையில்
வைத்தனன் வைத்தபின் னெனது

163. கிங்கரர் - ஏவலர்.
164. விதி : விளி - என்முனம் உரைத்திடு.

கரமுறு மக்க மாலையும் புதுநீர்க்
கமண்டலந் தனையுந்தங் கைக்கொண்
டேரமுறு முலகை வாலலீ லையதா
யொருதனிச் சிருட்டிசெய் திருந்தார். (கச)

167. இப்படி நடந்த செய்தியைச் சிவன்கேட்
டெழுந்திள முறுவல்பூத் திளையோன்
ஒப்பற விருந்த விடந்தனி லெய்தி
யுவந்துதா மரைமுக நோக்கி
வைப்பெனு மதலாய் பிரமனைச் சிறைநீ
வைத்ததென் னவனுல காக்கும்
அப்பெருஞ் சிருட்டித் தொழிலினாற் றேவ
ரனைவரும் பூசிக்கப் படுவான். (கரு)

168. என்றுமா தேவர் வினவமா சேன
ரியம்புவா ரோமொழிப் பொருளை
நன்றறி கல்லா மூடனிவ் வுலகை
நவிற்றிடுங் குயவனைப் போல
அன்றெனப் படைக்குஞ் சத்திமாத் திரமே
யடைந்தனன் வேறொரு சத்தி
மன்றவே யவனுக் கிலையென வுரைப்ப
மதலைதன் மதிமுக நோக்கி. (கசு)

169. உலகெலாம் படைக்கும் பிரமனு மறியா
தோங்கிய பிரணவப் பொருளை
இலகுலாம் பைம்பொன் மணிப்பணி தரித்த
விளஞ்சிறு குழவிநீ தெரியின்
நலமதா யுரைத்தி யெனப்பிதா வினவ
நாந்தகஞ் சுமந்தசெங் கமல
மலரைநேர் தடக்கைக் கோமள வுருவம்
வயங்கிய குகனெதிர் வகுப்பான். (கஎ)

---

168. மாசேனர் - மகாசேனர்; இது முருகக்கடவுளின் திருநாமங்களுள் ஒன்று; "புகழுமா சேனு போற்றி" (194) என்பர் பின். அன்றென- அக்காலம் போல; என்றது, அவன் படைக்கத் தொடங்கிய காலத்தை.

169. நாந்தகம் சுமந்த கையென இயைக்க.

170. எனக்கது தெரியு மாயினு மதிக
விராசியப் பிரணவார்த் தத்தைத்
தனக்கிணை யில்லாக் குருவொடு சீடத்
தன்மையிற் புகல்வதே யல்லால்
இனப்பட வாளா வுரைத்திட லாகா
தென்னலும் பரசிவன் கேட்டுப்
பனப்படு குருநீ சீடன்யா னாகப்
பரிந்துப தேசியென் றிசையா. (கஅ)

171. அரியணை மீதிற் றன்மக வான
வறுமுகன் றனையினி திருத்திப்
பரசிவன் றாழ்ந்து வலச்செவி கொடுப்பப்
பரிந்துப தேசமே புரிந்தான்
பிரணவப் பொருளைக் கேட்டுமா தேவன்
பெரிதுள மகிழ்ந்துபுத் திரனும்
குருபரன் றன்னை யெடுத்துமார் பணைத்துக்
குஞ்சிமோந் தரியணை யிருத்தி. (கக)

172. எனக்குநீ குரவ னாதலாற் செகத்துக்
கெலாங்குரு நாதனா யிருத்தி
புனிற்றிளங் குமர வெனலுமப் பொழுது
புராரியை நானிரந் திடலும்
தனிச்சிவன் மதலைக் கினியன வுரைத்தென்
றாள்விலங் கினைவிடு வித்தான்
இனிப்புறு மிசைதேர் நாரத முனிவ
யான்சிறை தணந்ததிவ் விதமே. (உ0)

173. பின்புமா தேவர் திருவடி வணங்கிப்
பெரிதெழுந் தஞ்சலி யுடனே
முன்புநின் றொருநா னின்னவிண் ணப்ப
மொழிந்தன னெவர்க்குமே லாகி

---

170. இராசியம் - இரகசியம்.
171. குஞ்சி மோந்து - உச்சி மோந்து.
173. மாற்றிட - நீக்க.

இன்புறு கருணை யுருவமாய் விளங்கு
மீசனே சம்புவே யான்முன்
வன்புறப் புரிந்த தீமைக ளனைத்து
மாற்றிடப் பொறுத்தருள் புரிக. (உக)

174. அறிவிலேன் சிறியேன் மிகவுமஞ் ஞானி
யாயினு மதான்மிக னெனினும்
குறைவிலா தளித்தா யென்னைநின் மகன்சற்
குமாரனு மியல்பையு மவன்றன்
மறமுலா வியதோள் வலியையு மகிமை
மாண்பையு மறிகிலா மையினல்
வறியனே னவனை மதித்திடா திகழ்ந்த
மதத்தினல் வருபலன் புசித்தேன். (உஉ)

175. தான்முனம் புரிந்த சுபாசுப மனைத்துந்
தானனு பவித்திட லுண்மை
வான்முறை பிறழா தெனமுனம் பெரியோர்
வகுத்தவாச் சியத்தைநன் றுணர்ந்தேன்
யான்முனம் வணங்கா தியற்றுதீ வினையா
லென்னதி காரத்தை மாற்றி
நான்மறைப் படிசெய் யுலகினைப் படைத்தா
ளுதவென் றனக்கென்ன கதியே. (உங)

176. எவ்விதத் தாலென் பாலருள் ணோக்க
மினையவன் வைத்தருள் புரியும்
அவ்வித வுபாயந் தனையெனக் குரைத்தி
யத்தனே கருணைவா ரிதியே
திவ்விய பத்த பாராயண வெனயான்
செப்பலுஞ் சங்கரன் மகிழ்ந்திட்
டிவ்விதம் புகன்றா னாரத முனியே
யினியகெம் பீரவா சகத்தால். (உச)

---

174. அதான்மிகன் = அதார்மிகன் - தரும மில்லாதவன்.

175. சுபாசுபம் - புண்ணிய பாவம். வாச்சியம் - பொருள்; "வாசக மதற்கு வாச்சியம்" (நால்வர்நான்மணி. 8.)

176. பத்தபராயணன் - அடியார்களையே மேலான இருப்பிடமாக உடையவன்; அடியார்கள்பால் ஈடுபட்டவ னென்றும் கூறுவர். கெம்பீர வாசகம் - பொருளாழமுடைய வார்த்தைகளால்.

177. என்முக நோக்கிப் பரசிவ னுரைத்த
தென்னெனிற் பிதாமக விளையோன்
தன்முகங் கோப மாகிநின் மீது
சந்தத மிருப்பினு நீங்கி
நன்முக மாகி யுனக்கரு ளுபாய
நவிலுதும் பராமுக மின்றி
நின்முக மலர்ந்து மனதொரு மித்து
நின்றுகே ளம்புவி தனிலே. (உரு)

(கலிவிருத்தம்)

178. காசியெனு மாநகர் தெனுதுகரை யெல்லை
யோசனையி ரண்டுசத முற்றுவளர் காஞ்சி
வாசமுறு நாயகிகா மாட்சியிட மன்னும்
ஈசரொரு மாநிழலி லென்றுமமர் கிற்பார். (உசு)

179. புத்தியொடு முத்திநரர் பொற்றவருள் கம்பர்
சித்திமகிழ் கூர்தரு சிவாலய மதற்கே
உத்தரதி சைக்கணிரண் டியோசனையி னெல்லை
வித்தகசீ பூரணமெ னுந்தலமொன் றுண்டால். (உஎ)

180. மேதகுவீ ரேசரவண் மேவுநில யத்துக்
கோதலுறு மேற்றிசையி லோங்குமணி மைக்கண்
மீதலமெ லாம்புகழ்வி சித்திரகல் லார
பூதரம்வி ளங்குமதன் மீதுபுல வோர்கள். (உஅ)

181. கந்திருவர் சித்தர்க ளியக்கர்கண நாதர்
இந்திரன்முன் னாகியிடு மெண்டிசை புரப்போர்
சந்திரர்கள் சூரியர்கள் சாரணர்கள் சூழ
நந்தெழில ரம்பைமுத னல்வரு நடிக்க. (உகூ)

---

177. இளையோன் - முருகப்பெருமான்; "என்று மிளையாய்" (முருகு. இறுதி வெண்பா.)

178. யோசனை இரண்டு சதம்; சதம் - நூறு; 206.

180. வீரேசர் - வீரட்டேசுவரர்.

181. அரம்பை முதல் நால்வர் - அரம்பை, மேனகை, உருப்பசி, திலோத்தமை.

182. சனகர்முதல் யோகியர்கள் சவுனகரை முன்னா
முனிவரர்கள் கந்தர முழைக்கண்மகிழ் கூரப்
பனகர்முத லாகியொளிர் பாதலர் வணங்க
இனியபொழி லூழ்த்தமல ரெங்குமணம் வீச. (௩௦)

183. மாங்குயில்கள் காளமென வாழ்த்தியிசை கூவப்
பூங்கிளிம கிழ்ந்துபுகழ் பூவையொடு பேசப்
பாங்கருறு பூஞ்சுனை படிந்துவரு தென்றல்
ஓங்குகுளிர் நுண்டிவலை யோடெதி ருலாவ. (௩௧)

184. பார்த்தவர் நினைத்தவர் பணிந்தவர்கள் பாவம்
தீர்த்துவர மேயுதவு சேந்தனமர் கிற்பான்
கார்த்திகைம கன்விழைகல் லாரகிரி நஞ்சீர்
ஆர்த்தகயி லைக்கிரியி னுக்கதிக மாமால். (௩௨)

185. அம்மலைய டைந்துதவ மாற்றிலய னோநம்
செம்மலெதி ருற்றுனது சிந்தையக லாத
விம்மலையொ ழித்துவரம் வேண்டிய தளிப்பன்
பொம்மலைய டைந்திடுவை போதிமலர்ப் போது. (௩௩)

186. என்றிறைவ னோவனுமி றைஞ்சிவிடை பெற்றுச்
சென்றுதணி கைக்கணமர் சேயினெதிர் கீழ்பாற்
குன்றினிடை யென்பெயர்கு லாவியிடு தீர்த்தம்
துன்றுசுனை யொன்றுசுத னேயினிது தொட்டேன். (௩௪)

187. அப்புனலின் மூழ்கிடினு மங்கைகொடு சென்னி
ஒப்பறுபு ரோக்கண முஞற்றிடினு முள்ளே
துப்புறவ ருந்தினுந் தொழப்பெறினு மன்னோர்
எப்பிணியு நீங்கியென திவ்வுலகில் வாழ்வார். (௩௫)

(வேறு)

188. புனலதின் மூழ்கிமுப் போதுஞ் சந்திசெய்
தனனடி விருந்துகண் ணருக்க னோக்கியே

---

185. மலர்ப்போது போதி - உன்னுடைய இருப்பிடமாகிய தாமரைப் பூவிற்குச் செல்; தாமரைப் பூவையே பிரமனுலகமாகக் கூறுதல் மரபு; **கம்ப.** பிணிவீட்டு. 17.

187. புரோக்கணம் = புரோக்ஷணம் - தெளித்துக்கொள்ளுதல்.

மனமொரு மித்தறு முகவன் மந்திரந்
தனையெணி யவனிரு தாளை யுன்னியே. (ரு௯)

189. அருந்தவ நெடும்பக லாற்றி னேனதைத்
தெரிந்தறு முகனருள் செய்ய வென்முனே
பரிந்தெழுந் தருளினன் பசிய தோகைமேல்
திருந்தொரு கோடிசூ ரியரிற் றேசுற. (ருஎ)

190. கந்தகத் தூரிகுங் குமங்க ருப்புரச்
சந்தன மணிந்துபொன் னுடை சாத்தியே
எந்தநற் பணிகளு மிசைத ரப்புனை
திந்திரன் முதலிமை யவர்க ளேத்தவே. (ருஅ)

191. பற்பல பூதரும் பாங்கர் சூழ்வர
உற்பல விழியரு ளொழுக வோங்குகந்
தற்பரோர் கோடியிற் றயங்கு சுந்தரப்
பொற்பினை யுளமகிழ் பூப்பக் கண்டனன். (ருகூ)

192. கண்டவக் கணந்தனிற் கறுமென் றேயெழீஇத்
தெண்டனிட் டேனெதிர் சிலம்பு கொஞ்சிய
புண்டரி கப்பதம் போற்றிப் பின்னரும்
மண்டனி லடிக்கடி வணங்கி யேத்தினேன். (சo)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

193. சாந்தனே போற்றி யெங்கள் சங்கரன் மகனே போற்றி
சேந்தனே போற்றி வள்ளி தெய்வயா னைக்கி சைந்த
காந்தனே போற்றி மேலாங் கந்தனே போற்றி விண்ணோர்
வேந்தனே போற்றி மாயா விகாரனே போற்றி போற்றி.

194. புகழுமா சேனு போற்றி பொருஞ்சேனு பதியே போற்றி
மகிழ்பர மான்மா போற்றி வருஞ்சர சன்மா போற்றி

---

191. உற்பல விழி - நீலோற்பலம் போன்ற கண்கள். கந்தற்பர் - மன்மதர். கோடி மன்மதர் (195.)

193. மாயா விகாரனென்பதற்கு மாயையை மாறும்படியாகச் செய்பவனென்றும், மாயையால் அநேக விகாரங்களை உண்டாக்குபவனென்றும் பொருள் கூறுவர்.

194. சரசன்மன் - முருகன்; நாணற் புல்லில் தோன்றியவன்; சரம் - நாணற்புல். வாகுலேயர் - பகைவருடைய தோளை வெட்டியவர்; கார்த்

திகழ்வாகு லேயா போற்றி சிறந்திடுங் குகனே போற்றி
இகழ்விலாக் குமரா போற்றி யிளையவா போற்றி போற்றி.

195. பத்தருக் கெளியாய் போற்றி பாற்கரர் கோடி யொன்றாய்
மெத்திய வொளியின் மிக்கு விளங்கிய வுருவா போற்றி
சத்தியத் தத்தாய் போற்றி சகலவா யுதனே போற்றி
சுத்தகந் தர்ப்ப கோடி சுந்தர போற்றி போற்றி. (சரு).

196. எனச்சொலி யேத்திப் பின்னீ திரந்திட்டேன் முனியே யெங்கும்
துனிச்செறி பகவ னேநற் சுப்பிர மணிய னென்னும்
தனிப்பெயர் படைத்து வீறுந் தயாநிதி யடியேன் செய்த
கனப்படு மபரா தத்தைக் கமித்தருள் கடைக்கண் வைத்தே. (சச)

197. காத்தரு ளபய மென்னைக் கைவிடே லென்று பத்தி
வாய்த்திடு முளத்தி னோடும் வழுத்துமென் மொழியைக் கந்த
மூர்த்தியு முவந்து கேட்டு மொழிந்தனன் பிரம னேநீ
மாத்தவ நெடுநாள் செய்த வாற்றினுன் மனம கிழ்ந்தேம்.

198. அடிக்கடி நமக்க ரித்தே யற்புதத் துதிகள் செய்தாய்
கடிக்கம லாச னநின் கருத்துறு வரங்க ளெல்லாம்
நொடித்திடி னனைத்து மீது நோக்கிடேல் வேறு சிந்தை
விடுத்திடென் றண்ணல் கூற வியந்தியா னிவைபு கன்றேன்.

(வேறு)

199. கார்த்தி கேய மாசேன கவினர் பத்த வச்சலனும்
தீர்த்தயான்முன் னறியாமற் செய்யுமபரா தம்பொறுத்தாள்
மூர்த்தி வாகு லேயனெனு முருக னேகுக் குடத்துவச
ஆர்த்த கருணை வாரிதியே யழகார் சரவ ணேற்பவனே. (சஎ)

---

திகை நட்சத்திரத்தின் குமாரர் என்றும் பொருள் கூறுவர்; வாகுலம் = பாகுளம் - கார்த்திகை; 199. இளையவர்: 177.

195. பாற்கரர் கோடி: "சதகோடி சூரியர்கள் உதயமென......ஒரு சோதி வீசுவதும்" (திருவகுப்பு.) கோடி சூரியர்கள் ஒன்றுபட்டாற்போன்ற ஒளியை உடையாய்; "ஆதித்திய ஸகஸ்ர தேஜஸம்" (ஷடாக்ஷரத் தியான சுலோகம்.)

196. சுப்பிரமணியன் - பிரமத்தன்மை முழுதும் உடையவர்,

200. ஆக்க லளித்த லழித்திடுத
லாமுத் தொழிற்குங் காரணனே
போக்கும் வரவு மிலாதபரி
புரண வடிவே பொன்றுடலும்
வாக்கு மனமுங் கடந்தொளிரும்
வள்ள லேசந் ததநீலம்
பூக்குந் தணிகை மால்வரைவாழ்
புனித னேநின் றரிசனத்தால். (சஅ)

201. புனித ஞனேன் யான்மிகவும்
புனித ஞனே னின்றிறைவ
எனது பதவி யருளெனயா
னிரப்ப மகிழ்ந்து கருணையுடன்
வனையு முலக சிருட்டியக்க
மாலை கரகந் தமையீந்து
நினையும் வரமெ லாமளித்து
நிமல வொளியாய் மறைந்தனனே. (சகூ)

202. தந்த வரமெ லாம்பெற்றுத்
தணிகை மலையை வணங்கினான்
இந்த வுலகி லடைந்துமுன்போ
லெல்லாஞ் சிருட்டி செய்திருந்தேன்
முந்த யான்செய் பிரமசுனை
முழுகி முருக னடிபணிந்தோர்
கந்த வுலக மடைந்திடுவர்
கானம் பயினு ரதமுனியே. (ருo)

203. உண்மை யிதுநீ யறியெனவு
முவந்து முனிநா ரதன்பணிந்து
தண்மை பெறுசெந் தாமரைவாழ்
சதுமா முகவ தணிகைமலை

---

201. அக்கமாலை - ருத்திராக்ஷ மாலை. கரகம் - கமண்டலம்.

202. பிரமசுனை - பிரம தீர்த்தம்.

203. வாகீசன் - பிரமன்; வாக்கு - ஸரஸ்வதி.

வண்மை பெறும்வை பவமினுநீ
வகுப்பக் கேட்கும் வாஞ்சையுளேன்
ஒண்மை பெறும்வா கீசவெனக்
குரைத்தி யெனவே தியனுரைப்பான். (ருக)

# 9. அகத்தியன் கல்லாரகிரி அடைந்த அத்தியாயம்

[கதைச்சுருக்கம்: முன்னொரு காலத்தில் கங்காதீரத்தில் சிவபெருமான் சகல சாத்திரங்களையும் சித்த கணங்களுக்கு உரைத்து வீற்றிருந்தருளினர். அப்போது அங்கிருந்த அகத்தியமுனிவர் அப்பெருமானை வணங்கி யெழுந்து, "அடியேன் சிவதருமோத்தர மென்னும் சாத்திரத்தைக் கேட்கும் விருப்புடையேன். ஆதலின் அதனைத் திருவாய் மலர்ந்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அது கேட்ட சிவபெருமான், "தென்றிசையிற் கந்தாசல மென்ற மலையொன்று முருகனுக்குச் சிறந்ததாக விளங்குகின்றது. அங்கே சென்று நீ தவம்புரிந்தால் முருகன் தரிசனம் தந்து உனக்குச் சிவதருமோத்தரத்தை உபதேசம் செய்வான்" என்று கட்டளையிட்டனர்.

அகத்தியமுனிவர் இடையேயுள்ள பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு தணிகாசலம் வந்து அங்கே எழுந்தருளியுள்ள வீரட்டேசுவரரைத் தரிசித்துப் பலவகையாகத் தோத்திரம் புரிந்தனர்.]

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

204. சானவி தீரந் தனின்முன மொருநாள்
சங்கரன் சகலசாத் திரமும்
மேனவில் சித்த கணங்களுக் குரைத்து
வீற்றிருந் தருளுமேல் வையினில்
ஞானய முணர்ந்த வகத்திய னணுகி
நுதற்கணன் சேவடி வணங்கித்
தானெழுந் திருகை தலைமிசைக் கூப்பிச்
சார்பய பத்தியோ டுரைப்பான். (க)

205. இறைவனே புவியி லுளநர ரெல்லாம்
மிழைத்திடு தீவினை நீங்கி
மறைபுகல் புத்தி முத்தியிற் புகுநல்
வழியருள் சிவதன்மோத் தரமென்

204. சானவிதீரம் - கங்கைக்கரை. மேல் நவில்.

றைதரு நாமம் படைத்தசாத் திரத்தை
யடியனேன் கேட்குமா சையினல்
நிறைதரு மனத்த ஞயினே னதனை
நீயருள் புரிகென விரந்தான். (உ)

206. அம்மொழி யிறைகேட் டகத்தியன் முகம்பார்த்
தறைகுவன் கும்பமா முனிவ
செம்மைசே ரிந்தக் கங்கைமா நதிக்குத்
தெற்கிரு நூறுயோ சனையில்
நம்மையே மகிழ்செய் காசிபோற் றுவரை
நாரணற் கிட்டமா னதுபோல்
தம்மைநேர் கந்தற் கிட்டமாங் கந்தா
சலமென வோர்கிரி தயங்கும். (ந)

207. சந்தத மகலா தங்கண்வீற் றிருப்பன்
சரவணோற் பவனவ ணீபோய்
பந்தனை செயுமைம் பொறிவழி புலனிற்
படர்தரு மனத்தினை யடக்கி
ஐந்தழ னடுவ ணருந்தவம் புரியி
னறுமுகன் விழியெதிர் தோன்றிச்
சிந்தனைப் படிநின் செவிப்புல னறியச்
சிவதன்மோத் தரத்தினைத் தெருட்டும். (ச)

208. அகத்திய முனிவ செல்கென விறைவ
னருளலு மகமகிழ்ந் திறைஞ்சித்
தகத்தனி விடைபெற் றவாமியத் திசையிற்
சார்தலும் பருப்பத மெனுமோர்

---

205. சிவதன்மோத்தரம் - ஒரு சைவ நூல்.

206. திருத்தணிகை, கங்கைக்குத் தென்பால் 200 யோசனையிலுள்ளது கந்தாசலம்: திருத்தணியின் திருநாமங்களுள் ஒன்று.

207. பந்தனை - கட்டு. ஐந்தழல் - ஐந்து தழல்; பஞ்சாக்கினி; அவையாவன நாற்றிசைக் கண்ணும் மூட்டப்பட்ட நெருப்புக்களும், சூரியனும்.

208. அவாமியத்திசை - தெற்கு. பருப்பத மென்னுமோர் நகம் - ஸ்ரீசைலம். பிரமராம்பிகை: அத்தலத்திலுள்ள அம்பிகையின் திருநாமம்; "இருப்பனத்தன் பருப்பதத்திற் பிரமராம் பிகையுடன்" (அருணசல. திரு

நகத்தினை விழிகண் டதன்முடி மிசைவாழ்
நாயகி பிரமராம் பிகையோ
டுகைத்திடு விடையான் மல்லிகார்ச் சுனனை
யுவந்துதாழ்ந் தெழுந்துள முருகி. (ரு)

209. தோத்திரம் பலசெய் தரிதவ ணகன்று
தூமுனி தென்றிசை வருங்கால்
ஆர்த்தலை யெறிபொன் முகரிதீ ரத்தி
னமர்ந்தகா ளத்திநா யகனைப்
பார்த்தடி வணங்கி ஞானப்பூங் கோதை
பதமலர் சிரமுறப் பணிந்து
மாத்துதி புகன்று தெக்கண நோக்கி
வரநந்தி யாறெதிர் கண்டான். (சு)

210. புண்ணிய கங்கா நதியினு மேலாம்
புண்ணியம் படைத்தது தூநீர்
நண்ணிய குருகு சலசரங் கமல
நறுமலர் நீலமுங் கஞலித்
தண்ணிய நறும்பூம் பொழிலிரு மருங்குஞ்
சார்ந்துகண் டவர்பவ நீக்கித்
திண்ணிய கதியைத் தரும்பிர வாகச்
செறிவினைக் குறித்தெதிர் வணங்கி. (எ)

211. எழுந்ததின் மூழ்கிப் பூதிகண் டிகையு
மியல்புற வணிந்தனுட் டானம்
விழைந்துசெய் துந்தி வடகரைத் தளிவாழ்
விமலவீ ரேசரைக் காணூஉத்

---

நகரச். 14.) மல்லிகார்ச்சுனன் : அத்தலத்தில் எழுந்தருளிய இறைவன் திருநாமம்.

209. பொன் முகரி: திருக்காளத்தியின் பக்கத்தே ஓடும் நதி. நந்தியாறு: திருத்தணிகையிலுள்ளதொரு நதி; நந்திநந்தினி என நூல்களில் வழங்கும்.

210. குருகு - பறவை. சலசரம் - நீரிற் சஞ்சரிக்கும் மீன் முதலியன. பிரவாகச் செறிவினை - வெள்ளத்தின் மிகுதியை.

211. பூதி - திருநீறு. உந்தி - ஆறு; நந்திநந்தினி. வீரேசர் - வீராட்டகாசர். இவராலயம் நந்தியாற்றின் வடகரையிலுள்ளது. தழும் - தழுவும். தண்டில் தாழ்ந்து - தடிக்கம்பு போல விழுந்து வந்தனஞ் செய்து.

தழுந்தனி யார்வத் தொடுமெதிர் தண்டிற்
றாழ்ந்தெழுந் திருகையுஞ் சிரமேல்
அழுந்திடக் கூப்பி மெய்ம்மயிர் பொடிப்ப
வகத்தியன் றுதியிவை புகல்வான். (அ)

212. அரகர போற்றி சம்புவே போற்றி
யாதிமா தேவனே போற்றி
பரசிவ போற்றி சங்கர போற்றி
பார்ப்பதி பாகனே போற்றி
வரமரு ணீல கண்டனே போற்றி
வளர்விசு வேசனே போற்றி
திரமுறு மமர வல்லபா போற்றி
செயங்கொள்வீ ரேசனே போற்றி. (கூ)

213. என்னுட லின்று நல்லுட லாயிற்
றியான்புரி தவமுநற் றவமே
மன்னுமென் ஞானம் பலன்கொண்மெய்ஞ் ஞானம்
வாய்ந்ததுன் பாதசே வையினுற்
புன்மைதீர் புனித ஞயினன் புனித
ஞயினன் புனிதஞ யினன்யான்
துன்னிய பிறவி தொலைத்திடு முனது
துணைப்பதந் துதித்திடு திறத்தால். (க0)

214. மூன்பிறந் தோரி லினிப்பிறப் போரின்
முதிர்கருப் பத்துறு வோரில்
உன்பத நினையா தன்னிய தெய்வ
முவப்பரே லவர்குலம் வேண்டேன்

---

212. அமர வல்லபா - தேவர்களைத் தம் ஆணைவழியே நடத்தும் ஆற்றலை யுடையவரே.

213. உன் பாத சேவையினுல் என்னுடல் நல்லுட லாயிற்று. தவம் நற்றவமாகவும், ஞானம் மெய்ஞ்ஞானமாகவும் வாய்ந்தன. மூன்று முறை கூறுதல் ஒரு மரபு. இது, "மெய்ம்மையிது மெய்ம்மையிது மீண்டுமிது மெய்ம்மை" (சேது. பிரமகுண்டச். 12), "குன்ருத வன்புனக்கே" (காஞ் சிப். தழுவக். 235) என்னும் செய்யுட்களால் அறியப்படும். "இந்நா ளெனக்குப் பயப்பட்ட திப்பிறவி, இந்நா ளெனக்குப் பயப்பட்ட தியான் செய்தவம், இந்நா ளெனக்குப் பயப்பட்ட தென்னறிவும், இந்நா ளுனைக் காணப் பெற்றமையி னெங்கோவே" (காஞ்சிப். தழுவக். 232) என்ப தைத் தழுவி வந்தது இச்செய்யுள்.

214. "வையமிசைத் தோற்றமுதற் சாங்காறு மன்றவுணைத், தெய்வ

என்குலந் தனக்குத் தெய்வமா தலினீ
யிசைந்திடு முலகமூன் றினும்யான்
துன்பறு சுத்த னாயினேன் சுத்த
னாயினேன் சுத்தனா யினனே. (கக)

215. அனேகசன் மங்க டொறும்பரி சுத்த
ராயனுட் டானநித் தியராய்க்
கனவிலுந் தீமை புரிகிலா தவர்க்கே
கருத்தில்வந் துறுஞ்சிவ பத்தி
பினாகபா ணியனா யொளிர்சிவன் சம்பு
பேருரு வாஞ்சிவன் சம்பு
எனாதனுஞ் சிவனே சம்புவென் றுரைத்திட்
டிவ்விதங் கழிகவென் வாணாள். (கஉ)

216. மனஞ்சிவ பத்தி விழிசிவ பத்தி
வாய்சிவ பத்தியுண் மையவாய்
நினைந்திடக் காண வுரைத்திட வெனக்கு
நிரந்தர நீதரல் வேண்டும்
தனந்தனி யான தேவதே வாமுன்
சகலமுந் தருஞ்செக நாதா
கனந்தரு கருணா கரமகா தேவ
காத்தருள் சங்கர வெனவே. (கங)

217. மதியணி சடைவீ ரேசனைக் கும்ப
மாமுனி துதித்தக மகிழ்ந்தான்
விதியுட னிவற்றை யாவரே யெனினும்
விருப்பொடு சிவனெதிர் நின்று
துதிசெயி னேழு செனனமந் தணராய்த்
தோன்றியா கமமெலா முணர்ந்து
கதியினை யடைவர் நாரத முனிவ
காசினி தனிற்பிற வாரே. (கச)

---

மெனப் பேணாத் திருவிலிக ளென்குலத்தில், எய்தியொரு ஞான்றும் பிற வற்க வெய்துறினும், வெய்தெனமற் றங்கே விளிந்தொழிக வெம்மானே" (காஞ்சிப். தழுவக். 236) என்பதைப் போன்றது இச்செய்யுள்.

215. பினாகம் - இறைவனது வில். எனாதனும் - என் நாதனும்.

216. தனந்தனி = தன்னந்தனி - மிக்க தனிமை; "தன்னந் தனியே யடைவா ருறவே" (தத்துவ. பிள்ளைத்திரு. தாற். 4.)

# 10. அகத்தியனுக்குச் சிவதன்மோத்தரம் உரைத்த அத்தியாயம்

[கதைச் சுருக்கம்: அப்பால், அகத்தியமுனிவர் தணிகாசலத்தைத் தரிசனம் செய்து அங்கே உள்ள மரங்களையும் விலங்கினங்களையும் பிறகாட்சிகளையும் கண்டு மகிழ்ந்தார். பிறகு அக்கிரியை வலம்வந்து அங்குள்ள குமாரதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து முருகக்கடவுளைத் தியானம் செய்து தவம்புரிவாராயினர். அப்போது முருகக்கடவுள் அம்முனிவர்முன் எழுந்தருள அம்மூர்த்தியை அகத்தியர் பலபடியாகத் தோத்திரம் புரிந்து தம் கருத்தை விண்ணப்பஞ் செய்தனர். தணிகைப்பிரான் அதுகேட்டு மகிழ்ந்து அவர் விருப்பப்படியே சிவதருமோத்தரத்தை அவருக்குச் உபதேசம் செய்தருளி மறைந்தனர். அகத்தியர் அவ்வுபதேசம் பெற்று மகிழ்ந்து தம் ஆசிரமத்தை அடைந்தனர்.]

(கலி விருத்தம்)

218. ஆரண முனிவகே ளதன்பின் சீபரி
பூரண நகரியைப் போற்றிக் கும்பசன்
வாரணத் துவசனை மனத்தி ருத்தியே
சீரண வியநதித் தெனுது தீரத்தில். (க)

219. வந்தன னணிமையில் வாரு ணத்திசை
சந்ததங் காவிமுச் சந்தி யுந்தரும்
விந்தைசே ருத்தம வெற்ப தாகிய
கந்தமால் வரைவிழி களிப்பக் கண்டனன். (உ)

220. தேவரு முனிவருந் திக்குப் பாலரும்
மேவுகந் தருவரும் விறலி யக்கரும்
தாவிலாச் சித்தசா ரணருந் தாழ்ந்தெழீஇ
மாவரம் வேண்டியே வழுத்துந் தன்மையும். (ஙு)

---

218. கும்பசன் - அகத்தியர். வாரணம் - கோழி. அணவிய - பொருந்திய.

219. வாருணத்திசை - மேற்றிசை. காவி - நீலோற்பலம். முச்சந்தி - காலை, உச்சி, மாலை; கந்த. வள்ளியம்மை. 221-2-ஆம் செய்யுட்களைப் பார்க்க.

220. இயக்கர் - யக்ஷர். தாவிலா - கேடில்லாத.

221. பன்மரங் களுநிழல் பரப்பிப் பூவுதிர்
தன்மையுந் தென்றன்மெய் தடவு நீர்மையும்
கன்மலி பூஞ்சுனை களுலும் பான்மையும்
வின்மலி பிரமர விளரிக் கானமும். (ச)

222. மயிலினஞ் சிறைவிரித் தாடு மாட்சியும்
குயிலின மாவினிற் கூவுஞ் சீர்மையும்
வெயிலின மணிக்கதிர் விரிக்கு மண்டபத்
தயிலின மருள்விழி யரம்பை யாடலும். (ரு)

223. அரசொடு குங்கும மகரு சந்தனம்
குரவுபா டலம்வழை கொன்றை புன்னையா
விரைகடம் பார்மகிழ் வேணு மாதவி
மருதுகிஞ் சுகம்பலா மாவ சோகமே. (சா)

224. சம்புகுந் துருணிநீ டமாலங் கூவிளம்
நிம்பமா லத்தியா ணீப மாசினி
விம்பமா லதிகர வீரம் பித்திகை
வம்புறு கோங்குகூ தாள மாழையே. (எ)

225. சாலமாச் சாமரந் தான்றி சாதிதக்
கோலமா தவிகடு குருந்தம் பூவைகச்

221. வில் - ஒளி. பிரமரம் - வண்டு. விளரிக்கானம் - விளரி யென்னும் பண்.

223. அரசு - அரசமரம். அக்ரு - அகில். குரவு - குராமரம். பாடலம் - பாதிரி. வழை - சுரபுன்னை. ஆவிரை. கடம்பு - இங்கே செங்கடம்பு. ஆர் - ஆத்தி. வேணு - மூங்கில். கிஞ்சுகம் - முள்முருங்கை.

224. சம்பு - நாவல் மரம். குந்துருணி - ஒருவகை மரம். தமாலம் - பச்சிலை மரம். கூவிளம் - வில்வம். நிம்பம் - வேம்பு. ஆலும் அத்தியும். ஆண் - ஆண்மரம். நீபம் - வெண்கடம்பு. ஆசினி - வேரிற் பழுக்கும் பலா. விம்பம் - கோவைக்கொடி. மாலதி - ஒருவகைப் பூங்கொடி. கரவீரம் - அலரி. பித்திகை - சிறுசண்பகம். வம்பு - வாசனை. கூதாளம் - பூமரங்களில் ஒன்று. மாழை - புளிமா மரம்.

225. சாலம் - ஒருவகை மரம். தக்கோலமென்பது ஒரு மரம். கடு - கடு மரம்; இதன் காய் கடுக்காய். பூவை - காசாமரம். கச்சோலம் - வாசனைப் பொருளைத்தரும் ஒருவகை மரம்; ஓமாலிகைத் திரவியங்கள் முப்பத்திரண்டனுள் ஒன்றென்பர்; "இலவங்கம் பச்சிலை கச்சோல

சோலநா ரத்தைகச் சூரஞ் சம்பகம்
தாலமே முதலிய தருவின் சோலையும். (அ)

226. அரிகரி புலிகளா மாவெண் கொட்டகம்
சரபமான் மரைகள்கர்ச் சனையு முச்சியிற்
கருமுகில் சூழ்தரு கவினுங் கண்ணுறீஇ
இருடிய ரொடுமகிழ்ந் தினிது சென்றனன். (கூ)

227. சருவினில் வச்சிரந் தரள முந்தியே
அருவிக ளிழிதரு மழகுங் கந்தரத்
திருடியர் செறிதரு மியல்புங் கண்டகம்
மருவிறும் பூதொடு வலம்வந் தானரோ. (௧௦)

228. அக்கிரி சூழ்தரு மாசை நான்கினும்
மிக்கபூந் தடத்தினின் மேவு மோதிமப்
சக்கர வாகநீள் சம்பங் கோழிகள்
கொக்கினங் கரண்டம்வெண் குருகொ லிப்பதும். (௧௧)

229. மணிதெளித் தாலென வயங்கு நீர்குலாய்க்
கணிதமி னவமணி களுலித் தாமரை
புணரிதழ்க் குவளைசே தாம்பல் பூத்தளி
அணியலங் காரங்கண் டதிச யித்தெழீஇ. (௧௨)

230. குறுமுனி யவ்வரைக் குணக்கி லுற்றனன்
செறிதரு குமாரதீர்த் தத்தைச் சேவியாப்
பிறவிவே ரறுத்துயர் பேரின் பத்தினை
உறுநரர்க் களித்திடு முதனிற் றோய்ந்தனன். (௧௩)

---

மேலம்" (சிலப். கூ: 76 - 9, அடியார். மேற்.) கச்சூரம் - பேரீச்சமரம். தாலம் - பனை.

223 - 5. இச்செய்யுட்களில் மரப்பெயர்கள் பெரும்பாலும் அடைமொழியின்றி வந்துள்ளன.

226. அரி - சிங்கம். ஆமா - காட்டுப்பசு. எண்குரு - கரடி. மானும் மரைகளும் கண்ணுறீஇ - கண்டு. இதில் முதலிரண்டடிகளில் விலங்கின் பெயர்கள் அடைமொழியின்றி வந்துள்ளன.

227. சருவு - மலைச்சரிவு. கந்தரம் - குகை. இறும்பூது - ஆச்சரியம்.

228. ஆசை - திசை. கரண்டம் - நீர்க்காக்கை.

229. மணி - பளிங்கு. குலாய் - வளைந்து. சேதாம்பல் - செவ்வாம்பல். எழீஇ - எழுந்து.

230. சந்நிதி கிழக்குநோக்கியது. உதனில் - அத்தீர்த்தத்தில்,

231. பூதியு மணிந்துமெய் புனைந்து கண்டிகை
ஓதனுட் டானமு முளுற்றிக் கந்தவேள்
பாதபங் கயமனப் பங்க யத்துள்வைத்
தேதமி லிருந்தவ மியற்றன் மேயினான். (௧௪)

232. நாசியி னுனியிரு நயனம் வைத்துப
வாசனு யருந்தவம் வருட மாற்றலும்
தேசிக னனசெவ் வேண்ம கிழ்ந்தருள்
வீசிட வவனெதிர் விரைந்து தோன்றினான். (௧௫)

233. வாயுவே கத்தினு மனத்தி னுஞ்செலும்
தூயதா மயூரமேற் றோன்றுங் கீழ்த்திசை
ஞாயிறு மெனவொளி நல்கு மேனிமேற்
றேய்வையாங் குங்குமச் செச்சை பூசியே. (௧௬)

234. முத்தணி தாழ்வட முயங்க மார்பிடைச்
சித்தரு முனிவருந் தேவ ருந்தொழத்
தத்துவங் கடந்தொளிர் சச்சி தானந்த
நித்திய வுருவொடு நிலாவுங் கந்தனை. (௧௭)

235. கண்டன னகத்தியன் கதுமென் றேயெழீஇ
மண்டனின் மும்முறை வணங்கிக் கண்கணீர்
கொண்டுமெய்ப் புளகனாய்க் குதுகு துப்பொடு
மிண்டுபே ரானந்த வெள்ள மூழ்கியே. (௧௮)

236. தறியெனப் பரவசஞ் சார்ந்து நின்றெதிர்
வெறிமலர்க் கரஞ்சிர மீது கூப்பிநெஞ்

---

231. ஓது - சொல்லப்படுகின்ற.

232. நாசி - மூக்கு. உபவாசம் - பட்டினி. வீசிட - கொடுத்தற்கு.

233. மயூரம் - மயில். ஞாயிறு - சூரியன்; "பலர்புகழ் ஞாயிறு கடற் கண் டாஅங், கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி" (முருகு. 2 - 3.) தேய்வை - அரைக்கப்பட்ட சந்தனக் குழம்பு முதலியன. செச்சை - மெய்ப் பூச்சு; "குங்குமச் செச்சை கொட்டி" (தக்க. 742.)

234. தாழ்வடம் - மாலை. மார்பிடை முயங்கவென்க.

235. எழீஇ - எழுந்து. குதுகுதுப்பு - ஆசை; "பொழிருன் ……… வேசனை நாற்றங் குதுகுதுப்ப" (பரி. ௨௦:12-3.); "களையாய் களையாய் குதுகுதுப்பே" (திருவா. நீத்தல். 33.)

236. தறி - தூண். வெறி - வாசனை.

சுறுமன லரக்கென வுருகி யற்புதம்
செறிதரு துதிபல செப்பன் மேயினுன். (கக)

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

237. சரணநா னுனக்குச் சுப்பிர மணிய
சடானன மூர்த்தியே சரணம்
சரணமா சேனு சரணஞ்சண் முகவ
சரணம்பார்ப் பதியருள் குமரா
சரணங்கார்த் திகையார் தன்னிய பாலு
சரணநான் குக்குடத் துவசா
சரணநா னுனக்குக் குங்கும வருணு
சரணநான் சரவணுேற் பவனே. (உ0)

238. வேதமார்க் கத்தா லநேகநாட் டவஞ்செய்
விண்ணவர் மனத்தினுக் கெட்டாச்
சோதியா முனது திருவடி காணத்
தொண்டுநா னெத்தவம் புரிந்தேன்
ஆதிநா யகனும் பிஞகபா ணியனன்
றளித்தவே லங்கையி லேந்திக்
காதுதா னவரைச் செகுத்திடா யெனின்விண்
காக்குமோ புரந்தர னினுமே. (உக)

239. அங்கமோ ராறு மாயையோ ராறு
மவிர்தரு குணங்களோ ராறும்
தங்குசத் திகளோ ராறுநல் லிரதஞ்
சார்ந்திடு சுவைகளோ ராறும்

---

237. சரணம் - அடைக்கலம். மாசேனன் - மகாசேனர்; குகப்பெருமான் திருநாமம். தன்னியபாலா - முலைப்பாலைக் குடித்தவரே. குக்குடம் - கோழி. உற்பவன் - உண்டானவன்.

238. தொண்டு - பழமை; முற்பிறப்புக்களில் - காது - மோதுகின்ற. காக்குமோ - காப்பானே.

239. மாயை ஆறு: ஜீவன், ஜீவேசுவரபேதம், ஜீவபரஸ்பரபேதம், ஜகஜ்ஜீவபேதம், ஈசுவரஜகத்பேதம், ஜகத்திற்குள்ள பரஸ்பர பேதமென்பன. குணங்கள் ஆறு - சமம், தமம், உபரதி, திதிக்ஷை, சிரத்தை, சமாதானம்; தர்மம் ஞானம், வைராக்கியம், ஸ்ரீ, யசஸ், பராக்கிரமமென வேறு ஒருவகையும் கூறப்படுகின்றது. சத்திகள் ஆறு - இச்சாசத்தி,

பொங்குமா கமங்க ளாறுமே லாகப்
புகன்றிடு பதார்த்தமோ ராறும்
இங்கணு ருறு விதங்களா மெவையு
மிறைவநின் சடானனத் துதித்த. (உஉ)

240. சீரிய புராணங் களுக்குமுன் னிறையோன்
சேயென வுரைப்பர்நின் றனையே
பாரிசா தம்போற் கொடுப்பைநீ யதுதான்
பஞ்சசா கையினொடு பொருந்தும்
நேரிலா நினக்கங் குலிசெறி கரமா
நீள்பஞ்ச சாகைமே வுதலாற்
கூரிய மதிஞ ரதற்குமே லாகக்
கூறுவர் விசாகனென் றுனையே. (உங)

241. நாரணன் றனக்குப் புயமொரு நான்கே
நவிற்றுமா றிருபுய நினக்குண்
டாரணன் றனக்குச் சென்னிநான் கவனி
னதிகமூ விருசிரம் படைத்தாய்
பூரணன் றனக்கு வதனமோ ரைந்தே
புண்ணிய வதனமா றுளோநீ
காரண மிவற்றைக் கண்டுமங் கவரைக்
கருத்தரென் றுரைப்பதென் னுலகே. (உச)

242. துவமுறு மசுரர் நாசமாம் பொருட்டுஞ்
சுரரெலாம் விசயமாம் பொருட்டும்
சிவனொடு சிவைக்கும் புத்திர னாகித்
திருவவ தாரநீ செய்தாய்.

---

கிரியாசத்தி, ஞானசத்தி, மேதாசத்தி, பிரபுசத்தி, ஐசுவரியசத்தி. பதார்த்தம் ஆறு: திரவியம், குணம், கர்மம், சாமானியம், விசேஷம், சமவாயம், (நியாய சாஸ்திரப்படி); பிரமம், தர்மம், மாயை, யோகம், சித்தி, புருஷார்த்தம் என்பன வேறொரு வகை.

240. பாரிசாதம் - ஒருவகைக் கற்பகம்; இதன் கிளைகள் ஐந்து. அந்தப் பஞ்சசாகைகளைப்போலத் தேவரீருக்குத் திருக்கரத்தில் ஐந்து விரல்கள் உள்ளன. விசாகன் - விசாக நட்சத்திரத்தில் தோன்றியவன்; எங்கும் வியாபித்திருப்பவனென்பதும் ஒரு பொருள்.

242. துவம் - நாசப்படுத்தல்; துவம்சமென்பதன் சிதைவு. சிவை - உமாதேவியார். சகலாதாரனே - எல்லாவற்றிற்கும் ஆதாரமாக உள்ள

தவமுறு சகலா தாரனே யசரஞ்
சரமதாய் விளங்கிய வுலகை
நவமுறு வால லீலையாப் படைத்தாய்
நாதகல் யாணகா ரணனே. (உரு)

243. சுவேச்சையா லுலகந் தோன்றிய துன்பாற்
றுகளறு நினதுசன் னிதியிற்
றவாப்புவ னங்க ளனைத்துநின் னருளாற்
றழைத்திடு நினக்கொரு செயலின்
றுவாப்பொலி கடல்போ லகிலலோ கங்க
ளுனையன்றி நிகழ்வுறு வென்றே
அவாப்பொருப் பறுத்த நுண்ணுணர் வுடையோ
ரனைவரு மறைகுவ ரன்றே. (உகா)

244. புகலரு முனது பொறுமையே யிந்தப்
பூமியென் றுரைத்திடப் படுமால்
உகலரு முனது கருணையே திருமா
லுறங்குறு பாற்கட லாமால்
இகலறு முனது காந்தியே வன்னி
யியங்குநின் சுவாசமே வாயு
நிகரறு நினது சொரூபமே யழியா
நிலைபெறு விசும்பெனப் படுமே. (உஎ)

245. நிற்குண ளுகி நின்றிடு மொருநீ
நிகழ்குண தாரனு மானய்
முற்படு சுருதிக் களவிடா தவனீ
மொழிந்திடு சுருதியு மானய்
சொற்படு முயிருக் குயிரதாய் நிறைந்துந்
துக்கமுஞ் சுகமுநீ மருவாய்
எற்குரு பரநின் னியல்பினை யாவ
ரெடுத்தியம் புறுவலி யினரே. (உஅ)

---

வரே. வாலலீலை - இளமைப்பருவ விளையாட்டு. கல்யாணம் - முத்தி.

243. அவாப்பொருப்பு - ஆசையாகிய மலை.

245. நிற்குணன் - குணமில்லாதவன், எல் - ஒளியையுடைய.

246. இன்னணங் கலச முனிபுகழ்ந் தேத்த
வெம்பிரான் மனமகிழ்ந் துரைப்பான்
நன்னய முணர்ந்த வகத்திய முனிவ
நவிற்றுமித் தோத்திரத் தானும்
பன்னருந் தவஞ்செய் பான்மையி னானும்
பரிந்துள முவந்தன மினிநீ
உன்னிய வரந்தந் தருளுதுங் கேளென்
றுரைத்தலு மகத்திய னுரைப்பான். (உசு)

247. வெகுவித மான தருமங்க ளனைத்தும்
விமலனம் பிகைக்குரைத் திடும்போ
தகமகிழ்ந் தொருங்கே கேட்டறிந் தனைமுன்
னுதலி னெவற்றினு மேலாய்
மிகவருள் விளங்குஞ் சிவதன்மோத் தரத்தை
வினவுற வார்வமிக் குடையேன்
தகவுற வதனை யுரைத்தியென் றிரப்பச்
சரவணோற் பவனுள மகிழ்ந்து. (௩0)

248. பத்தியின் வடிவா மகத்தியன் றனக்குப்
பற்பல தருமத்தின் மேலாய்
முத்தியை யளிக்குஞ் சிவதன்மோத் தரத்தை
மொழிந்துவான் மின்னென மறைந்தான்
உத்தம சிவதன் மோத்தர முழுது
முணர்ந்திடு கும்பமா முனியும்
அத்தகு தணிகை மலையகன் றேதன்
னுச்சிர மந்தனை யடைந்தான். (௩க)

---

247. வினவுற - கேட்பதற்கு. சிவதன்மோத்தரத்தை - சிவதருமங்களைக் கூறும் நூலை.

# 11. தாரகனைக் கொன்ற அத்தியாயம்

[கதைச்சுருக்கம்: அகத்தியமுனிவர் தணிகாசலத்தைத் தரிசனம் செய்து பூசித்த வரலாற்றைக் கேட்டு மகிழ்ந்த நாரதமுனிவர், இந்திரன் பூசித்த வரலாற்றைக் கேட்க விரும்ப, பிரமதேவர் கூறலானார்:

காசிபமுனிவருக்கு அதிதி என்றும் திதியென்றும் இருவர் மனைவியர். அவருள் அதிதி யென்பவள் முப்பத்துமுக்கோடி தேவரையும் திதியென்பவள் அறுபத்தாறுகோடி அசுரர்களையும் பெற்றனர். அவ்விருசாராரும் பகைபூண்டு அமர்புரிந்தனர். அதுகண்ட காசிப முனிவர் இந்திரனைத் தேவலோகத்தில் தேவர்களுக்கு அரசனாக இருந்து அரசாளவும் இரணியனை அசுரர்களுக்கு இறைவனாகச் சோணிதபுரியிலிருந்து அரசாளவும் கட்டளை இட்டார்.

அசுரர்களுக்குள் வன்மையடைத்த தாரகனென்பவன் மாயாபுரமென்னும் இடத்தில் இருந்து கிரவுஞ்சமென்னும் மாயமலையொன்றை அமைத்தான். அந்தமலையின் மாயத்தில் தேவர்கள் சிக்கி மிக்கதுயரத்தை அடைந்தார்கள். இந்திரன் அத்தாரகனோடு பொருது தோல்வியுற்றோடினன்.

அப்பால் இந்திரன் திருமால்பாற் சென்று முறையிட அவர் தாரகனோடு போர்புரிந்து தம் சக்கரப்படையை அவன்மேல் ஏவினர். அப்படை அவனை ஒன்றும் செய்யாமல் மழுங்கி நிற்ப, அவ்வசுரன் அதனைத் தன் மார்பிற் பதக்கமாக அணிந்துகொண்டனன். திருமால் ஒன்றும் செய்ய மாட்டாராகித் தம்மிடம் சென்றனர்.

பிறகு இந்திரன் என்னிடம் வந்து இச்செய்திகளைக் கூற நான் அவனையும் தேவர்களையும் அழைத்துக்கொண்டு தணிகாசலத்துக்குச் சென்று முருகக்கடவுளை நினைந்து தவம்புரியலானேன். எம் தவத்தை உவந்த முருகக்கடவுள் எம்முன் எழுந்தருளி எங்கள் குறையின்னதென்று அறிந்து தாரகன் வரலாற்றை வினவினார். அப்பொழுது யான், தேவாசுரரைப்பற்றிய வரலாற்றைக் கூறி, "இரணியனுக்கு நாசனென்னும் மகன் பிறந்தான். அவனுடைய புதல்வன் தாரகன், அத்தாரகனுக்கு வித்யுன்மாலி யென்பவன் புதல்வன். அவன்பால் தாரகன் தன் அரசை ஒப்பித்துவிட்டுக் காட்டுக்குச் சென்று என்னைநோக்கித் தவம்புரிந்து என்னிடமிருந்து அழிவிலா வரத்தைப் பெற்றான். பிறகு அவன் எம்மையெல்லாம் துன்புறுத்தத் திருமால் அவனைப் பொருது தம் சக்கரத்தை இழந்தனர். அப்பால் தாரகன் வக்கிரனென்னும் அசுரன்பால் எங்களைச் சிறைவைத்துத் துன்புறுத்தினான். நாங்கள் வக்கிராசுரனைப் புகழ்ந்து இரந்து சிறைவீடுபெற்று நின்பால் அணைந்தோம்" என்று விண்ணப்பஞ்செய்தேன்.

கேட்ட முருகக்கடவுள் தேவகணங்களும் பூதகணங்களும் நவவீரர்களும் புடைசூழப் படையெடுத்து மாயாபுரிக்குச் சென்று தாரகனோடு

போர்புரியத் தொடங்கினர். அதுகண்ட தாரகன் கிரவுஞ்சமென்னும் மலைக் குகைக்குள் நுழைய அவனைப் பின்தொடர்ந்து தேவர்களும் வீரவாகு தேவர்முதலியவர்களும் புக்கனர். புக்கபின் மீண்டும் வெளிவர இயலாமல் திகைக்கும்போது முருகக்கடவுள் தம் வேலை ஏவி அக்கிரவுஞ்சகிரியைப் பிளந்தருளவே தேவர் யாவரும் வெளிப்பட்டனர். தாரகன் தன்மாயம் பயன்படாதுபோகவே நெஞ்சம் மாழ்கிப் போர்புரியக் குகப்பெருமான் அவனைச் சங்கரித்தருளினர்.]

(கொச்சகக் கலிப்பா)

249. கந்தமல ரயனிந்தக் கதையுரைப்ப நாரதனும்
சிந்தைமகிழ் கூர்ந்திறைஞ்சிச் செப்புவனுன் முகமுடைய
எந்தையகத் தியன்பூசித் திடுசரித மினிதுணர்ந்தேன்
இந்திரன்பூ சித்தகதை யெனக்கறிய வியம்பென்றான். (க)

250. நாரதமா முனியுரையை நான்முகன்கேட் டகமகிழ்ந்து
சீரியமா னதபுதல்வா செப்புதுங்கேள் காசிபற்குப்
பாரியரா வாரிருவர் பகரதிதி திதியென்பார்
காரிகையா ரிவர்கள்பல காதலரை முனம்பயந்தார். (உ)

251. அங்கவரி லதிதியெனு மரிவைமுப்பான் முக்கோடி
புங்கவரை யுயிர்த்திட்டாள் புனையுமெழிற் றிதியென்பாள்
தங்கறுபத் தறுகோடி தானவரை யுவந்தளித்தாள்
பொங்கியதா னவர்களொடு புங்கவரு மமர்புரிந்தார். (ங)

252. காசிபனங் கதுகண்டு கடவுளருக் கிறையாக்கி
வாசவனை விண்ணுலகில் வைத்தரசு புரிகென்றான்
ஆசையுறு மிரணியனை யவுணர்களுக் கிறையாக்கி
ஏசலிலாச் சோணிதாக் கியநகரி லிருத்தினன். (ச)

253. தானவரில் வலிபடைத்த தாரகனு முயர்வீரன்
ஈனமின்மா யாபுரமா மிராசதா னியிலிருந்தே

---

250. மானதபுதல்வ - என் மனத்திலிருந்து உண்டான புத்திரனே; நாரதரைப் பிரமதேவருடைய மானதபுத்திரரென்று புராணங்கள் கூறும். பாரியர் - மனைவியர். காதலரை - பிள்ளைகளை.

251. புங்கவரை - தேவர்களை. தானவரை - அசுரர்களை.

252. இறை - அரசன். அரசுபுரிக - அரசுசெய்வாயாக. சோணிதாக்கியமென்பதற்குச் சோணித மென்னும் பெயரையுடைய நகரமென்பது பொருள்; ஆக்கியம் - பெயர்.

ஊனமுறு வஞ்சனையே யுருக்கொள்குகை பற்பலசேர்
வானமுறு கிரவுஞ்ச மாமாயப் பொருப்பமைத்தான். (ரு)

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

254. அக்கிர வுஞ்ச மாயையிற் சிக்கி
யமரர்க ளருந்துய ருழந்தார்
உக்கிர மிகுவச் சிரப்படை யேந்தி
யுறுபடை நான்குந்தற் சூழப்
புக்குவிண் ணவர்கோன் றூரக ைெடுபோர்
பொருதுடைந் தோடினன் றனதூர்
துக்கமுற் றவன்பின் பாற்கட லடைந்து
துயில்புரி மாயனை யடுத்தான். (கா)

255. அனந்தன்மேற் றுயிலு மரிதனைக் கண்ணுற்
றமரர்கோன் சிரமுற வணங்கி
இனந்தரு மிருகை சென்னிமேற் கூப்பி
யெழுந்துதோத் திரம்பல வியம்பக்
கனந்தரு மேனி மாயவ னெழுந்து
கணாயிரன் றன்முக நோக்கி
முனம்படு குசலம் வினவியே யிவணீ
முடுகுகா ரணமுரை யென்றான். (எ)

256. வினவிய முகுந்தன் மலர்முக நோக்கி
விண்ணவர்க் கரசனு முரைப்பான்
உனதரு ளுடைய நானிது வரையு
மொருகுறை யின்றியே வாழ்ந்தேன்
வனமணி மார்ப வின்றுதா ரகனால்
வலியிழந் தினைச்சர ணடைந்தேன்
பினையொரு துணையுங் கண்டிலேன் பகையைப்
பெயர்த்தெனைப் புரந்தரு ளென்றான். (அ)

---

253. மாயாபுரம் - தாரகனுடைய இராசதானி; (கந்த. நகர்செய். 27.) மாயப்பொருப்பு - மாயத்தைச் செய்யும் மலை.

255. அனந்தன்மேல் - ஆதிசேடன்மேல். கண்ணாயிரன் - இந்திரன். குசலம் வினவுதல் - க்ஷேமத்தை விசாரித்தல்.

256. முகுந்தன் - திருமால். வனம் - துளசி. சரண் - அடைக்கலமாக, பினை = பின்னை - பின்பு.

257. வாசவன் புகன்ற மொழிதனைக் கேளா
வளர்கடைக் கண்சிவந் தெழுந்து
கேசவன் வீமன் முதுகிடை யிவர்ந்து
கிளர்வன மாலைமார் பசைய
ஆசுகஞ் செறிவிற் சங்குசக் கரம்வா
ளவிர்கதை யைந்தையு மேந்தி
மீசுர கணங்கள் புடைவர வெழுந்து
விரைவின்மா யாபுரி யடுத்தான். (கூ)

(கலிநிலைத்துறை)

258. அடைந்த மாயவன் றாரக னோடருஞ் சமர்செய்
திடைந்த வத்திர சத்திர மெலாமிழந் திடலும்
உடைந்தி டாவலி படைத்திடுந் திகிரியை யுருத்து
மிடைந்த வஞ்சகன் றலையரிந் திடுகென விடுத்தான். (க0)

259. விட்ட சக்கரம் வெஞ்சுடர்ச் சுவாலைகள் பரப்பி
அட்ட திக்கிலும் வெம்பொறி பரந்துகாந் தத்திற்
சுட்டெ வற்றையு முருக்கிடும் வடவைபோற் றுனைவிற்
கிட்ட வந்துதாக் கியதுதா ரகன்மணிக் கிரீவம். (கக)

260. தார கன்களந் தாக்கிய சக்கரந் தகர்ந்து
கூரி ழந்துயர் வலியொழிந் தாற்றலுங் குன்றிச்
சேர லன்றிரு மார்பினிற் பதக்கமாய்ச் செறிய
நார ணன்படை மீள்கிலா மையினுள நலிந்தான். (கஉ)

261. வென்று வாகைகொ டாரகன் மேவினன் றனதூர்
கன்று நெஞ்சுடை மாயவன் வலாரிமுன் ககனத்

---

257. கேளா - கேட்டு. வீமன் - பறவைகளுக்கு அரசனாகிய கருடன்; வீ - பறவை. ஆசுகம் - பாணம். கதை - தண்டாயுதம். மீ சுரகணங்கள் - மேலான தேவகணங்கள் ; மீ - மேல்.

258. இடைந்த - பகைவர் முன்னமே தோல்வியுறுதற்குக் காரணமாக இருந்த. அத்திரம் - கையை விட்டுச் செல்லும் படை. சத்திரம் - கையி லிருக்கும் படை. திகிரியை - சக்கராயுதத்தை. மிடைந்த - நெருங்கிய.

259. உகாந்தத்தில் - யுகமுடிவில். வடவை - வட்வாமுகாக்கினி. துனைவில் - விரைவில். கிரீவம் - கழுத்தை.

260. களம் - கழுத்து. சேரலன் - பகைவனாகிய தாரகன். பதக்கம்- ஓராபரணம். செறிய நலிந்தானென்க.

தொன்று தேவரோ டொழிவறு நிராசைய ராகிச்
சென்று சேர்ந்தனன் பாற்கடற் றிகிரியு மிழந்தே. (கங)

262. அந்த வேலையி லிந்திர னமரரோ டுசாவி
இந்த லோகமுற் றெனைச்சர ணாகதி யடைந்திட்
டெந்தை நீயெமைப் புரந்தரு ளெனத்தொழு திசைத்தான்
வந்த காரிய மென்னென யானவன் வழங்கும். (கச)

263. பிரம னாமிறை கேண்மதி தாரகப் பெயர்கொள்
நிருத னன்மிக வருந்தினே மெமதிடர் நீக்கி
அருள்செய் வாருனை யன்றிவே றொருவரை யறியேம்
மருவு தீயவன் றனைக்கொலு முபாயநீ வகுப்பாய். (கரு)

264. எனவு ரைத்திடு மிந்திரன் மொழிதனை யானும்
வினவி யங்கவன் றனக்கிது மொழிந்தனன் விண்ணோர்
அனைவ ருக்குமென் றனக்குமா யனுக்குமே லான
அனைநி கர்த்திடு மிறைவனாற் பெருவிற லமைந்தோன். (கசு)

265. அன்ன தாரகன் வரத்தினா லொருவரா லழியான்
பன்னு சுப்பிர மணியனா லழிதரப் படுவான்
பின்னை யாருள ரவனொடும் பெருஞ்சமர் புரிவோர்
இன்ன பான்மையா லிளையவன் றனைச்சர ணடைவேம். ()

266. எழுந்து வம்மினென் றிந்திரன் முதலிமை யவரோ
டெழுந்து துன்பொரீஇ யானுஞ்சென் றறுமுக னமரும்
செழுந்தண் கந்தவெற் படைந்திளை யவன்றிரு வடியை
விழைந்து ளத்திடை யிருத்தியே யருந்தவம் விளைத்தேம்.

267. கணிக வெற்பினில் யாம்புரி கடுந்தவ நோக்கிப்
பிணிமு கத்தின்மே லிவர்ந்துசண் முகமுடைப் பெருமான்

---

262. உசாவி - வினவி. இந்த லோகமென்றது சத்தியலோகத்தை. சரணாகதி - அடைக்கலம் புகுதல். யான் என்னவென்று கேட்ப.

263. கேண்மதி - கேட்பாயாக; மதி: முன்னிலையசைச்சொல்.

264. இச் செய்யுளால் தாரகன் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்து வரம் பெற்றானென்றும் தெரியவருகிறது.

266. வம்மின் - வாருங்கள். ஒரீஇ - நீங்கி. கந்தவெற்பு - திருத்தணிகைமலை.

267. கணிகவெற்பென்றும் திருத்தணிகைக்கு ஒரு திருநாமம் உண்டு.

மணிகு யிற்றிய பொன்னரி மாலைமார் பசையத்
துணிக திர்ப்ரபை சூரிய கோடியிற் றோன்ற. (கக)

268. சத்தி யத்தராய்ச் சந்தன குங்கும பளிதம்
மெத்து மார்பராய் விசித்திர மாமுரு வினராய்
வைத்த பேரருள் விழியரா யெமக்கெதிர் மருவப்
பத்தி யிற்சிறந் திமையவ ரொடுமெதிர் பணிந்தேம். (உ௦)

269. சாமி நின்னிரு சரணமே சரணெனச் சார்ந்தேம்
யாமெ மைப்புரந் தருளென விரத்தலு மபயம்
நாம ளித்தனம் வெருவலீ ரமரர்கா ணம்பால்
ஏம மிக்குறும் பத்தியா லினிதுள மகிழ்ந்தேம். (உக)

270. நுங்க ருத்துறு விழைவெது நுவலுதிர் நொடியில்
அங்க தைத்தரு வோமென வருளலு மமலன்
வெங்க தக்கடுந் தாரக னுன்மிக மெலிந்தேம்
இங்க வற்றடிந் தெமைப்புரந் தருளென விரந்தேம். (உஉ)

(கலிவிருத்தம்)

271. நாரத வெமதுரை நயந்து கேட்டலும்
சீரிய குகனெமைத் திருந்த நோக்கியே
தாரகன் வலியெது தந்தை யாரவன்
ஊறெதங் கவனுமை யொறுப்ப தேதென்றான். (உங)

272. அருண்மொழி கேட்டக மகிழ்ந்த யாமெலாம்
முருகதா ரகன்பெயர் மொழியுங் காலைம

---

பிணிமுகம் - முருகப்பெருமானுடைய வாகனமாகிய யானை; "சேயுயர் பிணிமுக மூர்ந்தம ருழக்கி" (பரி. ரு: 2) என்பதையும் 'பிணிமுகம்-முருகற் குரித்தாகிய யானை" என்னும் அதன் உரையையும் பார்க்க. பொன்னரிமாலை - பொன்னை அரிந்து செய்யப்பட்ட மாலை. ப்ரபை - ஒளி.

268. சத்தி - வேலாயுதம். இத்தலத்தில் குகப்பெருமானுக்கு ஞான சத்திதரர் என்பது திருநாமம். பளிதம் - பச்சைக்கருப்பூரம். பேரருளை வைத்த விழியராய்.

269. சரண் - புகலிடம். அபயமளித்தல் - அஞ்சவேண்டாமென்று அருளிச்செய்தல்; அபயம் - பயமில்லாமை. ஏமம் - இன்பம்.

270. விழைவு எது - விருப்பம் யாது? அவன் தடிந்து - அவனைக் கொன்று.

271. நாரத வென்றவர் பிரமதேவர். எது - எத்தன்மையது? தந்தை யார்? ஒறுப்பது ஏது - உங்களைத் தண்டிப்பதற்குக் காரணம் யாது?

துருவுட னடுக்குறு முனது சன்னிதி
மருவிய வலியினால் வகுப்பன் கேட்டியால். (உச)

273. அதிதியுந் திதியுமென் றறையும் பேரினோர்
மதிபெறுங் காசிபன் மனைக்கி ழத்தியர்
திதியறு பத்தறு கோடி தீயராம்
விதியறு மசுரரை விழைந்த ளித்தனள். (உரு)

274. முப்பதிற் புணருமுக் கோடி தேவரைச்
செப்புறு மதிதியாந் தெரிவை யீன்றனள்
தப்பில்சக் களத்தியர் தருத லாற்றினம்
கைப்புறு சுராசுரர் கலாமுற் றாரரோ. (உசு)

275. காசிப னவர்பொரல் கண்டு விண்ணிடை
வாசவன் றனைச்சுரர் மன்ன னாக்கினன்
ஏசறு மரக்கருக் கிரணி யன்றனை
ஈசனாச் சோணிதாக் கியத்தி ருத்தினன். (உஎ)

276. தத்தம திருக்கையிற் றகுவர் வானவர்
மத்தவெஞ் சமரொரீஇ வாழ்ந்தி ருந்தனர்
அத்தகு தானவர்க் கரச னாகமுன்
வைத்திடு மிரணியன் மைந்த னாசனே. (உஅ)

277. நாசனென் றுரைத்திடு நாம வேலினான்
தேசுறு புதல்வனாந் தீய தாரகன்
பேசுமத் தாரகன் பேணு புத்திரன்
வீசிய பெரும்புகழ் வித்துன் மாலியே. (உகூ)

278. விரகுறு தாரகன் வித்துன் மாலிபால்
அரசளித் தருந்தவ மாற்றக் கான்புகுந்

---

272. உருவுடல் - தூலசரீரம்.

273. மனைக்கிழத்தியர் - மனைவியர்; கிழமை - உரிமை. விதி அறும்- செய்யவேண்டிய நற்கருமங்கள் இல்லாத.

274. சக்களத்தியர் - மாற்றாளாகிய மனைவியர். இதனை ஸஹகளத் திரமென்னும் வடமொழியின் சிதைவென்பர். கைப்பு - வெறுப்பு.

275. சோணிதாக்கியத்து - சோணிதநகரில்; ஆக்கியம் - பெயர்.

276. ஒரீஇ - நீங்கி. நாசன் - இரணியன்மகன்.

277. நாசனுடைய புத்திரன் தாரகன். வித்துன்மாலி தாரகன் மகன்;

தெரியினீ் வளர்த்தத னிடைநின் றேதவம்
புரிதலும் யானனப் புள்ளிற் ருென்றினேன். (௬0)

279. விழியெதி ருறுமெனை வேண்டித் தாரகன்
வழிமுறை சென்னியால் வணங்கிப் போற்றலும்
மொழிகநின் கருத்தினை முடித்தும் யாமென
அழிவிலா வரமெனக் கருளென் ருேதுவான். (௬க)

280. தாதைகே ளெனக்குமூ தாதை யாகிய
நாதனு மிரணிய னயந்து முன்றவம்
போதவே புரிந்துனைப் போற்றி வேண்டநீ
சாதறீர் வரமவன் றனக்கு நல்கினை. (௬உ)

281. இப்பெரு வரம்பெறு மிரணி யன்றனைச்
செப்பருந் திறனர சிங்கன் கொன்றனன்
அப்படி பழுதுரு தமர ரிந்திரன்
முப்புர மெரித்தவன் முராரி நின்றனல். (௬௩)

282. அழிவிலா வரமெனக் கருளென் றேத்தலும்
வழுவிலா துதவியே மறைந்திட் டேனரோ
கழிவிலா வரம்பெறு கடிய தாரகன்
இழிவிலாச் சோணிதாக் கியத்தி லெய்தினன். (௬௪)

283. எய்திய தாரக னெமக்க ருந்துயர்
செய்தலும் பாற்கடல் சேர்ந்து நாகணை
ஐயனுக் குரைத்தன மவனெ ழுந்துபோய்
வெய்யவ னொடுபல விதத்திற் போர்செய்தான் (௬௫)

284. அத்திர சத்திர மனைத்துந் தோற்றரி
சித்திசேர் தாரகன் சிரந்து ணித்திடென்
றுய்த்தனன் சக்கர முருத்துப் போதலும்
கைத்தலத் திருத்தினன் கழுத்தி லாரமாய். (௬௬)

---

278. அனப்புள்ளில் - அன்னப்பறவையின்மேல்.

280. தாதை - பிரமனே; விளி. மூதாதை - பாட்டன். போத - மிக.

281. பழுதுரு து - அழிவடையாமல்.

283. அருந்துயர் - தீர்த்தற்கரிய துன்பம். நாக அணை - சேடசயனம்.

284. அரி - திருமால். சித்தி - எண்ணியவை கைகூடுதல்.

285. தாரக னரிவிடு சக்க ரத்தினை
மார்பகத் தணியென வைத்தி ருத்தலும்
நீரகந் துயில்பவ னெஞ்ச மாழ்கியே
காரகஞ் செறியுருக் கரந்து போயினான். (௩௭)

286. அங்கது கண்டபி னமர்செய் தாரகன்
பொங்கிய வுளமகிழ் பூத்துத் தன்புடை
தங்கிய வவுணர்க டாழ்ந்து சூழ்வர
இங்கிதத் தொடுதன திருக்கை யெய்தினான். (௩௮)

287. வக்கிர னெனும்பெயர் மருவுந் தானவன்
பக்கலி லெமைத்துயர் படுத்த வைத்தனன்
துக்கவெஞ் சிறையினைத் தொலைத்தல் வேண்டியாம்
புக்குவக் கிரனடி புகழ்ந்தி ரந்தனம். (௩௯)

288. அங்கவன் விடப்பெறீஇ யாம ணைந்துநின்
செங்கம லக்கழற் சேவை பெற்றனம்
இங்கினிக் கைவிடா தெமைப்பு ரந்தருள்
சங்கர னுதவிய சரவ ணோற்பவ. (௪0)

289. என்றிமை யவரிரந் திடலு மெம்பிரான்
அன்றவர் முகத்தினை யருளி னோக்கியே
ஒன்றிய பயமெலா மொழிமி னஞ்சலீர்
சென்றுதா ரகனுயிர் செகுத்தும் யாமென. (௪க)

290 இமையவர் படையதா யெழுமி னென்றிறை
கமையொடு மருள்செயக் கண்டு விண்ணவர்
அமைவரு மகிழ்ச்சிகொண் டமரர் கோனயன்
உமையொரு பாகனோ டுவண வூர்தியும். (௪௨)

---

285. அணியென - ஆபரணமாக. கார் - கருமை.

286. இங்கிதத்தொடும் - தன்எண்ணத்தைப் பிறர்க்குத் தெரிவிக்கும் குறிப்புடன்.

287. வக்கிரனென்னும் அசுரனிடத்தே எங்களை ஒப்பித்துச் சிறையில் வைப்பித்தான்.

288. விடப்பெறீஇ - விடப்பெற்று.

290. இறை - முருகக்கடவுள். கமை = க்ஷமை - பொறுமை. அமைவரும் - அடக்குதற்கரிய. அயன் - பிரமன். உவண ஊர்தி - திருமால்; உவணம் - கருடன்.

291. சித்தரு மியக்கருந் திறன்ம ருத்துவக்
கொத்தரும் விஞ்சையர் குழுவும் பன்னக
நித்தரும் வசுக்களு நிலைத்த யோகுசெய்
பத்தரு முனிவரும் பலருங் கூடியே. (சங)

292. அரியணை மீதுவைத் தறுமு கன்றனை
மருவிய மறைநெறி வழாத ருச்சனைக்
குரியநற் பொருளெலா முவந்து நல்கியே
திருவபி டேகமுஞ் சிறப்பிற் செய்தனர். (சச)

293. தேவசே னாபதி யெனுந்தி ருப்பெயர்
யாவரு மறிதர வெடுத்தி யம்பினர்
கோவுறும் வருணன்வெண் குடைபி டித்தனன்
காவல்செய் காற்றிறை கவரி வீசினன். (சரு)

294. அளகையர் கோன்மகிழ்ந் தகரு சந்தனம்
களபகத் தூரிகற் பூரங் குங்குமத்
தளமுறப் புனைந்தனன் றமணி யப்பணி
வளையணி யுங்கரன் வனைந்திட் டானரோ. (சசா)

(கொச்சகக் கலிப்பா)

295. விண்ணவர்கோ னிளையவன்கை மேனீட்டப் புயங்கொடுத்தான்
கண்ணுதலோன் றன்பூத கணங்களையு முவந்தளித்தான்
பண்ணமர்பா துகையியமன் பங்கயத்தாண் மலர்செறித்தான்
திண்ணியதம் பலப்படிகஞ் செங்கையிலேந் தினன்சயந்தன். (சஎ)

296. செயதேவ துந்துபியைத் தேவரிடி யெனவதிர்த்தார்
நயமான வாசிபல நானுமெதிர் நின்றுரைத்தேன்

---

291. கொத்தர் - கூட்டத்தார். நித்தர் - நித்தியர்; சிரஞ்சீவிகளாக உள்ளார். யோகு - யோகம்.

292. அரியணை - சிங்காதனம்.

293. கோ - அரசத்தன்மை. காற்றிறை - வாயுதேவன்.

294. அளகையர் கோன் - குபேரன். அகரு - அகில். களபம் - கலவைச்சாந்து. குங்குமத்தளம் - கலவைச்சந்தனம் (தக்க. 42, உரையைப்பார்க்க.) தமனியப்பணி - பொன்னாபரணம். வளை அணியும் கரன் - திருமால்; வளை - சங்கு.

295. இளையவன் - முருகக்கடவுள். பண் - அலங்காரம்.

இயலாஞ்சே னுபதியு மியாமியற்றும் பணிக்குவந்து
வயமேவு வெண்கரியின் மஞ்சமிசை யிவர்ந்திட்டான்.

297. வீரவா குவைமுதலாம் வீரர்களோன் பதின்மரொடும்
காரவா வுறும்பூத கணத்தவரும் புடைசூழச்
சீருலா மகிலேசர் செகதீசர் திரணெருங்கப்
போருலாம் படையேந்திப் பொருப்பைவலங் கொண்டெழுந்தான்.

298. வலம்புரிந்த சரசன்மன் வானவர்பா லனுதினமும்
சலம்புரிந்த தாரகன்வாழ் தருமாயா புரிமுனம்போய்க்
குலம்புரிந்த வெண்சங்கைக் குருமலர்வாய் வைத்தூதி
அலம்புரிந்த பிரளயத்தி னதிர்கடல்போன் முழக்கினான்.

299. அண்டமெலாங் கம்பிக்கு
மவ்வொலிகேட் டனுமரக்கன்
கொண்டனுகாந் தரத்திடிபோற்
குறித்திடுசங் கத்தொனியே
தொண்டிறற்சா ரணவெனலு
மொய்யெனச்சென் றறுமுகனைக்
கண்டுபோரற் கிவணடைந்தான்
கந்தனென வந்துரைத்தான். (ருக)

300. தூதுவன்சொற் கேட்டனுமே
துணுக்கெனத்தா ரகனெழுந்து
காதுசமர்க் கோலமுடன்
கடியபடைக் கலஞ்சுமந்து
மோதவுணக் குழாங்களொடு
முற்றுமெயிற் புறத்தணைந்தென்
நாதனெதி ருற்றுலக
நடுங்குறவெஞ் சமர்புரிந்தான். (ருஉ)

---

296. துந்துமி - ஒருவகை வாத்தியம். ஆசி - ஆசீர்வாதம்; வாழ்த்து.
297. கார் அவாவுறும் - நீர்வேட்கையால் மேகத்தை விரும்பும்.
298. சரசன்மன் - முருகக்கடவுள்; சரம் - நாணற்புல். சலம் - வஞ்சனை. அலம் - துன்பம்.
299. கம்பிக்கும் - நடுங்கும். உகாந்தரம் - யுகத்தின் முடிவு. ஏது - என்னகாரணத்தால் நிகழ்வது. சாரண - ஒற்றனே.
300. மோது - தாக்குகின்ற.

301. விறற்புயனை முன்னிட்ட வீரர்களோன் பதின்மர்களும்
திறற்கணநா தருமரக்கர் சேனையைவக் கிரனெடுங்கோல்
மறக்கொடும்போர் வலிநோக்கி மாயையினாற் றாரகனும்
கறுத்திருள்சேர் கிரவுஞ்சக் கனவஞ்ச முழைபுகுந்தான்.

302. அவனெடுங்கந் தரநுழைந்த வமரரும்பூ தரும்வலிசேர்
நவமுறுவீ ரருங்கிரியி னல்வழிகண் டிலர்மயங்கிச்
சிவனருண்மைந் தனைநினைப்பத் தெரிந்திறைவன் கிரவுஞ்சத்
தவமயனீங் கிடமலர்க்கைச் சத்திதனை யேவினான். (ருச)

303. மெய்ஞ்ஞான சத்திமய வேலெனுஞ்சூ ரியனடுப்ப
அஞ்ஞான சத்திமய மாம்பொருப்பு மழிந்ததால்
மைஞ்ஞானந் தனைப்புனைந்த வாசவனுங் கடவுளரும்
விஞ்ஞான கணங்களொடும் வீரரொடும் வெளிப்பட்டார்.

304. அரிந்தமனா கிபகுமர னடல்வேலாற் கிரவுஞ்சம்
முரிந்ததுகண் டுளநடுங்கி முரணழிந்த தாரகனும்
இரிந்ததுநம் புயவலியு மின்னுயிரு நிலாதென்னத்
தெரிந்தனன்பின் னொருவகையாற் றேறியமர்க் களத்துற்றான்.

305. அரக்கரொடு பூதர்களு மணிவீர வாகுமுதல்
உரைக்குநவ வீரர்களு முருத்தமரி லெதிரேற்றார்
கரக்குவையும் புயக்குவையுங் காற்குவையுந் துடைக்குவையும்
சிரக்குவையும் படத்துணித்தார் தேவர்களித் திடப்பூதர்.

---

301. விறற்புயன் - வீரவாகு. வக்கிரன் - தாரகனுக்கு ஏவல் செய்யும் ஓர் அசுரன்; 287. முழை - குகை.

302. கந்தரம் - குகை. நல்வழி - நல்ல வழியை. மயல் தவ நீங்க - மயக்கம் மிக நீங்க. சத்தி - வேல்.

303. ஞானசத்தி மயவேல் - ஞானசத்தியின் மயமான வேலாயுதத்தை. அஞ்ஞானசத்தி - அஞ்ஞானத்தின் வலி. மை ஞானந்தனைப் புனைந்த - மேகமாகிய ஊர்தியை ஏறுதற்கு அலங்கரித்த; ஞானம் - யானம்; யகரத்திற்கு ஞகரம் போலி. விஞ்ஞான கணங்கள் - விசேடமான சிவஞானத்தையுடைய பூதகணங்கள்.

304. அரிந்தமன் - பகைவரை அடக்குபவன்; "அரிந்த மன்சிலை நாணெடி தார்த்தலும்" (கம்ப. மராமரப். 136.) முரிந்தது - பிளந்தது. நிலாது - நில்லாது.

305. உருத்து - கோபித்து. குவை - குவியல்.

306. அங்கதுதா ரகனோக்கி யடற்சிலையைக் கால்வணக்கிப்
பொங்குகண நாதர்மிசைப் பொருகணைமா ரிகள்சொரிந்தான்
இங்கிதுகண் டறுமுகவ னிருஞ்சிலையைத் தோள்வாங்கி
வெங்கரிமா முகன்மீது விசிகவரு டம்பொழிந்தான். (ருஅ)

307. ஆரியனே வியகணையை யரக்கனுமங் கெதிரழித்தான்
தாரகனே வியகணையைச் சண்முகனும் பொருதழித்தான்
நேரிலிரு வருங்களத்தி னெடும்போதிப் படிபொருதார்
வீரனெனுந் தாரகனு மெலிந்துவிர கொடுமொழிவான். (ருகூ)

(கலிவிருத்தம்)

308. குழந்தைநீ மேருவிற் குழகன் மைந்தவென்
செழும்புய வலிக்கெதிர் தேவர் நிற்பரோ
மொழிந்தமா லயனரன் மூவ ராற்றலர்
இழந்திடா துயிர்சுமந் தேகு கென்றனன். (சு0)

309. அம்மொழி தனைவினு யறுமு கப்பிரான்
இம்மொழி நன்றுநன் றென்ன நக்கடா
வெம்மொழிப் போரினை விடுத்தி யென்கைவாழ்
தெம்மொழி சத்தியாற் செகுப்ப விக்கணம். (சுக)

310. அறிதிநீ யெனப்புகன் றப்பு மாரியாற்
செறிதயித் தியன்கடற் சேனை யாவையும்
முறிதர நொடிவரை முருக்கி னுன்சிரம்
பிறிதரு முடற்குறை பேயொ டாடவே. (சுஉ)

311. அரக்கர்தம் பிணக்குவை யசலம் பற்பல
செருக்கள நிறைந்தன திரைக்க டற்புகுந்

---

306. வாங்கி - வளைத்து. கரிமாமுகன் - தாரகன்; கரி - யானை. விசிக வருடம் - அம்புமழை

307. விரகு - தந்திரம்.

308. மேருவாகிய வில்லையுடைய. உயிரை இழந்திடாமல்.

309. வினய் - கேட்டு. நக்கு - சிரித்து. அடா - கொடிய அசுரர் முதலியோரை நோக்கிக்கூறும் ஒருவகை இகழ்ச்சிமொழி; "காவடாவிது வல்லையேல்" (கம்ப. கரன்வதை. 161.) தெம் மொழி சத்தி - பகைவர் புகழ்ந்து சொல்லுகின்ற வேல்; தெவ் - பகை.

310. அப்புமாரி - அம்புமழை. தயித்தியன் - அசுரன்; திதியின் புத்திரன்; இங்கே தாரகன். நொடிவரை - கைந்நொடிப் பொழுதின் அளவில்.

திரைத்தொரு குருதியா றெழுந்த தாரகன்
கரத்தொரு பொருப்பினைக் களைந்து வீசினான். (௩௩)

312. எதிர்வரு பொருப்பினை யெம்பி ரான்றெறிந்
ததிர்பல வாளியா லரிந்து நொய்தினில்
உதிர்தரு பிட்டென வொழித்துச் சத்தியை
முதிர்சினத் தொடுமுர மூழ்கப் பாய்ச்சியே. (௩௪)

313. கைத்தலை நாந்தகங் கடாவித் தாரகன்
மைத்தலை துமித்தனன் வயங்கு சோரிநீர்
தத்தலை நதியெனத் தரையெ லாம்பரந்
தத்தலை யவனுட லழிந்து வீழ்ந்ததே. (௩௫)

314. வஞ்சகத் தாரகன் மடிய மாய்ந்திடா
தெஞ்சிய தானவ ரிரிந்து போயினார்
வெஞ்சினப் பூதரும் வீர வாகுவும்
அஞ்சர வணபவ னடியிற் றாழ்ந்தனர். (௩௬)

315. கற்பகப் பூமழை கந்தன் சென்னிமேல்
அற்பகத் தொடும்பொழிந் தமர ரார்த்தனர்
வெற்பக விஞ்சையர் விசயம் பாடினார்
பொற்பக முனிவரர் புகழ்ந்து வாழ்த்தினார். (௩௭)

316. மூவரும் புகழ்ந்திடு முருக னங்ககன்
றியாவருந் தொழுந்தணி காச லத்தினைப்
பூவரு மியானரி புராரி வாசவன்
தேவரும் புடைவரச் சென்று சேர்ந்தனன். (௩௮)

---

311. எழுந்த - எழுந்தது; விகாரம். களைந்து - வேரோடு பிடுங்கி.

312. வாளி - அம்பு. பிட்டு - ஒருவகைச் சிற்றுண்டி. உரம் - மார்பு.

313. நாந்தகம் - வாள். சோரிநீர் - இரத்தம். தத்துகின்ற அலை.

315. அற்பு - அன்பு. வெற்பு அகம் - மலையினிடத்துள்ள. விசயம் விசேடமான வெற்றியை. பொற்பு அகம் - அழகிய மனத்தையுடைய.

316. மூவர் - திரிமூர்த்திகள். பூ வரும் யான் - தாமரைப்பூவில் தோன்றிய யான்; இங்ஙனம் கூறுபவர் பிரமதேவர்.

# 12. இந்திரன் நீலமலரால் அர்ச்சித்துத் தெய்வயானையும் வெள்ளானையும் கொடுத்த அத்தியாயம்

[கதைச் சுருக்கம்: தாரகனைச் சங்கரித்த முருகக்கடவுளுடைய அழகு, இளமை, அறிவு முதலியவற்றை இந்திரன் நினைந்து அப் பெருமானுக்குத் தன் மகளாகிய தெய்வயானையை மணம் செய்தளிக்க எண்ணி அப்பிரானுடைய உடம்பாட்டைப் பெற்றான். அப்பால் திருத்தணிகையை விசுவ கர்மாவைக்கொண்டு அலங்கரிக்கச் செய்தான். பின்பு எல்லாத் தேவர்களும் சூழ்ந்திருப்ப முருகக்கடவுளை வணங்கித் தெய்வயானையை மணம்புரிவித்தான். திருமணம் நிகழ்ந்தபின்னர் இந்திரன் அத்தலத்தினிடையே ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி அதன்கண் மூன்று சந்தியிலும் மூன்று கழுநீர் மலர் மலரும்படி செய்து அம்மலரால் தணிகாசலக்கடவுளை அருச்சித்து வழிபட்டான். அப்பால் தன் ஊர்தியாகிய ஐராவதத்தை அங்கே சந்நிதியில் இருக்கச் செய்தனன். முருகக்கடவுள் கட்டளையின்படி அது கிழக்குத் திசையில் தங்கலாயிற்று. தேவரும் பிறரும் முருகப்பிரானது அருள் பெற்றுத் தத்தம் இருக்கையை அடைந்தனர்.]

(கொச்சகக்கலிப்பா)

317. நாரதமா முனிவரகே ணவிற்றுதுமற் றதன்பின்னர்
போரவுணக் கடலினொடும் பொருகிரவுஞ் சத்தினொடும்
தாரகனைத் தடிந்தபிரான் றனதழகு மிளமையுநல்
வீரமுங்கல் வியும்வியந்து விண்ணவர்கோ னிதுநினைந்தான்.

318. சீரியவெண் கரிபுரந்த தெய்வயா னைப்பெயர்கொள்
காரிகையா நம்மகளைக் கனிந்துதவி னிளையவனும்
ஏரியனம் மருமகனு மெனக்கருதி யக்கருத்தை
ஆரியனுக் குணர்த்தியவ னனுமதிபெற் றிதுசெய்தான். (உ)

319. மாநகரார் தமைத்தணிகை மறுகனைத்தும் புதுக்குதற்குத்
தானறிவித் திடுதிரெனத் தன்னுழையொற் றரையேவி

---

318. வெண்கரி புரந்த தெய்வயானை - ஐராவதத்தாற் பாதுகாக்கப் பெற்ற தெய்வயானையம்மை (கந்த. விடைபெறு. 8 - 11.)

319. தான்: அசைநிலை. வதுவை - கலியாணம். நிருமி - உண்டாக்குவாய்.

வானவர்கம் மியன்றனைக்கூய் வதுவைமணி மண்டபமும்
நீநயந்து மனமுவப்ப நிருமியெனப் பணித்திட்டான். (ரு)

320. அப்பணியை யவன்றலைக்கொண் டறுமுகவன் வதுவைதனக்
கொப்பறுமண் டபமனத்தா லூழ்முறையி னிருமித்தான்
செப்புறுமூ வுலகினிலாச் சித்திரவி சித்திரஞ்சேர்
துப்புறுமண் டபவளத்தைச் சொலமயங்கு மனந்தனுமே. (சு)

321. நாற்றிசையுஞ் சோலைகளு நளினமல ரோடைகளும்
மாற்றிசைசெம் பொன்மதிலு மாணிக்க மணவறையும்
வேற்றிசையார் பாடரங்கு மேனகைவந் தாடரங்கும்
காற்றிசைபொற் சாளரமுங் கற்பகநா டெனப்புரிந்தான்.

322. இந்திரன்கண் டகமகிழ்வுற் றிமையவர்விஞ் சையரியக்கர்
சந்திரசூ ரியர்வசுக்கள் சனகர்முதல் யோகியர்கள்
செந்திருமார் பினன்பரம சிவனுடன்யான் சென்றிருப்பச்
சுந்தரமா மணித்தவிசைச் சொலுமுறையின் வழாதமைத்தான்.

323. சங்கநிதி பதுமநிதி தருவளர்சிந் தாமணியான்
மங்கலில்பல் வளமுதவ மணிப்பணிபீ தாம்பரங்கள்
பொங்கமுதம் பூண்டுடுத்துண் டுளங்களித்தார் விஞ்சையர்கள்
அங்கயற்க ணரம்பையர்க ளாடல்செய விசைவடித்தார்.

324. சுந்தரிசெங் கமலையுமை தூகளறுவெண் கலைமடந்தை
அந்தரமங் கையர்தெய்வ யானைதிரு மணங்காண்பான்
வந்திருக்குந் தணிகைமலை வதுவைமணி மண்டபப்பூம்
பந்தரிடைக் கமுகரம்பை பைங்கழைதூண் டொறுஞ்செறித்தார்.

325. சந்தனத்தா னிலமெழுகித் தமனியமா மணிச்சுண்ணம்
விந்தைபெற மேலொழுக்கி வெங்கனலார் தருப்பையொடும்

---

320. ஊழ்முறையின் - விதிப்படியே. சித்திரவிசித்திரம் - ஆச்சரியத்துள் ஆச்சரியமானது. துப்பு - தூய்மை.

321. மாற்று இசை செம்பொன் - உயர்ந்த மாற்றுப் பொருந்திய செவ்விய பொன். வேறு இசையார் - வேறு வேறான சங்கீதப் பயிற்சியை யுடைய மகளிர். காற்று இசை - காற்றுப் புகுந்து ஒலிக்கின்ற.

323. தரு - கற்பகம். ஆன் - காமதேனு. மணிப்பணிகளைப் பூண்டும் பீதாம்பரங்களை உடுத்தும் அமிர்தினை உண்டும் களித்தாரென்க.

324. சுந்தரி - இந்திராணி. அரம்பை - வாழை. கழை - கரும்பு.

உந்துசமித் தினைமுனிவ ருயருமறை விதிப்படியே
தந்துமுரு கனைவணங்கித் தயங்குமரி யணையிருத்தி. (கூ)

326. பைங்கழுநீ ருருவாளைப் பைங்கிளிநேர் மொழியாளைப்
புங்கவர்கோன் றருமானைப் புகறேவ குஞ்சரியை
மங்கலில்கற் புடையாளை மலர்மாதுங் கலைமாதும்
கங்கைநதிப் புனலாட்டிக் கனகமணிப் பட்டுடுத்தி. (கo)

327. சந்தனகுங் குமபளிதத் தண்கலவைச் செழுஞ்சேற்றை
அந்தனத்தி லணிந்ததற்பி னவயவங்க டொறும்பணிகள்
நந்துமெழி லுறப்புனைந்து நறுமலர்க்கற் பகத்தெரியல்
கந்தரப்பொன் மாலையொடு கலந்தசைய வலங்கரித்தார்.

328. எழுமுனிவர் மனைவியர்க ளெழுவருமங் கெழுந்துபோய்ச்
செழுமகவா னுவந்தளித்த திருத்தேவ குஞ்சரியை
வழுவறத்தந் தரியணைமேல் வயங்குகுகன் பாலிருத்தித்
தொழுதுதிரு முன்னின்று சோபனங்கள் பாடினார். (கஉ)

(கலிவிருத்தம்)

329. அந்தர, துந்துமி யைந்து மார்த்தெழத்
தந்திர முனிவரர் சமிதை நல்கிடச்
சுந்தரக் காசிபன் றாய வங்கியை
மந்திர விதிமுறை வளர்த்திட் டானரோ. (கங)

330. காசிபன் வளர்த்திடு கனலின் முன்பர
தேசிகன் கரமிசைத் தேவ குஞ்சரி
ஆசில்கை வைத்துமை யரனின் வாழ்கென
வாசவன் கரகநீர் வார்த்திட் டானரோ. (கச)

---

325. தமனியச் சுண்ணம் - கோலத்திற்குரிய பொற்பொடி. ஆர் தருப்பை - நிறைந்த தருப்பை.

326. தெய்வயானையின் நிறம் பச்சை; 336-ஆம் பாடலைப் பார்க்க. புங்கவர்கோன் - இந்திரன்.

327. பளிதம் - பச்சைக் கருப்பூரம். அம் தனத்தில். தெரியல் - மாலை. கந்தரப் பொன் - மலைக்குகையில் அகப்படும் பொன்.

329. தந்திரம் - நூல். அங்கி - அக்கினி.

330. பர தேசிகன் - மேலான ஆசிரியன். உமாதேவியாரையும் அரனையும்போல வாழ்க வென்று; இங்ஙனம் வாழ்த்துவது மனுவின்நாள் முதல் உண்டென்பர்.

331. ஈசனு மகிழ்ந்தனன் யான்ம கிழ்ந்தனன்
வாசவன் மகிழ்ந்தனன் மான்ம கிழ்ந்தனன்
மீசுரர் மகிழ்ந்தனர் வேத பாரகப்
பூசுரர் மகிழ்ந்தனர் புவன மெங்குமே. (கரு)

332. மலைமகள் களித்தனண் மலரின் மீதுறை
அலைமகள் களித்தன ளனைத்தும் வல்லவெண்
கலைமகள் களித்தனள் கடவுட் பாந்தண்மேல்
நிலைமகள் களிப்பெவர் நிகழ்த்தற் பாலரே. (கசு)

333. விண்ணகம் வாழ்ந்தன வேதம் வாழ்ந்தன
மண்ணகம் வாழ்ந்தன மகங்கள் வாழ்ந்தன
பண்ணகம் வாழ்ந்தன பகர்பு லோமசைக்
கண்ணகம் வாழ்ந்தன கவலை நீங்கியே. (கள)

334. ஐம்முகச் சரபமன் றளித்த மூவிரு
செம்முகக் கேசரி தேவ குஞ்சரி
கைம்முகத் தணிவிரல் கையிற் பற்றியே
மும்முகத் தழலினை முறையிற் சூழ்ந்தனன். (கஅ)

335. செங்கையிற் பூம்பொரி சிதறித் தேவிதன்
பங்கயத் தாண்மலர் பைம்பொ னம்மிவைத்
தங்கவள் கற்பிணை யாக விண்ணிடைத்
தங்கிய வருந்ததி தனையுங் காட்டினன். (ககூ)

---

331. மீசுரர் - மேலான தேவர்கள். வேதபாரகப் பூசுரர் - வேதத்தைக் கரைகண்ட பிராமணர்; பாரம் - கரை.

332. அலைமகள் - திருமகள். கடவுட் பாந்தள் - ஆதிசேடன். அதன் மேல் நிலைத்த மகள், பூமிதேவி.

333. மகம் - யாகம். பண் அகம் - பண்ணுக்கு இருப்பிடமான கந்தருவர் உலகு. புலோமசை - இந்திராணி.

334. ஐம்முகச் சரபம் - சிவபெருமான்; "அருணைக்கே, தழைக்குஞ் சரபமொன்று தான்" (அருவணக். 49); சரபம் - ஒரு பறவை; அது சிங்கத்தை வெல்வது. சரபமளித்த கேசரி - முருகப் பெருமான். தேவ குஞ்சரி - தெய்வயானை யம்மை. ஐந்து முகத்தை யுடைய ஒரு சரபம் பெற்ற ஆறுமுகத்தையுடைய சிங்கம் யானையை மணந்ததென்றது ஒரு நயம்.

335. தேவிதன் - தெய்வயானையின். இணையாக - ஒப்பாக.

336. பொன்மலை மரகதப் பொருப்பொ டேறியோர்
நன்மலை மிசைவரு நலத்திற் றேவியோ
டென்மலை யுருக்குக ணிபத்தி லேறியே
தன்மலை தனைவலந் தானுஞ் செய்தனன். (௨௦)

337. மலைவலம் வந்தபின் மணிப்பொற் கோபுர
நிலைவளர் கோயிலி னெடிய வாய்தலின்
தலையணைந் திபவெரிந் தலையி னின்றிழிந்
துலைவறு சினகரத் துற்று வைகினான். (௨௧)

338. புரந்தரன் றணிகையம் பொற்றை மீமிசை
உரந்தரு பூஞ்சுனை யொன்று தொட்டதில்
நிரந்தர மூன்றலர் நீலம் பூத்திடக்
கரந்தனி லமைத்திறை கழலர்ச் சித்தனன். (௨௨)

339. அங்கழு நீரிடை யறாத மாந்தர்பா
வங்கழு நீரிடை மன்னி வாழ்தரச்
செங்கழு நீர்க்கரிச் சிரனைச் சூன்முதிர்
சங்கழு நீர்ச்சுனைக் கரையிற் றாபித்தான். (௨௩)

340. அன்றுதொட் டவ்வரை யவிர்கல் லாரவெற்
பென்றொரு திருப்பெய ரெய்தி நின்றதாற்
சென்றதைக் காணுபு சேயைச் சேவித்தோர்
துன்றிய பவக்கட றுளைந்தி டாரரோ. (௨௪)

---

336. பொன்மலை முருகப்பெருமானுக்கும் மரகதப்பொருப்பு தெய்வயானைக்கும் உவமைகள். நலத்தின் - நலத்தைப்போல. ஒளி பொருந்திய மலைபோன்ற உரு. எல் - விளக்கம். இபம் - யானை. தன்மலை - தணிகாசலம்.

337. இபம் வெரிந்தலை நின்று இழிந்து; இபம் - யானை; வெரிந் - முதுகு. சினகரம் - கோயில்.

338. பொற்றை - மலை. சுனை - இந்திரதீர்த்தம். தொட்டு - தோண்டி. நிரந்தரம் - எப்பொழுதும். முச்சந்தியிலும் இத் தீர்த்தம் குவளைமலரைத் தருதல் : 341.

339. அங்கே நோய் முதலியவற்றால் அழுகின்ற தன்மை இடையறாத மாந்தரது பாவத்தைக் கழுவும் தீர்த்தம். செங்கழுநீர் விநாயகரை. சங்கு அழுதல், சூலின் முதிர்ச்சியால். வாழ்தரத் தாபித்தானென்க. இச்செய்யுள் திரிபன்று.

340. கல்லாரவெற்பு - திருத்தணிகைமலை; கல்லாரம் - செங்கழுநீர்.

341. சந்ததங் குவளைமுச் சந்தி யுந்தரும்
இந்திர தீர்த்தநீர் யாவ ராயினும்
புந்தியி னினைப்பினும் புரோக்க ணிப்பினும்
கந்தன துலகினைக் கலந்து வாழ்வரே. (உரு)

342. பெண்கரி யுடனிலை பெறுகென் றிந்திரன்
வெண்கரி தன்னையும் விசாகற் கீந்தவண்
எண்கரி முகற்கிளை யோனைத் தாழ்ந்தெழீஇ
விண்கரி யவனொடும் விடைபெற் றேகினான். (உசா)

343. சயந்தரு மறுமுகன் றனக்கு வாசவன்
வயந்தர வளித்தவெண் மாதங் கத்தினை
நியந்தரத் தேகென நிகழ்த்த நின்றதால்
அயிந்திரத் திசைமுக மாகி யின்னுமே. (உஎ)

344. தேவரு முனிவருந் திக்குப் பாலரும்
பூவருந் திருவடி போற்றிச் சேயருள்
மாவரங் களைப்பெறீஇ மனங்க ளித்தெழுந்
தியாவருந் தத்தம திருக்கை யெய்தினார். (உஅ)

345. வின்முறை யரக்கரை வேறற் கிந்திரன்
பன்முறை தணிகையம் பதிய ணைந்துபின்
முன்முறைப் பூசனை முடித்து முன்னிய
நன்முறை வரம்பெறீஇ நயந்து போயினான். (உகூ)

---

341. குவளைமலரை இந்திர தீர்த்தம் முச்சந்தியிலும் தரும். புரோக்கணிப்பினும் - தீர்த்தத்தைத் தெளித்துக்கொண்டாலும்.

342. பெண்கரி - தெய்வயானை. வெண்கரி - ஐராவதம். விசாகன் - முருகன். எழீஇ - எழுந்து. கரியவனொடு - திருமாலோடு. விண் ஏகினானென்க.

343. வயம் - வெற்றி. வெண்மாதங்கம் - ஐராவதம். நியந்தரம் - கட்டும் இடம். நிகழ்த்தியவன் இந்திரன். அயிந்திரத்திசை - கிழக்குத்திசை.

344. பெறீஇ - பெற்று.

345. வில் முறை - தனுர்வேதம்; முறை - நூல். முன்முறைப் பூசனை - முன்னூல்களிற் கூறப்படும் பூசை,

# 13. திருமால் பூசித்துச் சக்கரம் பெற்ற அத்தியாயம்

[கதைச்சுருக்கம்: நாரதமுனிவர் பிரமதேவரிடம் திருத்தணிகாசலக் கடவுளைத் திருமால் பூசித்த வரலாற்றைச் சொல்ல வேண்டுமென்று விரும்ப அவர் கூறலாயினர்:

முன்பு தாரகாசுரனோடு திருமால் பொருதகாலத்தில் அவ்வசுரன் அவரது சக்கராயுதத்தைக் கைக்கொண்டு தன் மார்பில் ஆபரணமாகத் தரித்திருந்தான். முருகக்கடவுள் அவ்வசுரனைச் சங்காரம் செய்தபோது அவ்வாயுதத்தை எடுத்துக்கொண்டு தம் மார்பிற் பதக்கமாகத் தரித்தனர். அதனையுணர்ந்த திருமால் தணிகாசலமடைந்து அங்கே முருகக்கடவுள் கோயிலுக்கு மேல்பால் ஒரு தீர்த்தத்தை அமைத்து அதில் நீராடி அதன் கரையில் இருந்து முருகக்கடவுளை நோக்கிப் பலகாலம் தவம்புரியலானார். அதனை அறிந்த குகப்பெருமான் அவர்முன் தோன்றத் திருமால் மிக்க இன்பத்தையடைந்து வணங்கித் துதி பல கூறினர். முருகக்கடவுள் "நீ வேண்டிய வரம் யாது?" என்று வினவத் திருமால் தம் சக்கராயுதத்தைப் பெற வேண்டுமென்ற தம் விழைவை யுரைப்ப முருகப்பெருமான் அதனைத் தம் மார்பிலிருந்து எடுத்தளித்தனர். அதனைப்பெற்ற திருமால் அக்கடவுளைப்போற்றி வணங்கித் தம் இருப்பிடம் சென்றனர். முருகக்கடவுள் சக்கரத்தைத் தம் மார்பிலிருந்து எடுத்தமையால் அவ்விடத்திற் சிறிது பள்ளம் அன்றுமுதல் உளதாயிற்று.

திருமால் உண்டாக்கிய விஷ்ணு தீர்த்தத்தில் நீராடினோர் நற்பேறுகளைப் பெறுவர்.]

(கட்டளைக் கலித்துறை)

346. கல்லாரத் தாலருச் சித்தே வலாரி களிறுதவு
கல்லார மென்முலை யாடெய்வ யானையைக் காதலுடன்
கல்லார வெற்பற்குக் கல்யாணஞ் செய்த கதையுரைத்தாம்
கல்லா ரரவங் களுமகி ழேழிசைக் கான்முளையே. (க)

---

346. கல்லாரத்தால் - கழுநீர் மலரால். வலாரி - இந்திரன்; வலனென்னும் அசுரனைக் கொன்றவன். களிறு - ஐராவதத்தை. கல் ஆரம் - மாணிக்கப் பதக்கம். கல்லார வெற்பு - திருத்தணிகை மலை. கல் ஆர் - மலை வெடிப்புக்களில் பொருந்திய; கல்: ஆகு பெயர்; கல் - மாணிக்கமுமாம்; "கற்பா லுமிழ்ந்த மணி" (சீவக. 4.) கான்முளை - பிள்ளை.

(கலிநிலைத்துறை)

347. என்றான் விரிஞ்ச னதுகேட்டங் கெழுந்தி றைஞ்சி
நன்றாங்கல் லார கிரிமான்மிய நன்று நன்று
பொன்றாத நான்மறை புகனன்முக பூவை வண்ணன்
சென்றார்வ மோடு புரிபூசையுஞ் செப்பு கென்றான். (உ)

348. மதலாய் தணிகை வரைவேலனை மாய வன்முன்
இதமான பூசை செயுமேது வியம்பு துங்கேள்
நிதமேவு வஞ்ச னெனுந்தாரக நீசன் மீது
கதமேவு மான்முன் விடுத்தான்கதி ராழி தன்னை. (ங)

349. கரியோன் விடுத்த கதிராழியைக் கையிற் பற்றி
அரியோன் கழுத்தி லணியாக வணிந்து கொண்டான்
பெரியோ னெனும்விண் டுவுமாழி பெறாது மாழ்கித்
தரியா னபகீர்த் தியையேந்தித் தளர்ந்து போனான். (ச)

350. அத்தா ரகனைக் குகனட்டரி யாழி வாங்கி
முத்தார மார்பி லணியாக முனம்பு னைந்தான்
மெத்தார்வ மோடுக் கிரவாழியை வேண்டி மாயன்
இத்தா ரணியிற் றணிகாசல மெய்தி னானல். (ரு)

351. எய்தித் தணிகை வரைமீதி லிவர்ந்து மாயன்
கைதொட் டனனா றினநீரிற் கசிந்து மூழ்கி
உய்தற் குரிய வனுட்டான முஞற்றி யாரும்
செய்தற் கரிய தவம்பற்பகல் செய்தி ருந்தான். (சு)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

352. முருகனா லயத்தின் மேல்பான் முகுந்தனார் தொட்ட தெண்ணீர்
மருவுபூஞ் சுனையை விண்டு தீர்த்தமா வகுப்பர் மண்ணோர்
பரவியே யதனிற் றோய்ந்தோர் பவமெலா மகன்று பூவிற்
றிரமதாய் வாழ்ந்து செவ்வே ளுலகினைச் சென்று சேர்வார்.

---

348. மதலாய் - பிள்ளையே. ஏது - காரணம். நிதம் - தினந்தோறும். கதம் - கோபம். ஆழி - சக்கரப்படை.

349. அரியோன் - பகைவன்; என்றது தாரகனை.

350. அட்டு - கொன்று. அரி - திருமாலினது. மெத்து - நிரம்பிய.

351. இவர்ந்து - ஏறி. கை தொட்டனன் - கையால் தோண்டினான்.

352. விண்டு தீர்த்தம் - விஷ்ணு தீர்த்தம். பவம் - பாவம். பூவில் - பூமியில்.

353. அச்சுனைக் கரையின் மாய னைம்புல னடக்கி நாசி
உச்சியி லிருகண் வைத்தே யுளத்தறு முகனை யுன்னி
மெய்ச்சடக் கரத்தை நாவில் விதிப்படி செபித்து மேனி
குச்சென வசைவி லாமற் கொடுந்தவம் புரித னேக்கி.(அ)

354. அருள்செய மனத்தி னுன்னி யறுமுகன் மயிலின் மீது
மருவுபைங் குவளைப் போது வலச்செவி மீது மல்க
விரவுகுங் குமங்கத் தூரி விரிகருப் புரச்செஞ் சாந்தம்
உரவிய புயத்திற் சார்த்தி யுயர்பரி மளங்கள் வீச. (கூ)

355. திப்பிய மணிப்பொன் னுடை திப்பிய மாலை தாங்கி
ஒப்பிலாத் தெய்வ யானை யொளிர்தன பாரக் கோட்டில்
அப்பிய குங்கு மச்சே றளைந்தழ கெறிக்கு மார்பின்
முப்புரி நூலி னோடு முழுமணி மாலை தாழ. (க0)

356. ஒருபதத் திரவி கோடி யுதித்தெனத் திகழ மெய்தான்
குருமணி குயிற்றும் பைம்பொற் குண்டலஞ் செவியி லாட
அருநவ மணிக்க ணங்க ளடர்ந்தபொன் மகுடஞ் சென்னிக்
கிரிமிசைக் கோளு நாளுங் கெழுமிய தெனக்கு லாவ. (கக)

357. தேவருன் னியர்பொற் காம்பிற் செறிந்தவெண் கவரி வீச
மேவுமா ணிக்கக் காம்பின் வெண்குடை சிலர்க விப்ப
ஓவியத் தொழிலின் மிக்க வுயர்கொடி சிலர்பி டிப்ப
நாவினிற் புகழும் பூத நாயகர் பணிந்து போற்ற. (கஉ)

358. விசிட்டராஞ் சனக ராதி விளம்பும்யோ கியருஞ் சூழ
வசிட்டனே முதல வாக வருமுனி வரருங் கூடத்

---

353. சடக்கரம் - ஷடாக்ஷரம். குச்சு - நெய்தற் கருவிகளுள் ஒன்று; "குச்சென நட்டனர்" (கந்த. நாட்டுப்.); மரக்கட்டையுமாம்.

354. உரவிய - வன்மையுற்ற.

355. திப்பியம் - தெய்வத்தன்மை.

356. ஒரு பதத்து - ஒரே சமயத்தில். மெய்தான் திகழ. கோள் - நவக்கிரகங்கள். நாள் - நட்சத்திரம்.

357. ஓவியத்தொழில் - சித்திரவேலை.

358. விசிட்டர் - மேலானவர்; "அருமறை வடிவுபோன் றுளிர், வி சிட்டனும்" (கம்ப. திருவவதாரப். 77.) திசைக்கண் - எட்டுத்திசையி

திசைக்கண்வா ழிந்தி ராதி தேவரு மரம்பை முன்னு
இசைக்குமச் சரக ணங்க ளிருபுடை திரண்டு மொய்ப்ப.

359. ஐந்துதுந் துமியு மார்ப்ப வருந்தவஞ் செயுமு குந்தன்
சிந்தனை களிப்ப முன்னே சென்றனன் சிவன ளித்த
கந்தனப் பொழுது மாயன் கமலநேர் விழிதி றந்து
சுந்தர வதன மாறுந் துகளறு கருணை நோக்கும். (கச)

360. கோடிமன் மதரோர் பாங்கர்க் குழுமிய தெனச்சி றந்து
நீடிய வுருவுஞ் சாந்த நிலவிய நிலையுஞ் சத்தி
கூடிய கரமு மாழி குலவிய வுரமுந் தோகை
ஆடிய மயிலுங் கண்டா னருவினை பலவும் விண்டான். (கரு)

361. கண்டக மகிழ்ந்து மாயோன் கண்கணீ ரருவி பாயத்
தண்டெனப் புவியின் மீது தனதுபஞ் சாங்கந் தோயத்
தெண்டனிட் டெழுந்து ரோமஞ் சிலிர்ப்பமெய் வியர்ப்பப் பின்னும்
மண்டுபே ரன்பி னாலே வழுத்தொடும் வணங்க லுற்றான்.

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

362. சரணங்கந் தனுக்குச் சரணஞ்சே னானி
தனக்குநான் சரணஞ்சண் முகற்குச்
சரணநான் கார்த்தி கேயனுக் கொருநான்
சரணஞ்சுப் பிரமணி யனுக்குச்
சரணநான் கிரவுஞ் சத்தைபட் டவற்குச்
சரணநான் வெகுசெயன் றனக்குச்
சரணநான் செகத்துக் கெலாங்குர வனுக்குச்
சரணநான் குமாரதே வனுக்கே. (கஎ)

---

னும். அச்சரகணங்கள் - அப்ஸரமகளிர் கூட்டங்கள்; கடனீரில் தோன்றி யவர்கள்; அப் - நீர்.

360. சத்தி - வேல். ஆழி - சக்கராயுதம். உரம் - மார்பு. தோகை - கலாபம்.

361. வழுத்து - துதி.

362. சரணம் - அடைக்கலம். சேனானி - சேனாதிபதி; முருகனது திருநாமம்; தேவர்படைக்குத் தலைவனென்றபடி. வெகுசெயன் - மிக்க வெற்றியை யுடையவன்.

363. சரணநான் குகனுக் கென்றடிக் கடிமா
றகும்பய பத்தியோ டுரைத்த
முரணறு துதியைக் கேட்டுள முருகி
முருகவேண் முகுந்தனை நோக்கி
வரமெது கருதி யருந்தவம் புரிந்தாய்
வழங்குது மனத்தது மொழிகென்
றருளொடும் புகலுந் திருமொழி தனைக்கேட்
டகமகிழ்ந் தச்சுத னுரைப்பான். (கஅ)

364. அணுவினுக் கணுவாய் மகத்தினு மகத்தா
யரும்பரந் தனக்குமேற் பரமாய்ப்
புணர்தரு மாயை யாயதிற் புணராப்
பொங்கொளி யாயுல கனைத்தும்
நணுகிய வியாபி யாயகம் புறமாய்
நான்மறை யாலறி யொண்ணுத்
துணைவநின் பாத சேவையே யலது
சொலும்வர மெனக்குவே றுளதோ. (கக)

365. அழிவிலா வரங்கொள் சூரபன் மாவோ
டரிமுகன் றாரகன் முதலா
மொழியும்வா ளரக்கர் குழுவெலா முருக்கி
மூன்றுல கத்தையும் புரந்து
வழுவிலாச் சுவர்க்கந் தனிற்சிறை நீக்கி
வானவர் தமைக்குடி யேற்றிப்
பழியிலா வரசு நீமுன மளித்த
பான்மையால் வலாரிவாழ்ந் திருந்தான். (உ0)

366. அன்னதா ரகன்மே ஞான்முனம் விடுத்த
வாழியங் கவற்கிடர் செயாமற்
சின்னமா னதுகண் டியானிரா யுதனைச்
சென்றெ்ன துலகடைந் திருந்தேன்

---

364. மகத்து - பெரும்பொருள்; "அண்டங்க ளெல்லா மணுவாக வணுக்க ளெல்லாம், அண்டங்க ளாகப் பெரிதாய்ச்சிறி தாயி னானும்" (திருவிளை. பாயிரம். 6) என்பதை இவ்வடிப்பொருள் தழுவியது. மாயையா யதில் - மாயையில்.

365. அரிமுகன் - சிங்கமுகாசுரன். வலாரி - இந்திரன். இச்செய் யுள், "இன்றளிர்க் கற்பகம்" (கம்ப. கையடை;) என்பதைப் போன்றது.

பின்னர்நீ யவனைத் தடிந்துநே மியினைப்
பேரணி யாயணிந் தனையால்
முன்னைவா னவரா லழிவிலா வசுரர்
மூவரை யெளிதினி லட்டோய். (உக)

367. பாலர்தம் விளையாட் டாகநீ யசுரர்
பலரையும் வருத்தமொன் றின்றி
ஞாலமீ தழித்த நின்பிர பாவ
நாயினே னவிற்றிடற் கெளிதோ
சீலமார் நேமி யின்மையா லரக்கர்
சிறிதுமென் றனைமதித் திலரால்
வேலுலாங் கரத்தா யெனதுசக் கரத்தை
விழைவொடுங் கொடுத்தரு ளென்றான். (உஉ)

368. நொந்திரந் திடுகோ விந்தன்வாண் முகத்தை
நோக்கியே பத்தவச் சலனும்
கந்தனுந் தனது திருவுரம் பதிந்த
கதிரொளிப் பருதியை யகழ்ந்து
தந்தனன் கரத்தில் வாங்கியே திருமால்
சக்கர பாணிய னாகிச்
சிந்தனை களித்துத் துதித்தடி வணங்கிச்
சென்றனன் பாற்கட லடைந்தான். (உங)

369. தாரகன் விடுப்பத் தனதுரம் பதிந்த
சக்கரந் தனையகழ்ந் தரிக்குச்
சீர்பெற வளித்த நாண்முத லாகச்
செருத்தணி காசலற் கின்னும்
மார்பகங் குழிந்த திருவடை யாளம்
வயங்கிய திவ்வுல கத்தில்
ஏர்பெற வதனைத் தெரிசனஞ் செய்தோ
ரிடரொழிந் தின்பவீ டடைவார். (உச)

---

366. பேரணி - பதக்கம். அசுரர் மூவர் - சூரனாதியோர்.

367. பிரபாவம் - பெருமை. வேலுலாங்கரத்தாய்: இது கருத்துடை யடையணி.

368. கோவிந்தன் - திருமாலுடைய. பத்தவச்சலன் - அடியார்களிடத்து விருப்பமுள்ளவன்; வத்ஸம் - குழந்தை, கன்று. உரம்பதிந்த... பருதியை - மார்பிற் பதிந்திருந்த சக்கராயுதத்தை.

370. விண்டுதான் விடைபெற் றேகிய பின்னர்
விண்ணவர் குழாத்தொடுஞ் செவ்வேள்
பண்டுதான் மருவுங் கோயிலுட் புகுந்தான்
பகருமம் மாயவன் றெட்ட
குண்டுநீர்ச் சுனையைத் தரிசனஞ் செய்தோர்
குடங்கையி லேந்தியுட் கொண்டோர்
மண்டுகா தலினற் றேய்ந்துளோர் பலனை
மகிதலத் தியாவரே புகல்வார். (உரு)

371. அயனமோ ரிரண்டில் விடுக்களோ ரிரண்டி
லடுத்தமா தப்பிறப் பதனிற்
சயமதா மமாவா சையினுத யத்திற்
றண்புனல் படிந்தெதா சத்தி
நயமதாந் தான மச்சுனைக் கரையி
னுன்மறை யவர்கரத் துதவும்
நியமமா மனித ரடைதரு பலனை
நீணிலத் தெவரறிந் துரைப்பார். (உசு)

372. மெய்ம்மைசே ரன்பி னொடுமெவ ரேனும்
விண்டுதீர்த் தப்புனன் மூழ்கிச்
செம்மைசேர் நியதி புரிந்துவே லிறைவன்
றிருவள ராலயந் தன்னை
மும்மைசேர் பிரதக் கணம்புரி மனிதர்
மூவறு நாடெலாம் புரந்து
கொம்மைசேர் முலையார் போகமும் புணர்ந்து
குவலயத் தின்பெலா நுகர்ந்து. (உஎ)

373. மறுமையிற் சுவர்க்கந் தனிற்கட வுளராய்
மகபதி வாழ்வினு மேலாய்
உறுபெரும் போக மநேகநா ளருந்தி
யும்பரும் போற்றிட வதன்பின்

---

370. குண்டு - ஆழம். குடங்கை - உள்ளங்கை.

371. அயனம் இரண்டு - ஆடிமாசப் பிறப்பு, தைமாசப் பிறப்பு. விடுக்கள் - விஷுக்கள்; சித்திரை விஷு, ஐப்பசி விஷு என்பன. எதா சத்தி - இயன்ற அளவு.

372. நியதி - நியமங்களை. மூவறு நாடு - பதினெண் பாஷைகள் வழங்கும் தேயங்கள்.

மறுவறு செம்பொன் விமானத்தி லேறி
வாத்தியம் பற்பல முழங்கக்
குறைவில்பே ரின்ப மடியவர்க் குதவுங்
குமரவே ளுலகினை யடைவார். (உஅ)

374. மாகமா தத்தி லுதயகா லத்தின்
மாயவன் சுனைதனின் மூழ்கித்
தோகைமா மயிலோன் றிருவடி நினைந்து
தூயமா மறையவர்க் கியன்ற
பாகமார் தானங் கொடுத்தவர் நினைந்த
படிபெறும் போகங்க ளுகர்ந்து
நாகர்வாழ்த் தெடுப்பத் திப்பிய வுருவாய்
நண்ணுவர் சண்முக னுலகம். (உகூ)

375. காவியங் கிரியில் விண்டுமுன் றொட்ட
கற்சுனை தனிலெவ ரேனும்
பாவிகள் படியிற் பாவநா சமதாம்
பற்பல வியாதியால் வருந்தும்
நோவினர் மூழ்கி னேயெலாந் தீரு
நுவல்பெரும் புண்ணியம் வளரும்
மேவுமோர் துளிநீ ரருந்திடிற் கழுவாய்
விதிக்கரும் பாதக மொழியும். (நூ0)

376. அந்தநற் சுனையின் மூழ்கியோர் துளிநீ
ரருந்தியச் சுனைவட கரைவாழ்
தந்திமா முகவன் சன்னிதா னத்திற்
றாழ்புல னடக்கிவீற் றிருந்து
மந்திர செபங்க ளவைசெபித் திடினு
மந்திர சித்தியாம் விரைவில்
புந்தியி னினைத்த பதமெலா மடைவர்
புகழ்பெறு வீணைமா முனியே. (நூக)

---

373. மகபதி - இந்திரன்; மகம் - யாகம்.

374. மாகமாதம் - மாசிமாதம். பாகம் - பக்குவம். நாகர் - தேவர்.

375. கழுவாய் - பிராயச்சித்தம்.

376. தந்தி மா முகவன் - விநாயகர்.

377. விளம்பிய விண்டு சுனையினீ ராடி
விசாகனை யன்பொடு நினைந்தோர்
உளந்தனி னினைத்த பலனெலா மடைவ
ருவந்ததில் விரதமாய்க் கதிரேர்
துளங்குறு மமயத் தனுதினம் படிந்து
சுப்பிர மணியனைக் கண்டோர்
அளந்தறி வரிய புவியினி லுதியா
ராறுமா முகனுல கடைவார். (௩உ)

378. முகுந்தனார் சுனைநன் னீர்படி யாமன்
முருகவேட் கன்பரா காமல்
மிகுந்தகல் லார கிரிவசி யாமன்
மேதினி தனிலுழன் மனிதர்
உகந்துவா மூடம்பு வீணுடம் பரியி
னுயர்சுனை படிந்துசெவ் வேளைப்
புகழ்ந்தடி பணிந்தோ ரிட்டகா மியஞ்சேர்
புத்தியு முத்தியும் பெறுவார். (௩௩)

379. மானதப் புதல்வ விண்டுதீர்த் தத்தின்
மகிமையை மீட்டுமீட் டுனக்கு
நானவிற் றுவதெ னந்தநீர் படித
னலங்கொள்கல் லாரமால் வரையை
ஊனுறப் பணிதல் கார்த்திகே யரையு
மூழுவலன் பொடுதெரி சித்தல்
போனமுற் பிறப்பிற் றவஞ்செய்தோர்க் கல்லாற்
பொருந்துமோ பொருந்துரு வெவர்க்கும். (௩௪)

(கலிவிருத்தம்)

380. அரிபு ரந்தர னண்டர்க ளாதியோர்
பரவு லோக குருகிரி வைபவம்
விரவ வென்றும் விளங்குஞ் சடானனர்
மருவி மன்பதை வந்திக்க வாழ்வரே. (௩௫)

---

377. கதிர் ஏர் துளங்குறும் அமையத்து - சூரியனது எழுச்சி விளங்கும் சமயத்தில்; சூரியோதயகாலத்தில்.

378. அரியின் உயர் சுனை - விஷ்ணு தீர்த்தம்.

379. மானதப் புதல்வ - மனத்திலிருந்து தோன்றிய குமாரனே. உழுவல் அன்பு - ஏழு பிறப்பும் தொடர்ந்த அன்பு.

# 14. சேடன் பூசித்துச் சற்சரம் நீங்கின அத்தியாயம்

[கதைச் சுருக்கம் :—முற் காலத்தில் மந்தரமலையை மத்தாகவும் ஆதி சேடனைக் கயிருகவும்கொண்டு திருமால் முதலியோர் பாற்கடலைக் கடைந்த போது, மந்தரமலையிலிருந்த பிளப்பினில் ஆதிசேடன் சிக்க அவர்கள் இழுத்ததனுல் அவனது தோல் சுரசுரப்பை அடைந்தது; அதனுல் வருந்திய சேடன் திருமாலை வணங்கி, "எனது சுரசுரப்பு நீங்கிப் பூமியைச் சுமக்கும் வன்மையைப் பெற ஓர் உபாயம் கூறவேண்டும்" என்று பிரார்த்தித்தான். திருமால் அவனை நோக்கி, "தணிகாசலத்திற்குச் சென்று நீ தவம் புரிந்தால் குகப்பெருமான் உன் விருப்பத்தை நிறைவேற்றி யருளுவார்" என்ருர்.

ஆதிசேடன் திருமாலை வணங்கி விடைபெற்றுத் தணிகாசலஞ் சென்று முருகப்பெருமானைத் தரிசித்துத் துதித்து அன்று அங்கே தங்கினன். மறு நாள் விஷ்ணு தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அத்தீர்த்தத்திற்கு மேல் புறத் தில் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி அதில் நீராடி அதன் கரையிலிருந்து தவம் புரிந்தான். அவன் தவத்தை உவந்த தணிகாசலக் கடவுள் அவன் முன் தோன்றி அவன் குறையைக் கேட்டு அவனுடைய உடம்பு முழுவதை யும் தம் திருக்கரத்தினுல் தடவவே சேடன் சருச்சரை நீங்கிப் பழைய வன்மையைப் பெற்றனன். அவன் ஆனந்தமடைந்து அக் கடவுளைப் போற்றிப் பழையபடியே உலகத்தைத் தாங்கத் தொடங்கினுன்.]

(கலிவிருத்தம்)

381. தொண்டு பூண்டு சுனையொன் றகழ்ந்துமுன்
விண்டு பூசித்த மெய்க்கதை விண்டனம்
பண்டு சேடன் பரிந்தருச் சித்ததும்
ஒண்ட வாவிங் குரைக்குதுங் கேட்டியால். (க)

382. இந்த மாநிலத் தியாவர்க ளாயினும்
சிந்தை யாசையிற் சேட னருச்சனை
கந்தர் பாலியற் றுங்கதை கேட்பரேல்
நந்து தீவினை தீர்ந்தின்ப நண்ணுவார். (உ)

383. பூரு வத்திற் புரந்தரன் வானவர்
யாரு மச்சுதன் பாலடைந் தேத்தியே

---

381. தொண்டு - அடிமை. விண்டு - திருமால். தவா : விளி.

382. நந்து - பெருகிய.

383. பூருவத்தில் - முன்னெரு காலத்தில். அச்சுதன்பால் - திருமா லிடத்தில். பார் - பாறை. பயோததி - பாற்கடல். எனு - என்று.

பார டுத்த பயோததி யைக்கடைந்
தோரு நல்லமிர் துண்குதும் யாமெனு. (௩)

384. ஓத மாய னுவந்தவ ரோடெழீஇத்
தீதில் பாற்கடற் றீரத்திற் சென்றுமத்
தீதெ னுமந் தரத்தை யிருத்தியப்
போது தாம்பெனப் பூட்டினன் சேடனை. (௪)

385. பூட்டி யேகடை போதினின் மந்தரக்
கோட்டி னேங்குறு கூர்ங்கற் பிளப்பினில்
மாட்டி யீர்ப்ப வகிர்பட் டுரிஞ்சியே
சூட்ட ராவிறைத் தோல்பிணர் பட்டதே. (௫)

(வேறு)

386. பிணர்படு மனந்தனும் பெரிது மாழ்கியே
உணர்வழிந் துளவலி யொடுங்கி நாடொறும்
புணர்தரு வியாதியாற் பூமி தாங்கலா
திணரெரி தோய்ந்தென விடுக்க ணெய்தினன். (௬)

387. சற்சரை வடிவொடுஞ் சழங்கு சேடன்றன்
அற்பொடு துயிலரி யடியைப் போற்றினான்
முற்படு துயரிது மொழிவ லென்றெணிக்
கற்செறி சிரமிசைக் கரங்கள் கூப்பியே. (௭)

388. அனந்தனம் மாயவ னடிவ ணங்கியே
தனந்தனி யாயொளிர் சச்சி தானந்த
இனந்தரு சகத்தினுக் கிறைவ யாவையும்
முனந்தரு முகுந்தவென் மொழியைக் கேட்டியால். (௮)

---

384. எழீஇ - எழுந்து. தீரம் - கரை. ஈது மத்தாகுமென்ன - இந்த மந்தரமலை மத்தாகுமென்று.

385. மந்தரமாகிய கோடு; கோடு - சிகரம். இது மேருவின் வடசிகரமாதலின் இங்ஙனம் கூறினர். வகிர்பட்டு - பிளவுபட்டு. சூட்டு - பாம்பின் உச்சிக் கொண்டை. அரா இறை - பாம்பின் தலைவனை சேடன். பிணர் பட்டது - சுரசுரப்பை அடைந்தது.

386. இணர் - பலசுடர். "இணரெரி" (குறள், 308.)

387. சற்சரை - ஜர்ஜரா; சுரசுரப்பு. அற்பு - அன்பு. கல் - மாணிக்கம்.

388. தனந்தனி - தன்னந்தனி; மிக்க தனிமை. இனம் - கூட்டம்.

389. பயோததி கருடணம் பண்ண மந்தரத்
தயாவறு தாம்பென வாத்து வானுளோர்
எயாதிரு கரத்தினு மீர்ப்பத் தேய்ந்துடல்
வியாதியா லுளமிக மெலிந்து ளேனரோ. (கூ)

390. அலமரக் கடைதொறு மலையு மந்தர
மலையினிற் கூர்ங்கலென் வடிவிற் றுக்கலால்
உலைவுறு சற்சர வுருவ மாயினேன்
நிலமுறு சுமையினி நின்று தாங்கலேன். (கo)

391. ஆதலிற் சற்சர மனைத்து நீங்கியிப்
பூதலத் தினைமுடி பொறுக்கும் வன்மையே
நாதவென் றனக்குற நல்லு பாயநீ
ஓதென வறிதுயி லுணர்ந்த மாயவன். (கக)

392. ஒருபுற மாகவொஞ் சரித்துப் பூமிசை
ஒருமுழங் கையினை யூன்றிச் சற்றுமேல்
ஒருதலை நிமிர்த்தகங் கரத்தி னூடுவைத்
தொருபணி யிறைமுக முவந்து நோக்கியே. (கஉ)

393. வடிவுறு சற்சர மாறி யம்புவி
முடிமிசைச் சுமந்திடு மொய்ம்பு நின்றனக்
கொடிவிலா துற்றிடு முபாய நானினி
நொடிகுவன் கேண்மதி நுனித்த கேள்வியாய். (கங)

394. தாரணி தனிலறந் தழைத்த காஞ்சியின்
சீரணி யுத்தர திசையி னெல்லைதான்
ஏரணி யோசனை யிரண்டிற் சீபரி
பூரண நகரெனப் பொலியு மோர்தலம். (கச)

---

389. கருடணம் = கர்ஷணம் - இழுத்தல். ஆத்து - கட்டி (சீவக. 1882.) எயாது - எய்யாது; இளையாமல்; தொகுத்தல்.

390. அலமர - சுழல. கூர்ங்கல் - கூரிய கல்.

392. ஒஞ்சரித்து - ஒருக்கணித்து; கொங்குநாட்டு வழக்கு. பணி இறை - ஆதிசேடனது.

393. மொய்ம்பு - வன்மை. நொடிகுவல் - சொல்வேன்.

394. உமாதேவியார் முப்பத்திரண்டறங்களும் செய்தருளுதற்கு.

395. மங்கல சுபகர மருவு மாந்தர்கள்
தங்குல வொழுக்கமுந் தானி யங்களும்
பொங்குறு நிதிகளும் பொலிந்து நாடொறும்
எங்குள்வீ ரேசனு லயமு மேய்ந்ததால். (கரு)

396. அன்னமா நகரணி மைக்கண் மேற்றிசை
முன்னவா னவர்குழா முனிவர் சித்தர்கள்
துன்னும்யோ கியரெலாந் துதித்துப் போற்றிட
மன்னிவாழ்ந் தொளிருங்கல் லார மால்வரை. (கசு)

397. அச்சயி லத்தறு முகவ னுர்வமோ
டெச்சயி லத்திருப் பினும்வெங் கோபமப்
பொச்சையிற் றணிதலிற் பொருந்து மெண்மடங்
கிச்சையி லனுதின மிருக்கு மென்பவே. (கஎ)

(கலிநிலைத்துறை)

398. உலக னைத்தையுங் காக்கவு முறுநர்தம் வியாதி
பலவு நீக்கவும் பன்னிரு விழிகள்பன் னிருதோள்
குலவு மூவிரு முகத்தொடுங் குமரவே ளென்றும்
நிலவு மவ்வரை யடைந்துநீ நெடுந்தவம் புரிதி. (கஅ)

399. முருக னின்னெதிர் தோன்றிநீ முன்னிய வனைத்தும்
தருவ னின்னுடற் சற்சர வியாதியுந் தணப்பை
இருநி லத்தினைச் சுமந்திடு மெறுழ்வலி பெறுவை
விரைவி னேகுதி யென்னலு மிகமகிழ்ந் தனந்தன். (கசு)

400. அச்சு தன்பதம் பணிந்தவ னருள்விடை பெற்றுக்
கச்சி யின்வட பாற்றணி காசலங் கண்டு

---

இடமாக இருந்தமையின், 'அறந்தழைத்த காஞ்சி' என்றார். சீபரிபூரண நகர் - திருத்தணிகை; சீ - ஸ்ரீ.

395. மங்கல சுபகரம் - இருபெயரொட்டு. வீரேசர் - வீரட்டேசுவரர்.

396. கல்லார மால்வரை ஒளிருமென்க.

397. சயிலம் - மலை. சூரன் முதலியவர்களிடமிருந்த கோபம் இம் மலைக்கு வந்தபின் முருகனுக்குத் தணிந்தமையால் இம்மலை தணிகை யென்று பெயர்பெற்றதென்பர். பொச்சை - மலை.

399. தணப்பை - நீங்குவாய். அனந்தன் - ஆதிசேடன்.

நச்சி தஞ்செய்சீ பூரண நகரினி லெய்தி
உச்சி தம்பெறு சினகரத் துற்றுவீ ரேசர். (௨0)

401. பாத தாமரை வணங்கியே பன்முறை பழிச்சிச்
சீத வார்புனற் குமாரதீர்த் தத்திடைத் திளைத்துப்
பூதி கண்டிகை புனைந்தனுட் டானமும் புரிந்து
வேதி யன்சுனைப் புனல்சிர மிசைப்புரோக் கணித்தே

402. நீல மால்வரை மீதுபோய் நின்றுசே ணளவும்
கோல மாமணிக் கோபுரம் பொன்மதில் வயிரக்
காலி னோங்குறு மண்டபங் கதிர்மணிப் பச்சை
சாலும் பித்திகை சந்திர காந்தவே திகைகள். (௨௨)

403. தரள மாலிகை தயங்குகோ மேதகக் கொடுங்கை
கரள நாகங்க ளுமிழ்மணிக் கதிருமிழ் கும்பம்
விரவு நீள்கருப் பக்கிரு கங்கண்மே வுறுசீர்ப்
புரிசை சூழ்திரு வாலயப் பொலிவினைக் கண்டான். (௨௩)

404. பேரி கொக்கரை பிறைமுகி சச்சரி தடாரி
பூரி கைக்சதி சல்லரி பொருமுர சுடுக்கை
ஆரு மத்தளி யார்த்தெழ வரம்பைமே னகையோ
டேரு ருப்பசி திலோத்தமை யெதிர்நின்று நடிப்ப. (௨௪)

405. தூப மாலையுந் துகளறு பசும்பொனிற் றகளித்
தீப மாலையுஞ் செறிதிருக் கோவிலுட் புகுந்து

---

400. நச்சு இதத்தைச் செய் - யாவரும் விரும்பும் இன்பத்தைச் செய்கின்ற. உச்சிதம் - உயர்வு. சினகரம் - கோயில்.

401. பழிச்சி - துதித்து. திளைத்து - ஸ்நானம் செய்து. வேதியன் சுனை - பிரம தீர்த்தம்; இது சுனையென்னு மாத்திரையாய் நின்றது, இது கூறுபவர் பிரமதேவராதலின். புனல் புரோக்கணித்து - தீர்த்தத்தை மேலே தெளித்துக்கொண்டு.

402. நீலமால்வரை - தணிகைமலை. சேண் - வானுலகம். பச்சை - மரகதமணி. பித்திகை - சுவர். வேதிகை - திண்ணை.

403. கரளம் - விடம். மணி - மாணிக்கம். புரிசை - திருமதில்.

404. பேரிமுதல் மத்தளி ஈறுக வுள்ளவை வாத்தியப் பெயர்கள்.

405. தகளி - அகல்; "வையந் தகளியா" (திவ். முதற்றிரு. 1.) மாலை - வரிசை. நீப மாலையன் - கடப்ப மாலையை அணிந்த முருகக்கடவுளது,

பாப மாலைகள் பாறவிண் ணவர்குழாம் பரவும்
நீப மாலையன் றிருவடி நிலமுறப் பணிந்தான். (உரு)

406. விழுந்தி றைஞ்சிய வனந்தனும் வெங்கனன் மெழுகிற்
குழைந்த நெஞ்சமோ டெழுந்துபஃ றோத்திரங் கூறிச்
செழுந்தி ருத்தரு தேவகுஞ் சரிதிரு வடியும்
தழைந்த வள்ளிசெந் தாமரை யடிகளும் வணங்கி. (உசு)

407. ஆவி நற்றுணை யாகுமா வச்சகா யனையும்
கோவி லுட்செறி குமாரலிங் கத்தையும் பணிந்து
தாவி லொன்பது வீரர்க டாளையுந் தொழுது
தேவ வெண்கரிப் புறத்துவந் திறைஞ்சினன் சேடன்.

408. அற்றை நள்ளிருட் போதவ ணமர்ந்துவை கறையில்
உற்றெ ழுந்துபோ யுவணவா கனன்புதுச் சுனைநீர்
முற்று மேனியிற் றிளைத்திட மூழ்கிநீ றணிந்து
குற்ற நீக்கிடு கண்மணி கூறிடந் தரித்து. (உஅ)

409. சாற்று சந்தியை முடித்துமா யவன்சுனை தனக்கு
மேற்றி சைப்புறத் தொருசுனை விருப்பொடுந் தொட்டுப்
போற்று தன்பெயர் பூண்டவப் புனலின்முப் போதும்
காற்றை யுண்பவன் மூழ்குபு கரணமுள் ளடக்கி. (உகூ)

410. கூறு சூரனு தியர்தமைக் குமைத்துவான் காத்தோன்
ஆறெ ழுத்தையுஞ் செபித்தறு முகனையுள் ளடக்கி
ஊறில் கல்லெனத் தறியென வுடலசை யாமல்
தேறு மெய்த்தவஞ் செய்திருந் தனனுயர் சேடன். (௩o)

---

406. பல் தோத்திரம். திரு தரு - திருமகள் பெற்ற. திருத்தரு வென்பதை வள்ளிக்கும் கூட்டுக. இவ்விருவரும் திருமாலுடைய மகளிர் (கந்த. விடைபெறு. 1, பார்க்க.)

407. ஆவச்சகாயன் - ஆபத்ஸகாய விநாயகர். வெண்கரி - சந்நிதியின் முன்புள்ள யானை.

408. உவண வாகனன் - திருமால்; உவணம் - கருடன். கண்மணி - உருத்திராட்சம். கூறிடம் - நூல்கள் கூறும் இடங்களில்.

409. சந்தி - சந்தியாவந்தனம். தொட்டு - தோண்டி. காற்றை உண்பவன் - ஆதிசேடன்; பாம்புகள் காற்றை உணவாகக் கொள்ளும்.

410. உள் அடக்கி - தியானித்து. தறி - தூண்.

411. அருந்த வம்புரி சேடனுக் கருள்செயக் குமரன்
திருந்து விஞ்சையர் சித்தர்விச் சாதர ரியக்கர்
பொருந்து விண்ணவ ரிருடியர் யோகியர் புடையில்
நெருங்க மேனகை யாதியர் நின்றெதிர் நடிப்ப. (௩௧)

412. மயிலி னேறிமுன் வருதலு மலர்விழி திறந்து
பயிலு மாதவச் சேடனும் பார்த்தெதிர் பணிந்தான்
இயலு மூவிரு வதனமு மீரறு மலைநேர்
புயமு நீடருள் பொழிதரு பன்னிரு விழியும். (௩௨)

413. அகரு கப்புர நரந்தகுங் குமமவிர் புழுகு
புகரி றென்மலைச் சந்தனம் புனைந்தழ கெறிப்ப
நிகர றுந்திருத் துணைவிய ரிருபுற நெருங்கப்
பகரு மெய்யொளி பன்னிரு பருதியைப் பழிப்ப. (௩௩)

414. கோடி மன்மத ரோருழிக் குலவிய தென்ன
நீடு பேரழ கொடுநவ ரத்தின நிழல்சேர்
பீடு றும்பல பணிகளு மவயவம் பிறங்க
ஆடு கற்பக மாலைதாழ்ந் தசைதரு மார்பும். (௩௪)

415. விலையி லாதபொன் னுடைமேல் விளங்கிய விடையும்
கலையெ லாந்தெரி கட்செவிக் கிறையிரா யிரங்கண்
மலரெ லாங்களி கூர்ந்திடக் கண்டக மகிழ்ந்து
தலையெ லாம்புவி தோய்ந்திடத் தாழ்ந்தெழுந் துரைப்பான்.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

416. மங்க ளம்பவ புத்திரா மங்க ளந்தவ மித்திரா
மங்க ளஞ்சர சன்மனே மங்க ளந்திர கன்மனே
மங்க ளஞ்சிகி வாகனா மங்க ளம்புகழ் மோகனா
மங்க ளங்கரு ணாகரா மங்க ளங்குண சாகரா. (௩௬)

---

413. நரந்த குங்குமம் - கத்தூரியோடு கலந்த குங்குமப்பூ. புகர் - குற்றம். தென்மலை - பொதியின் மலை. துணைவியர் - மனைவியர். பன்னிரு பருதி - துவாதசாதித்தர்.

415. ஆயிரந் தலைகளை யுடையனாதலின் தலையெலாமென்றார்.

416. பவன் - சிவபெருமான்; "பவனெம்பிரான்" (திருவா.) சரசன்மன் - நாணற்புல்லில் அவதரித்தவர்; சரம் - நாணற்புல்- திர கன்மன் - ஸ்திரமான தொழிலையுடையவர்; ஸ்திரம் - நிலையானது. சிகி - மயில்.

417. மங்க ளந்தணி காசலா மங்க ளம்பத்த வச்சலா
மங்க ளஞ்சத்தி யத்தனே மங்க ளஞ்சுத்த நித்தனே
மங்க ளம்புவ னேசனே மங்க ளம்பவ நாசனே
மங்க ளம்வள்ளி நாயகா மங்க ளஞ்சுப மங்களம். (௩௭)

418. தார கன்றனை மாய்த்திடுஞ் சண்மு காசுப மங்களம்
கோர சிங்கமு கன்றனைக் கொன்ற வாசுப மங்களம்
சூர பன்மனை யட்டிடுஞ் சுந்த ராசுப மங்களம்
வீர ரொன்பதின் மர்க்கருள் வித்த காசுப மங்களம்.

419. மங்க ளம்புவி யாக்குவாய் மங்க ளம்புவி போக்குவாய்
மங்க ளம்பிணி நீக்குவாய் மங்க ளம்மரு டேக்குவாய்
மங்க ளம்மலர்க் கந்தனே மங்க ளம்மறைக் கந்தனே
மங்க ளந்திருக் கந்தனே மங்க ளஞ்செய மங்களம். (௩௯)

420. வேல னுக்குச் செயஞ்செயம் விசாக னுக்குச் செயஞ்செயம்
கால னுக்கொரு காலனுங் கருத்த னுக்குச் செயஞ்செயம்
பால னுக்குச் செயஞ்செயம் பராப ரற்குச் செயஞ்செயம்
சீல னுக்குச் செயஞ்செயஞ் சேந்த னுக்குச் செயஞ்செயம்.

421. போற்றி போற்றி சடானனு போற்றி போற்றி புராதனு
போற்றி போற்றி வரோதயா போற்றி போற்றி நிராமயா
போற்றி போற்றி சிலாதலா போற்றி போற்றி நிராகுலா
போற்றி பார்வதி நந்தனு போற்றி காங்கெய போற்றியே.

422. என்றி ராயிர நாவினு லேத்து சேட னிருந்துதி
நன்று கேட்டருள் சேவலா னயந்து கட்கடை நல்கிநீ
இன்று மாதவஞ் செய்தலால் யாம கிழ்ந்தன முன்கருத்
தொன்று மார்வ முரைத்தியே லுதவு துங்கடி தென்றனன்.

---

417. சத்தி அத்தன் - வேலைத் தாங்கிய திருக்கரத்தை உடையவர்.

418. சிங்கமுகன் - சிங்கமுகாசுரன்.

419. தேக்குவாய் - நிறைப்பாய். மலர்க்கந்தனே - பூக்களின் மணத்தையுடையவரே; கந்தம் - வாசனை. மறைக்கு அந்தனே - வேதமுடிவில் இருப்பவரே.

421. புராதனன் - பழையோன். சிலாதலா - குறிஞ்சிநிலத் தலைவரே. நந்தனன் - பிள்ளை,

422. சேவலான் - சேவற்கொடியை யுடையவர். கருத்து ஒன்றும் - மனத்திற் பொருந்திய. கடிது - விரைவில்,

423. முருகன் றண்ணளி யோடிது மொழியப் பாம்பிறை நெஞ்சகம்
உருகி யஞ்சலி யத்தனு யுரைப்ப னென்னுயிர் நாயகா
பெருகு மென்னுடற் சற்சரப் பீடை யான வியாதியால்
அருகி யென்வலி குன்றியே யவனி தாங்கவு மாற்றலன்.

424. முன்பு போல்வலி பெற்றுடன் மூடு சற்சரை பிடித்த
துன்பொ ழிந்துவ சுந்தரை சுமக்கு நல்வர மீதியென்
றன்பி னோடுரை யாடிய வாதி சேடனு டம்பெலாம்
மின்கு லாவுதி ருக்கையான் மென்மெ லத்தட வுற்றனன்.

425. அக்க ணத்தில்வி யாதிபோ யாதி சேடன் விசேடமாம்
மெய்க்கு ணத்தின னாகியே விளங்கி வன்மை யடைந்தனன்
தொக்கு ரித்திடு பன்னகந் துன்னு மின்ப மடைந்தென
நக்க னுக்கொரு தேசிக னயந்த ளித்தவி பூதியால். (சடு)

426. பூதி பெற்றிடு சேடனும் போந்து பூமுடி தாங்கினன்
ஓது சித்தர் முனிக்குழா மும்பர் போற்ற விசாகனார்
சோதி பெற்றிடு மாலயந் துன்னி னானந் தன்சுனை
ஈது கண்டவர் மூழ்கினோ ரிகல்வி யாதி தணப்பரே. (சகூ)

---

423, அஞ்சலியத்தனாய் - குவித்த கையை யுடையவனாகி.

424, வசுந்தரை - பூமியை. ஈதி - தந்தருள்வாயாக.

425. தொக்கு உரித்திடு - தோலை உரிக்கின்ற. பன்னகம் - பாம்பு. அடைந்தென - அடைந்தாற்போல. நக்கனுக்கு- பரமசிவனுக்கு. விபூதியால் வன்மையடைந்தனன்.

426. பூதி - திருநீறு. பூ - பூமியை. இகல் - மாறுபடும்; இகலும் வியாதியுமெனலும் ஆம்; இகல் - பகை. தணப்பர் - நீங்குவர்.